இதழ் 213

# மண்

ஜேர்மனி / 2022
வைகாசி - ஆனி / May - June














இலங்கை அரசிற்கு எதிரான மக்கள் போராட்டங்கள்
சித்திரை - 2022








மண் சஞ்சிகையின் வாசகரும் லண்டனில் வசிப்பவருமான திரு ஜெகான் அவர்களின் நிதிப்பங்களிப்பில் அவரது தாயாரின் ஓராண்டு நினைவுதினத்திற்காக தாயகம் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பகுதியில் அமைந்துள்ள ''ஒளிரும் இல்லம்'' ஊடாக முதியோர் இல்லத்தில் வசிப்பவர்களுக்கு உணவு, சிற்றுண்டிகள் 22.03.2022 அன்று வழங்கப்பட்டது. அனுசரணை மண் சஞ்சிகை

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

பொருளாதார நெருக்கடிக்கு கலவரம், வன்முறை தீர்வாகாது. நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தற்போதைய சூழலில் இந்நெருக்கடியின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள அரசியல் நெருக்கடி கொதிநிலையை அடைந்துள்ளது. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தையும் பாதிப்புக்களையும் நாட்டின் அனைத்து மக்களும் எதிர்கொண்டுள்ளனர். இந்நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் நெருக்கடியும் தொடரவே செய்கின்றன.

இதேநேரம் இந்நெருக்கடி தீர்வு காணுமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் தொழிற்சங்க நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நடவடிக்கைகளில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளின் ஓரங்கமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை (09 ஆம் திகதி) இராஜினாமாச் செய்தார். அவரது இராஜினாமாவைத் தொடர்ந்து அமைச்சரவையும் கலைந்துள்ளது.

ஆன போதிலும் நாடு தற்போது முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கமொன்றை அமைத்து தீர்வு தேடும் நடவடிக்கையின் அடிப்படையில், கடந்த ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான அமைச்சரவை இராஜினாமாச் செய்தது. ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த யோசனையை நிராகரித்தன. அதனால் நாட்டின் அரசியல் நிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய அமைச்சரவையொன்றை கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதி நியமித்தார். ஆனால் பொருளாதார நெருக்கடியோ அரசியல் நெருக்கடியோ தணிந்ததாக இல்லை.

இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமா செய்ததோடு அமைச்சரவையும் கலைந்துள்ளது. அதன் காரணத்தினால் நாட்டின் அரசியல் கொதிநிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு தேடும் நோக்கில் சர்வமதத் தலைவர்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார். இதேவேளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தை விரைவாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது இந்நாட்டு குடிமக்களின் பொறுப்பாகும். இருந்த போதிலும் (09ஆம் திகதி) பிரதமருக்கு ஆதரவு தெரிவிக்க கொழும்பு வந்த சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் அலரி மாளிகைக்கு முன்பாகவும்,

காலிமுகத்திடலிலும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது வன்முறையுடன் கூடிய கலவரத்தில் ஈடுபட்டதால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலவரங்களும் வன்முறைகளும் பரவ வித்திட்டுள்ளன.

இதன் விளைவாக 300 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுள்ளனர். அத்தோடு சிறீ.பொ.பெ. கட்சியின் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள உட்பட 09 பேர் உயிரிழந்துள்ளனர். உட்பட 88 வாகனங்கள் எரிக்கப்பட்டன. 65 வீடுகள் எரிக்கப்பட்டன.இவை மாத்திரமல்லாமல் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லம், அவரது மெதமுலன பூர்வீக இல்லம், டி.ஏ. ராஜபக்ஷ அருங்காட்சியகம், சில முன்னாள் அமைச்சர்களதும், சிறீ.ல.பொ.பெரமுன கட்சியைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகளதும், உள்ளூராட்சி மன்றங்களது முக்கியஸ்தர்களதும் வீடுகள், சொத்துக்கள் தேசப்படுத்தப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. அத்தோடு பிரதமருக்கு ஆதரவு தெரிவிக்க அலரி மாளிகைக்கு அழைத்து வரப்பட்டவர்கள் பயணம் செய்த 40 பஸ் வண்டிகள் உள்ளிட்ட வாகனங்கள் பலவும் உள்ளூராட்சி மன்றங்களது சொத்துகளும் சேதப்படுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இதே வேளை நாட்டை நெருக்கடிகளிலிருந்து மீட்க, சீர்செய்து, பொருளாதார, அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வுகான எதிர்கட்சிகளுக்கு அழைப்புவிட, சஜித் பிரேமதாசாவும் ஏனைய எதிர்தரப்பினரும் கோத்தபாயா பதவி விலகவேணும் என விடப்பபடியாக நின்றபடியால் அதை ஏற்றுக்கொள்ள சட்டம் இடம்கொடுக்காதபடியால் ஜனாதிபதி புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்காவை 12.5.2022 அன்று புதிய பிரதமராக பதவி நியமனம் செய்து நாட்டின் நிலையை ஓரளவு அமைதிப்படுத்தியிருக்கிறார்.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இவ்வாறான சூழலில் இவ்விதமான அழிவுகளும் சேதங்களும் எவ்விதத்திலும் நியாயப்படுத்தக்கூடியவை அல்ல. இவ்விதமான அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் வித்திட்ட மூலகர்த்தாக்கள் உள்ளிட்ட சட்டத்தைக் கையில் எடுத்து கலவரத்தில் ஈடுபட்ட அனைவரும் சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும். அதுவே அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அதேநேரம் இவ்விதமான அழிவுகளும் சேதங்களும் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையாது. அவை நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும். நாட்டின் நற்பெயருக்கும் களங்கத்தையும் ஏற்படுத்தும்.ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி அனைத்து பிரஜைகளும் பொறுப்புடனும் முன்னவதானதுடனும் செயற்பட வேண்டும். அதுவே நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுத்தரக்கூடியதாக அமையும். இன்றைய அவரசத் தேவையும் அதுதான்.

-ஆசிரியர் - 13.05.2022

## சிறுவர் வட்டம்...




### ஆத்திசூடி....

### ஓதுவது ஒழியேல்..

பள்ளிக்கூடத்தில் பல நூல்களைப் படிக்கிறீர்கள். பரீட்சை எழுதுகிறீர்கள். பரீட்சையில் தேறி வெற்றி பெறுகிறீர்கள். பள்ளிப் படிப்பு முடிந்ததும் இனிப் படிக்கும் தொல்லை தீர்ந்தது என்று நிம்மதியாக ஊர் சுற்ற ஆரம்பிக்கிறீர்கள் இது தவறு. கூடாது. பாட நூல்களைத் தவிர வேறு பல நல்ல நூல்களைப் படிக்க வேண்டும என்கிற எண்ணம் உங்களில் பலருக்கு இல்லாமல் போய் விடுகின்றது.ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் ஏதேனும் நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு அளவு இல்லை. நாம் கற்கவேண்டிய நூல்கள் எத்தனையோ உண்டு. அவற்றை நாம் கற்பதற்கு நமது வாழ்நாள் போதாது. ஆகையால் அறிவுதரும் நூல்களை உங்களுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நீங்கள் படித்துக்கொண்டெ இருக்க வேண்டும். ஓதுவதை (படிப்பதை) ஒழியேல் (விட்டுவிடாதே)

### ஔவியம் பேசேல்

உலகத்தில் எல்லாரும் ஒரே மாதிரியாகவா இருக்கிறார்கள்.?.. ஒருவர் பணக்காரராய் இருப்பார் ஒருவர் எழையாய் இருப்பார். இன்னொருவர் அறிவிலியாக இருப்பார். மற்றவர் மிக அறிவாளியாகத் திகழ்கிறார். இது ஏன்?..பொருள் இல்லாதவனிடமும் அறிவில்லாதவனிடமும் முயற்சி இல்லை. ஆனால் முயற்சி இல்லாதவர்களோ செல்வம் உடையவரைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்கள். கல்வியறிவு உடையவரைக் கண்டு பழித்துக் கேலி பேசுகிறார்கள் இப்படிப் பொறாமை கொள்பவர்களால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. ஔவியம் என்றால் பொறாமை. மற்றவர்களிடம் பொறாமை கொண்டு பிறரிடம் அதைப்பற்றிப் பேசாதே என்கிறார் ஔவைப்பாட்டி.

# விஞ்ஞானியைப்பற்றி அறிவோம்...

## எதையும் தாங்கும் இதயம்..

சேர் ஐசாக் நியூட்டன் என்கின்ற விஞ்ஞானி ஒரு தடவை தான் செய்த முக்கியமான சோதனைகள் பற்றிய குறிப்புக்களை நிறையவே எழுதி மேசையின்மீது வைத்திருந்தார். மிருகங்களை வளர்ப்பதில் அவருக்கு பிரியம் அதிகம். மிகப்பிரியமாக ஒரு நாயை வளர்த்து வந்தார். அவர் குறிப்புக்களை எழுதி வைத்திருந்த அறையில் அந்த நாய் படுத்திருந்தது.

குறிப்புகளுக்கு அண்மையாக ஒரு மெழுகுவர்த்தி எரிந்துகொண்டிருந்தது . நியூட்டன் வெளியில் சென்றிருந்த சமயம் நாய் மேசையின் மீது ஏறி மெழுகுவர்த்தியைத் தட்டிவிட, குறிப்புகள் எழுதி வைத்திருந்த அவரது கடதாசிகள் தீப்பிடித்து எரியத் தொடங்கிவிட்டன. நியூட்டன் திரும்பி வந்து பார்த்தபோது பல ஆண்டுகள் உழைத்து அவர்செய்த சோதனைகள் பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புகள் அனைத்தும் சாம்பல் குவியலாக இருப்பதைக் கண்டார். தனக்குப் பிரியமான நாயின் செயல் எவ்வளவு பெரிய விபரீதத்தில் முடிந்துவிட்டது என்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

ஒருகணம்தான் இந்த அதிர்ச்சி பின்னர் நாயை அன்புடன் பார்த்து "நீ என்ன செய்திருக்கிறாய் என்பதை நீ அறியமாட்டாய்" எனக்கூறி மறுபடியும் தன்னுடைய பரிசோதனைகளில் ஈடுபடலானார். நியூட்டனுக்கு எற்பட்ட இழப்பு மிகப்பெரியது ஆயினும் தன்னுடைய கவனக்குறைவால்தான் அது நிகழ்ந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்ட நியூட்டன் சிறிதும் தயக்கமின்றி அமைதியாகத் தன்னுடைய சோதனைகளில் தொடர்ந்தும் ஈடுபட ஆரம்பித்தார்.

**திருமதி ஜெயா நடேசன்.**





# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



## தெனாலி ராமனும் வழிப்பறி திருடனும்

தெனாலி ராமன் ஒரு நாள் மிக நீண்ட தூரம் பயணம் புறப்பட்டான். அவன் போற வழியில் ஒரு பெரிய காடு இருந்தது.அந்த காட்டில் நிறையவே திருடன்கள் இருக்கிறதாகவும் அந்த வழியாப் போற எல்லாரையும் அடிச்சு அவங்க பணத்தைக் கொள்ளையடிக்கிறதாவும் எல்லாரும் சொன்னாங்கள்.எதைப்பற்றியும் கவலைப்படாத தெனாலிராமன் அந்தக் காட்டு வழியில் நடக்க ஆரம்பிச்சான்

அப்பத்தான் புதுசா ஒரு பயணி அவர் கிட்ட வந்து பயணியே நானும் உங்களோடு கூடவராலாமா எனக்கு திருடன்கள் என்றால் பயம் அதனால உங்களோடு கூட நடந்து வருகிறேன் என்று. இதக்கேட்ட தெனாலிராமனுக்கு அந்தப் பயணியப்பார்த்ததும் ஒரு சின்ன சந்தேகம் உண்டாச்சு. இருந்தாலும் தன்னோட நடந்துவர அந்தப் பயணியை சம்மதிச்சான். உண்மையாவே அந்தப் பயணிதான் திருடன் . காட்டுவழியா நடந்துபோற பயணிகள் கூடவே வந்து அவங்களைத் தாங்கும் போது அவங்கள் வச்சிருக்கிற பொருட்களைத் திருடுறது தான் அவனோட வேலை. இரண்டு பேரும் நடந்து போகும்பொழுது ஒரு சத்திரம் வந்துச்சு அங்க தூ ங்கிட்டு காலையில் நடக்கலாம் என்று இரண்டுபேரும் சொன்னார்கள். அந்த பயணி நடுராத்திரியில் எழுந்த திருடன் தெனாலிராமனோட பையத் தேடினான்

ஆனா அதுக்குள்ள பணம் ஏதும் இல்லை. ஆனா இந்த பைல பணம் இருக்கிறதைப் பார்த்தோமே எப்படி காணாமல் போச்சுது திருடனுக்கு ஒரே குழப்பம் உடனே மெதுவா வந்து தெனாலிராமனோடு படுத்திட்டான். அமைதியான காலையில் எழுந்து இரண்டு பேரும் நடக்க ஆரம்பித்தார்கள். ஒரு பெரிய மண்டபத்தில் இரண்டு பேரும் தங்குறதுக்கு முடிவு பண்ணி படுத்துத் தூங் கினார்கள்.உடனே திருடன் எழுந்து மீண்டும் தெனாலிராமன் பையத் தேடினான்.

இப்பவும் அதுல பணம் இல்ல என்னடா இது அதிசயம் இன்றைக்குத் தேனீர் குடிக்கும் போது கூட பணம் இருக்குறதைப் பாத்தோமே அப்படி எங்கதான் பணம் போச்சுதென்று கவலைப்பட்டான் மறுநாள் காலையில் இரண்டுபேரும் நடக்க ஆரம்பிச்ச பொழுது இளநீரக் கடை வந்தது. உடனே தெனாலிராமன் தன்னோட பையில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான். இதைப்பார்த்த அந்தத் திருடன் தான் தான் திருடன்கிறதை ஒத்துக்கொண்டான்.

எனக்கு முன்னாடியே தெரியுமென்று சொல்லிச் சிரிச்ச தெனாலிராமன் அந்தத் திருடன் அப்படி எங்கதான் பணத்த ஒளிச்சு வச்சிருக்கிறான் என்று கேட்டான். அதுக்கு தெனாலிராமன் உன்னோட பைலதான் என்று சொன்னான். என்பையிலையா?.. என்று குழப்பத்தோட கேட்ட திருடனிடம் நீ நித்திரைக்குப் போன பின்பு அப்புறமா பணத்த எடுத்து உன்பையில வச்சிடுவேன் நீ என்பையை தேடிப் பார்த்திட்டு எதுவும் இல்லை என்று தூங்கினதுக்குப் பின்பு என்பைல இருக்கிற பணத்தை எடுத்து என்பையல வச்சிடுவேன் என்று சொன்னான். இதைக்கேட்ட திருடன் தெனாலிராமன் தன்னோட புத்திசாலித்தனத்தால் தன்னை ஏமாத்திட்டதாக நினைச்சு வருத்தப்பட்டு அங்க இருந்தே ஓடிட்டான்

-----------------------------------------------------

## சிரி!..சிரி!...சிரிப்பு!..

ஒருவர்:- எப்ப பார்த்தாலும் மரக்கிளையில் ஏறி இருக்கிறாரே யார் இவர்?..
மற்றவர்:- இவர்தான் எங்கள் கிளைச் செயலாளர்?...

குமார்:- அவர் வாரியத்தின் தலைவரா?..
பகீர்:- ஆமாம்.. பல பேரின் காலை வாரிய தலைவர்?..

கந்தசாமி:- உங்கமகன் சிகரட் பிடிக்கிறானாம் உமக்குத் தெரியுமா?..
சிவசாமி:- எனக்குச் சிகரட் பிடிக்கத் தெரியாது?..



ஒருவர்:- உங்க கடிகாரம் ஓடாதா?..
மற்றவர்:- நான்தானே கையில் கட்டியிருக்கிறேன்?..

ஆசிரியர்:- திருக்குறளை எழுதியவர் யார்?..
மாணவன்-1:-நான் இல்லை சேர்.
மாணவன்-2:-உவன் குளப்படி சேர் உவன்தான் எழுதியிருப்பான்..
மாணவன்-3:-உவன் றோட் எல்லாம் எழுதுகிறவன் உவன்தான் எழுதியவன்..
ஆசிரியர்:- ?????????

# பாப்பாப் பாட்டு..

யோ-புரட்சி

வேவு பிடித்துவிடு பாப்பா-அதில்
வேப்பிலை தவிர்க்காதே பாப்பா
கூடி நில்லாதே பாப்பா
கொரோனா அண்டாது பாப்பா..

இருமல் தும்மல்சளி இருந்தால்
அதை
இல்லாமல் செய்துவிடு பாப்பா
வீணான சந்தேகம்அயலாரால்உனக்கு
விசாரணை வந்துவிடும் பாப்பா..

சுடுநீர் தினமும் அருந்தல் உன்
சுகத்திற்கு நல்லதடி பாபப்பா
கொடுங்கிருமி கொட்டிடமுன்னேஉனை
சுத்திகரித்துக் கொள்ளு பாப்பா..

வெளியே போய்வந்த உடனே உன்
வீட்டினுள் நுழையாதே பாப்பா
துளியான தொற்று நீக்கியால்
நன்றாகக் கழுவிக்கொள் பாப்பா..

பயணத்து வேளை முகக்கவசம்
பாதுகாப்பு மிக்கதடி பாப்பா
பரபரப்புப்
பகுதிகளைக்கண்டால்அங்கு
பறந்து போக விரும்பாதே பாப்பா...

தனிமைப்படுத்தல்உனக்கு
வந்திட்டால்
நீ தளர்ந்து கொள்ளாதே பாப்பா
ஒழித்துவிடலாம் கொரோனாவைஏற்ற
உணவு எடுத்துவிடு பாப்பா..




அறிவுரையான மூலிகைப்பாவனை
உன் ஆரோக்கியத்திற்கு நல்லதடி
பாப்பா...பரிந்துரையாத
மருந்துகளை சுயமாய் -நீ
பாவிப்பதைத் தவிர்த்துவிடு பாப்பா.

ஊரடங்கு வேளைகளில்வெளியேநீ
உலவிடப் போகாதே பாப்பா
பேர்கெட்டுப் போகுமடி பாப்பாஅது
பெருஞ்சிக்கல் தந்துவிடும் பாப்பா.

வீட்டிலிருக்கும்நாட்களிலே பாப்பா
அம்மா அப்பாவுடன் காணி
விவசாயம் தொடங்கிவிடு பாப்பா
கூடவாய் நிவாரணம் கிடைத்தால்
கொடுத்து மகிழ்வுகொள் பாப்பா..

சும்மா இருக்கையில் நோய்உனை
சூழ்ந்திடவே பார்க்குமடி பாப்பா
சோம்பலைத் துரத்தி வைத்து-நல்
சுறு சுறப்பு வேலை செய் பாப்பா..

கடவுள் கருணையடி பாப்பா
கனமான மருந்தடி பாப்பா
துயரம் விலகிடும் பாப்பா - இறை
துதியை நம்பிவிடு பாப்பா..

## பரீட்சையும் புள்ளியும்!..

-பரீட்சையில் குறைந்த புள்ளி எடுக்கும் மாணவர்களில் ஒரு கலைஞன் இருப்பான். அவனுக்கு கணிதம் தேவைப்படாது.
-அங்கே ஒரு தொழிலதிபர் இருப்பான். அவனுக்கு வரலாறு / இலக்கியம் முக்கியமில்லை.
-ஒரு இசைஞானி இருப்பான். அவனுக்கு இரசாயனவியல் அவசியமில்லை.
-ஒரு விளையாட்டு வீரனிருப்பான். அவனுக்கு உடல் நலனே முக்கியம். பௌதீகவியல் புள்ளி முக்கியமில்லை.
-பரீட்சையில் அதிக புள்ளி எடுத்தால் சிறந்த பிள்ளை. எடுக்காவிட்டால் தரம் குறைந்த மாணவன் என்று தயவு செய்து அவர்களது தன் நம்பிக்கையை ஒருபோதும் பறித்து விடாதீர்கள்.
-அவர்களுக்கு சொல்லுங்கள் இது வெறும் ஒரு பரீட்சை மட்டுமே.
-நீ வாழ்கையில் வெற்றி கொள்ள இதை விட பெரிய சவால்கள் நிறைய உள்ளன.
-உன் மீதுள்ள என் அன்பு நீ பரீட்சையில் எடுக்கும் மதிப்பெண்ணை வைத்து தீர்மானிப்பதில்லை என்றும் நீ என் பிள்ளை என் உயிர். இப்படி சொல்லி பாருங்கள். பரீட்சையில் வெல்லாத உங்கள் பிள்ளை ஒரு நாள் உலகை வெல்வான்.
-வெறுமனே ஒரு பரீட்சை, அதன் புள்ளி உங்கள் பிள்ளையின் கனவை, திறமைகளை அழித்து விடக்கூடாது.
-மருத்துவர்களும், பொறியியலாளர்களும் மட்டுமே உலகில் சிறந்தவர்கள், மகிழ்ச்சியாய் இருப்பவர்கள் என தயவு செய்து நினைக்காதீர்கள்.

---

## பணத்தால்!..

சிலர் அன்பை இழக்கின்றனர்
சிலர் பண்பை இழக்கின்றனர்
சிலர் நட்பை இழக்கின்றனர்
சிலர் உறவை இழக்கின்றனர்
சிலர் கற்பை இழக்கின்றனர்
சிலர் கண்ணியத்தை இழக்கின்றனர்
சிலர் மார்க்கத்தை இழக்கின்றனர்
சிலர் வாலிபத்தை இழக்கின்றனர்
சிலர் மனிதநேயத்தை இழக்கின்றனர்
சிலர் வாழ்க்கையை இழக்கின்றனர்

## அம்மா!..

அன்பும் அறிவும் நீ
ஆருயிர் ஆழ்வபவளும் நீ
இணையில்லாதவளும் நீ
ஈடில்லாத தெய்வம் நீ
உறவுக்கு உரியவள் நீ
ஊக்குவிப்பவளும் நீ
எனக்காய் உருகுபவளும் நீ
ஏற்றம் பெற வைத்தவளும் நீ
ஒற்றுமையைக் காட்டியவள் நீ
ஓங்காரமானவளும் நீ
ஐயந்திரிபுற வைத்தவளும் நீ

# நல்நெறி பற்றி......

-வி நந்தகுமார்-

## உடல் உள ஆரோக்கியம்..

அருவருப்பான வார்த்தைகள் அழகைக் குறைக்கும்.
ஆரோக்கியம் ஆனந்த வாழ்வு தரும்.
இரக்கம் உள்ளவன் சிறக்க வாழ்வான்.
ஈயாதார் வாழ்வு இன்பம் பெறாது.
உள்ளம் உறுத்தப்பட்டால் உடலும் உருகும்.
ஊக்கமான உறுதி இறுதிவரை இன்பம்.
எது நேர்ந்தாலும், நிலைதடுமாறாமல் நட.
ஏற்றம் வரும்போது எதிர்பாராத மாற்றமும் வரும்.
ஐம்பொறிகளை அடக்கித்தன்னுள் ஆத்திரத்தைக் குறை.
ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும்.
ஓர்மம் ஒப்பற்ற சாதனைகளை உருவாக்கும்.
அளவுடன் உண்பவன் அறிவாளி.
அதிகம் உண்பவன் அதிகம் சுமக்கிறான்.
செமித்தபின் செலுத்து, செமிபாடு சுலபமாகும்.
கோபம், கொடிய முகத்தைக் காட்டும்.
சினந்து பேசினால், சிரமங்கள் அதிகமாகும்.
கசப்பான வார்த்தைகள் கலகத்தைக் கூட்டும்.
பகைதீர ஒரேவழி, நட்பு ஒன்றுதான்.
மனவலி உடல்வலியைவிட வேதனையானது.
தவறு செய்தவர்கள், தவிப்புடன் வாழ்கிறார்கள்.
மதுபோதைகள் மனிதனை மாசு படுத்துகிறது.
குற்றமில்லாத மனம் குதூகலம் பெறும்.
சிரிக்கும்போது சிலநோய்கள் சிதறிப்போகின்றன.
மாசற்ற மனதில் மார்க்கங்கள் மகிமை பெறும்.
நல்லவற்றை நாடு அல்லவற்றை அகற்று.
உன்னதமான பணிகள் உன்னை உயர்த்தும்.
நீதியில் நிற்பவன் நிமிர்ந்து நடக்கிறான்.
உயர்வும் தாழ்வும், உன்னாலே உண்டாகிறது.
வழிமுறைகள் வாழ்க்கையை வழுக்காமல் வழிநடத்தும்.
சந்தோஷமும் துக்கமும் உன் சாவியில் உள்ளது.
போதனைகள் மறந்தால், வேதனைகள் மிஞ்சும்.
முழு முயற்சி எடுத்துத் தன்னும் மனிதனாக வாழ்.
நடைமுறை பிழைத்தால், தலைமுறை பிழைக்கும்.

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 31

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 7 | | 4 | 2 | 5 |
| 2 | 6 | | | 4 | | | 9 | 1 |
| | | 5 | 9 | | 1 | 3 | | |
| | 4 | | | | | 5 | | 7 |
| | | 2 | 6 | | | 1 | | |
| 7 | | | | | 8 | | | |
| 6 | 2 | | | 8 | 4 | | | |
| | 3 | 8 | | 6 | | 7 | | 4 |
| 9 | | | | 1 | 3 | 2 | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 124
## (வைகாசி- ஆனி - 2022)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 பாடசாலைக்கு இது விட்டால் மாணவர்களுக்குக் கொண்டாட்டம்.

10-12 நாம் வாழும் பூமி இதனாலும் சூழப்பட்டுள்ளது.

வ-இ

05-06 மனிதன் இதை அழிப்பதாலும் மழை குறைவடைகின்றது.

கீ-மே

15-07 நம் வீடுகளில் பாவனைப்பொருள்.

16-04 இறந்தபின் மனிதர்களை அடக்கம் செய்யும் இடங்களில் ஒன்று.

மே-கீ

01-13 சிலமாணவர்கள் இது சொல்வதில் வல்லவர்கள்.

06-14 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

# தங்கத்தாத்தா என்று போற்றப்பட்ட நாவாலியூர் சோமசுந்தரபுலவர்....

-கெங்கா ஸ்ரான்லி-



25.5.1818 07.10.1953

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலி என்ற ஊரில் 1878ம்வருடம் பிறந்தார். தந்தையிடமும் நவாலியூர் அருணாசல உபாத்தியாரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்றார். உறவினர் ராமலிங்க உபாத்தியாரிடமும் மானிப்பாய் மாரிமுத்து விடமும் ஆங்கிலம் கற்றார்.

சிறு வயதிலே பேச்சாற்றலும் ,விவாதாத் திறமையும் ஒருங்கே பெற்றிருந்தார். ஏராளமான பாடல்கள் இயற்றினார்.அட்டகிரி,முருகன் பதிகம், அட்டகிரி முருகன் . திரு ஊஞ்சல்.சாவித்திரி கதை,பசுவின் கதை,உள்ளிட்ட பல நூல்களை இவர் இளவயதில் எழுதினார்.

ஆசிரியற் பணியில் ஆர்வம்கொண்டவர்.வட்டுக்கோட்டையில் இருந்த சின்னத்தம்பி ஆசிரியருடன் இணைந்து ஆங்கில பாடசாலை தொடங்கினார். அங்கு 40 ஆண்டுகள் ஆசிரியர் பணி செய்தார்.தமிழ் ,ஆங்கிலம்,இதிகாசம் கற்பித்தார் "சைவ வாலிபர் சங்கம்" என்ற அமைப்பைத் தொடங்கி சமயப் பாடங்களைக் கற்பித்தார்.

ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் கூட மாணவர்களுக்குச் சைவ சிந்தாந்தம் உள்ளிட்ட இலக்கிய வகுப்புகளை நடத்தி தமிழ்த் தொண்டு ஆற்றினார். கலித்தொகை,திருக்குறள்,திருக்கோவையார்,சிவஞானபோதம், கந்த புராணச் செய்யுள்களைத் தெளிவாகவும்,அழகாகவும், நகைச்சுவையாகக் கூறி மாணவருக்கு விளங்கவைப்பார்.


. பதிகம்,ஊஞ்சல்,கலம்பகம்,நான்மணிமாலை,அட்டகம்,அந்தாதி, சிலேடைவெண்பா,எனப் பல வடிவில் பாடல்கள் பாடியுள்ளார்.இதில் 400 க்கும் மேற்பட்ட அடிகள் கொண்ட கலிவெண்பா வகையில் அமைந்த தாலவிலாசம் மிகவும் பிரிசித்தம்.

யாப்பிலக்கணம் கற்பதற்கு முன்பே பல தனிப்பாடல்களை பாடியுள்ளார். இதனால் இவரை "வரகவி" என்று அழைத்தனர்."உயிரிளங்குமரன்" என்ற நாடகமும் எழுதியுள்ளார்.இந்த நாடகம் அட்டகிரி கந்தசுவாமி கோவிலில் அரங்கேற்றப்பட்டது."சைவபாலிய சம்போதினி" என்ற சைவ சிந்தாந்த மாத இதழை 1910 ஆம் ஆண்டில் தொடங்கி 5 ஆண்டுகள் நடத்தினார். 1927ஆம் ஆண்டு ஈழத்து தென்னிந்தியத் தமிழ் அறிஞர்கள் இவருக்குப் பொற்கிழியும்,புலவர் பட்டமும் வழங்கினர்.

ஆங்கில ஆட்சியை எதிர்த்து தேசிய விழிப்புணர்வை தூ ண்டும் பாடல்களை எழுதினார்.கந்தவனக்கடவை,நான்மணிமாலை,தந்தையார் பதிற்றுப் பத்து,நல்லையந்தாதி,நல்ல முருகன்,திருப்புகழ் கதிர்மலை வேலவர் பதிகம் ஆகியவை குறிப்பிடத்தக்க படைப்புகள்.


குழந்தைகளுக்கானஆடிப்பிறப்பு,கத்தரிவெருளி,புளுக்கொடியல்,ப வளக்கொடி,இலவு காத்த கிளி ,உள்ளிட்ட ஏராளமான பாடல்கள் இயற்றி சிறுவர் இலக்கிய முன்னோடி என்ற பெருமை பெற்றார். தாடி அறுந்த வேடன்.எலியும் சேவலும் என்ற கதைப்பாடல்கள் சிறுவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பவை.

தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றினார். ஏறக்குறைய 15 ஆயிரம் பாடல்களை எழுதியுள்ளார்.சிறுவர்களுக்காக இவர் பாடிய பாடல்கள்"சிறுவர் செந்தமிழ்" என்ற பெயரில் 1955 ஆம் ஆண்டு நூ லாக வெளிவந்தது.சிலேடை வெண்பா இயற்றுவது இவரது தனிச்சிறப்பு. தமிழருக்காக 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றிய "தங்கத்தாத்தா" நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தனது 75 ஆவது வயதில் 1953 ஆம் ஆண்டு மறைந்தார்.அவர் மறைந்தாலும் அவரது பாடல் இன்றும் எல்லோர் மனதிலும் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடல் நிலைத்து நிற்பது. அவரது நினைவை மெருகு பட வைக்கிறது.இப்படி ஒரு தமிழார்வலர் எம் நாட்டில் பிறந்து வாழ்ந்தார் என்பதில் பெருமை கொள்ளுவோம்!..



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | : | 12 | + | B | = | 17 |
| - | | : | | - | | - |
| 17 | - | C | x | 20 | = | D |
| + | | + | | + | | - |
| E | + | 19 | - | F | = | 36 |
| = | | = | | = | | = |
| 29 | - | G | + | 0 | = | H |

A= B= C= D=
E= F= G= H=



| | | | | |
|---|---|---|---|---|
| 4 | | | | 20 |
| 18 | | 25 | 5 | |
| | | 17 | | 8 |
| 15 | | | 19 | 2 |
| 7 | | 3 | | |

**படம் - 1**

A, B, C, D, E, F, G, H

என 8 இடங்களிலும் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடிக்க வேண்டும்..

**படம் - 2**

வெற்றிடமாகவுள்ள பெட்டிகளில் 2 தொடக்கம் 26 வரையுள்ள எண்களை எழுதலாம். ஆனால் ஒருமுறை எழுதிய எண் வரக்கூடாது. எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் மொத்த கூட்டுத் தொகை 70 வருவேண்டும்..

(பக்கங்களைப் புரட்டினால் விடை கிடைக்கும்)

## பழமொழிகளும் அர்த்தமும்...

1-ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்..
(சிந்தனைக்குக் கோபம் இடையூறாக அமையும்)

2-குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும்..
(மனட்சாட்சி உறுத்திக்கொண்டிருக்கும்)

3-சாண் ஏற முழம் சறுக்கும்..
(உயர்ச்சியை மிஞ்சிய தளர்ச்சி)

4-துஷ்டரைக் கண்டால் தூர விலகு..
(தீமையைத் தெரிந்துகொண்டதும் விலகுதல் நன்று)

5-நிறைகுடம் தளம்பாது
(கற்றறிந்தவர் (திறமையுள்ளவர்) அடக்கமாய் இருப்பார்)

## ஒத்த பொருட் சொற்கள்...

1-அரசன் - மன்னன்
2-அகம் - உள்ளம்
3-அக்கிரமம் - அநியாயம்
4-அகங்கை - உள்ளங்கை
5-அங்காடி - சந்தை
6-அச்சம் - பயம்
7-அடவி - காடு
8-அண்ணம் - மேல்வாய்
9-அண்மை - சமீபம்
10-அணங்கு - பெண்
11-அந்தம் - முடிவு
12-அந்திநேரம் - மாலைநேரம்
13-அபயம் - அடைக்கலம்
14-அகங்காரம் - ஆணவம்
15-அக்கினி - நெருப்பு
16-அகம்பாவம் - தற்பெருமை
17-அசுவம் - குதிரை
18-அணிகலன் - ஆபரணம்
19-அடர்த்தி - செறிவு
20-அச்சாணி - கடையாணி

## எதிர்ச்பொற்கள்....

1-அடி - முடி
2-அச்சம் - துணிவு
3-அனுகூலம் - பிரதிகூலம்
4-அகம் - புறம்
5-அகங்கை - புறங்கை
6-அசல் - நகல்
7-அண்மை - சேய்மை
8-அந்தம் - ஆதி
9-அமைதி - ஆரவாரம்
10-அழுகை - சிரிப்பு
11-ஆடவர் - பெண்டிர்
12-ஆத்திகன் - நாத்திகன்
13-ஆசாரம் - அநாசாரம்
14-ஆதாயம் - நட்டம்
15-ஆதரவு - அநாதரவு
16-ஆண்டான் - அடிமை
17-ஆரம்பம் - முடிவு
18-ஆரோகணம்-அவரோகணம்
19-இரகசியம் - பரபசியம்
20-இன்சொல் - வன்சொல்

## இரட்டைக்கிழவி வாக்கியங்கள்...

1-கிறு கிறு என்று தலை சுற்றியது.
2-குபு குபு என குருதி கொட்டியது.
3-குற்றமுள்ள நெஞ்சு குறு குறுத்தது.
4-சிலு சிலு என்று காற்று வீசியது.
5-சுடச் சுடத்தோசை தந்தான்.
6-தட தட என கதவைத் தட்டினான்.
7-திபு திபு என உள்ளே நுழைந்தனர்.
8-திரு திரு என விழித்தான்.
9-சட்டை தொள தொள என இருந்தது.
10-நற நற எனப்பல்லைக் கடித்தான்.

## பலபொருள்தரும்ஒருசொல்..

1-பதி - வீடு, அரசன், கணவன்
2-நகை -சிரிப்பு, ஆபரணம்
3-கரி - விறகுக்கரி, யானை
4-மதி - சந்திரன், புத்தி, மதித்தல்
5-ஐயம் - சந்தோசம், பிச்சை
6-மெய் - உண்மை, உடல்
7-பணி - தொண்டு, பாம்பு, கட்டளை
8-கோ - அரசன், பசு
9-கலை - ஆண்மான், வித்தை
10-இழை- ஆபரணம், நூல்பின்னுதல்

## எதனால் எது கெடும்..

## ஔவைப்பாட்டி சொன்னது..

1-செல்வம் போனால் சிறப்புக் கெடும்
2-சொல் பிறழ்ந்தால் பெயரும் கெடும்
3-தூண்டத் திரியும் கெடும்
4-தூற்றிப்பேசும் உரையும் கெடும்
5-காய்க்காத மரமும் கெடும்
6-காடு அழிந்தால் மழையும் கெடும்
7-குறி பிறழ்ந்தால் வேட்டை கெடும்
8-குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்
9-வசிக்காத வீடும் கெடும்
10-வறுமை வந்தால் எல்லாம் கெடும்

## அன்பு

அன்பு ஒரு திரவம்
கொதிப்பவர்களிடம்
ஆவியாகிவிடுகின்றது
குளிர்ந்தவர்களிடம்
உறைந்துவிடுகின்றது!..
அன்பு ஒருபோதும்
பொய்யாகாது
அதைக்கையாளும்
மனிதர்களால்தான்
பொய்யாகிப்போகின்றது!..

## பணத்திற்கு இவ்வளவு பெயரா?..

1-அர்ச்சகருக்குக் கொடுத்தால் - தட்சணை
2-கோவில் உண்டியலில் போட்டால் - காணிக்கை
3-பிச்சைக்காரருக்குக் கொடுத்தால் - பிச்சை
4-கல்விக்கூடங்களில் கொடுத்தால் - கட்டணம்
5-திருமணத்திற்காகக் கொடுத்தால் - வரதட்சணை
6-திருமண விலக்கில் கொடுத்தால் - ஜீவனாம்சம்
7-விபத்துக்களில் இறந்தால் கொடுத்தால் - நஷ்டஈடு
8-ஏழைகளுக்குக் கொடுத்தால் - தர்மம்
9-திருமண வீடுகளில் பரிசாகக் கொடுத்தால் - மொய்
10-திருப்பித்தரக் கொடுத்தால் - கடன்
11-இலவசமாகக் கொடுத்தால் - அன்பளிப்பு
12-விரும்பிக் கொடுத்தால் - நன்கொடை
13-நீதி மன்றில் செலுத்தினால் - அபதாரம்
14-அரசுக்குச் செலுத்தினால் - வரி
15-வேலைக்கு மாதாந்தம் கிடைப்பது - சம்பளம்
16-பணி ஓய்வு பெற்றால் கிடைப்பது - ஓய்வூதியம்
17-சட்டத்திற்கு விரோதமாகக் கொடுப்பது - லஞ்சம்
18-தொழில் தொடங்கும்போது கொடுப்பது - முதலீடு
19-ஹொட்டலில் அன்பளிப்பாகக் கொடுப்பது - டிப்ஸ்
20-வேண்டியதை திருப்பிக்கொடுக்க மேலதிகமாகக் கொடுப்பது - வட்டி

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## தாயகம்..

கடற்கரை ஓரத்தில் படகைப் பார்த்து நண்டு கேட்டது.. வண்ண..வண்ண மீன்களை எல்லாம் பிடித்துக்கொண்டு போனார்களே எதற்கு?. படகு அசைவற்றிருந்தது. பின்பு அது சொன்னது..அந்த மீன்களெல்லாம் சின்னஞ்சிறு கண்ணாடித் தொட்டியில் அடைத்து வைத்திருக்கிறார்களாம்.. அப்புறம்?.. படகு சொன்னது...

**" எட்டி எட்டி அலையைத் தேடுகிறதாம் தொட்டியிலே கடல் மீன் "**

## பார்வை..

தரிசு நிலம்..குப்பைகளும் கூழாங்கற்களும் குவிந்து கிடந்தன. "உதவாத குப்பைகள் - கூழாங்கற்கள்" என்று உலாத்தலுக்கு வந்த நாய் கண்களை மூடி உரக்கக் குரைத்தது. படுத்துக் கிடந்த மாட்டுக்கு இது பிடிக்கவில்லை. "குப்பைதானே பெறுமதியான எருவாகின்றது - கூழாங்கல்லைத்தானே தெருவாகப் போடுகிறார்கள்" என்றது மாடு. "நன்றாகப்பார்...எதிலும் ஏதோ ஒன்று இருக்கிறது...மாடு சொன்னது..

**" குப்பையை எருவாய்ப் பார் கூழாங்கல்லைத் தெருவாய்ப்பார் "**

## மதிப்பு..

"வாழ்ந்தால் குயிலைப்போல வாழவேண்டும்" என்றது பட்டாம் பூச்சி. இன்னொரு பட்டாம் பூச்சி கேட்டது. ஏன்?.. "அதோ பார்.... மா மரத்தில் பாடுகிறது குயில். மா மரத்துக்காகத்தான் அது பாடுகிறது. பின்பு மாங்கனியைச் சாப்பிடுகிறது... பறக்கிறது. "புரியவில்லையே.. "யாருக்கும் கடமைப்படக்கூடாது கொடுத்துப் பெறு தங்கி வாழாதே" "ஓ இப்பொழுது புரிகிறது" என்றது இரண்டாவது பட்டாம் பூச்சி. தனக்குள்ளேயே அது சொல்லிக் கொண்டது.

**" மரத்துக்கு ஒரு பாட்டு குயிலுக்கு ஒரு பழம் "**

# குறளும் பொருளும்...

## கண்ணோட்டம்:-

571. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

572. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

573. பண்ணென்னாம் பாடற் கியைபின்னேற் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண்.

574. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்.

575. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

576. மண்ணோ டியைந்த மரத்தினையர் கண்ணோ
டியைந்துகண் ணோட்ட தவர்.

577. கண்ணோட்ட மில்லவர் கண்ணியர் கண்ணுடையார்
கண்ணோட்ட மினஇமையு மில்.

578. கருமஞ் சிதையாமற் கண்ணோட்ட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

579. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

580. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

# குறளும் பொருளும்...

## தாட்சணியம்..

571. தாட்சணியம் எனப்படும் சிறந்த அழகிய குணம் இருப்பதால்தான் இவ்வுலகம் அழியாமல் இருக்கின்றது.

572. தாட்சணியத்தாலேயே உலகியல் நடைபெறுகின்றது. அது இல்லாதார் உயிருடன் இருப்பது நிலத்திற்குச் சுமையே தவிர வேறு பயன் இல்லை.

573. பாட்டுடன் பொருந்தாத இசையால் பயன் இல்லை. அது போல தாட்சணியம் இல்லாத கண்களாலும் எப்பயனும் இல்லை.

574. தக்க அளவிற்குத் தாட்சணியம் இல்லாத கண்கள் முகத்தில் இருப்பதைப் போலத் தோன்றுவதைத் தவிர வேறு பயன் இல்லை.

575. ஒருவனுடைய கண்ணுக்கு அணிகலம் தாட்சணியம் என்னும் குணமே. அது இல்லாத முகக்கண் புண்ணே ஆகும்.

576. தாட்சணியத்திற்கு உரிய கண் பெற்றவராய் இருந்தும் இரக்கம் இல்லாதவர் மண்ணோடு சேர்ந்த மரத்தினைப் போன்றவர்.

577. தாட்சணியம் இல்லாத மக்கள் கண் இல்லாதவரே. கண் பெற்ற மக்கள் இரக்கம் இல்லாது இருப்பதும் இல்லை.

578. தத்தம் கடமையாகிய தொழில் கெடாமல் தாட்சணிய குணம் உள்ளவராக இருக்கும் வல்லவருக்கு இவ்வுலகம் உரிமை உடையது.

579. தன்னைத் தண்டிக்கும் தகுதி உடையவரிடத்திலும் தாட்சணியம் காட்டி அவர் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்வதே சிறப்பு.

580. நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர்கள் நெருங்கிப் பழகியவர் தமக்கு நஞ்சு இடக்கண்டு அதை உண்டு அமைவார்கள்.

# குறுக்கெழுத்துப்போட்டி-187

(வைகாசி-ஆனி - 2022)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-05 இலங்கை மக்களின் வாழ்வு தினம்..தினம் இதுவாகிவிட்டது.

09-11 நாட்டு நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி சில வியாபாரிகள் இது அடித்து பணத்தைக் குவிக்கின்றனர்.

26-27 ஊட்டச்சத்து நிறைந்த பால்தரும் மிருகம்.

47-49 வெற்றிலையோடு இதையும் சேர்த்து உண்பார்கள்.

வ-இ

07-05 நம்நாட்டு வீடுகளில் ஒரு பாவனைப் பொருள்.

13-11 இதுவும் தன் வாயால் கெட்டு அழியும் என்று கூறுவார்கள் எது.

20-18 நம் நாட்டில் இவற்றின்விலை பல மடங்கு அதிகரித்துவிட்டது.மக்கள் அவதி.

41-39 நம் நாட்டில் தண்ணீர் அள்ளுவதற்கு இதையும் பாவிப்பார்கள். எதை.

47-43 அண்ணன்-தங்கையின் பாசத்தை காட்டிய சிவாஜியின் சினிமாப்படம்.

கீ.மே

26-05 சிலர் இதுகொண்டு வாழ்வதால் விரைவில் அழிந்து விடுகிறார்கள்.

32-18 வீடுகளில் காணப்படுவது இது எது.

41-27 துணிவகைகளில் ஒன்று. அது எதுவாக இருக்கும்.

45-17 காதல் மன்னர்களை இந்தப்பெயர் கொண்டும் அழைப்பார்கள்.

47-23 சிலர் இதனால் ரசிகர்களை மயக்கிவிடுவார்கள்.

மே-கீ

01-43 இவர்களும் இலங்கையை முன்னர் ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

07-49 வீடுகளிலும் கோவில்களிலும் காணப்படும் ஒரு பொருள்.

09-30 மக்கள் போராட்டத்தால் இலங்கையில் இந்த நகரம் சீர்குலைந்துவிட்டது.

30-37 ஆடு மாடுகள் விரும்பி உண்பதில் ஒரு உணவு.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)




**மாலி தீவில் கருப்பின சிறுவனை நிர்வாணமாக்கி, அவன் மீது பிரான்ஸ் நாட்டு வெள்ளையர்கள் சிறுநீர் கழிக்கும் கொடுமை??????**

## வன்கொடுமை சாக்காடு!...

கற்காலம் கற்பிக்காத
கொடுமை
அநீதி உயிர்த்தக் கொடுமை!
வன்கொடுமை
இனப்படுகொலை
உச்சம்! இதுவா
நாகரிகம் கற்றுத் தந்த
பண்பு?
மனித நேயம் மாண்டது!
வேடிக்கை மனிதர்கள்
விலங்கை விட கேவலம்!
இழிச்செயல் பழிச்செயல்
கண்மூடிப் படுத்துறங்கும்
உலகம்! புனிதமற்ற
மனிதனில்
செத்தது அறம்..!
சிறுவனில் இறைவன்!

**சத்யா பிரான்சிஸ்**

## செல்லாக் காசு....

தாய்மொழி பேசுவதை
தரக்குறைவாய் எண்ணுவோரும்
பஞ்சம் பசி அறியாது
நெஞ்சில் சுமந்த பெற்றோரை
ஏதிலிகளாக இருக்க இடமின்றி
தவிக்க விட்ட பிள்ளைகளும்
வாழவந்த பெண்ணை
வரதட்ஷணை கேட்டு நித்தம்
வதைக்கின்ற மாமியாரும்
காதல் கொண்ட கன்னியரை
காரணம் பல சொல்லி
கைவிடும் ஆட வரும்
கூட் டுக் குடும்பங்களை
குலைத்துவிடும் மருமகளும்
குடும்ப உறவென்று
கூடிநின்றுபேசியதை
சந்தியில் விக்கின்ற
சண்டாள மித்திரரும்
பிஞ்சு வயதினிலே
கொஞ்சி விளையாடுகின்ற
சின்னஞ் சிறுசுகளை
சீரழித்து குதறிவிடும்
கேடுகெட்ட மதியினரும்
ஏழ்மைக்கு உதவாத
கோடி பணக் கட்டும்
குலயத்தில் என்றும்
பாவனைக்கு உதவாத
செல்லாக் காசுகளே!..

**கீத்தா பரமானந்தன்**

# பருவநிலை மாற்றமும் பரிதவிக்கும் உயிர்களும்!...

-கலைவாணி ஏகானந்தராசா-

இறைவன் படைப்பில் உலகினிலே
இன்பம் தருபவை எவையாமோ?
நிறைவாய் இருக்கையில்
எமைமறந்து
நித்தம் சித்தம் மகிழ்கின்றோம்
குறைகள் காண்கையில்
கலங்குகின்றோம்
குவலயம் பற்றி சிந்தித்தோமா?
மறைந்து போனவை எத்தனை
எத்தனை மனதில்
கொண்டவர் எவராமோ?

இயற்கை என்னும் செல்வத்தை
இறைவன் தந்தது கொடையன்றோ
தயக்கமின்றி தவறு செய்தோம்
தங்கப் பூமியை அவமதித்தோம்
மயங்கிச் சுகபோகம் நாம்
கண்டோம் மந்தைபோல் வாழ
பழகிக்கொண்டோம்
இயந்திரமான உலகத்திலே இன்று
ஓசான் படலத்தில் ஓட்டையாமே?.

மேதினியில் வெப்பநிலை ஏற்றம்
வறட்சியால் புயலும் சூறாவளியும்
பாதிப்பினால் பூமியதிர்வு சுனாமி
பல்கலைக்கழகங்களின் ஆராட்சி
முடிவு நாதியற்று பறவை இனமோ
தவிக்கிறது
நாடு நாடாய் பறந்து அலைகின்றன
ஆதியில் காட்டுவாழ் மிருகங்களும்
இன்றுஅலைவதோ நகர வீதிகளில்

பனிப்பொழிவு காலநிலை மாற்றம்
பனிக்கரடிகளும் தெருவிலே ஓட்டம்
மனித இனமோ பசியினால் வாட்டம்
மாறுபட்டதே விவசாயிகளின் திட்டம்
ஏர் கை பிடித்தவன் ஏழ்மையில் இன்று
பார்தனில் பல்தொழிலும் பாதிப்புற்று
யார் தருவார் இனி சாகுபடி என்று
ஊர் உலகம் தவிப்பிலே இன்று?..

நொடிக்கொரு வைரஸின் தோற்றம்
நோயின் பரவலால் மனத்தாக்கம்
மடிந்திடும் உயிர் தொகை ஏற்றம்
மாற்றம்தான் வருமா எனும் ஏக்கம்?..

..................................................................

## கவலை!..

சாப்பாடு கிடைக்காமல்
இருக்கிற கவலையை விட
இருக்கிற சாப்பாட்டை
உண்ணமுடியாமல்
இருக்கிதோ பெருங்கவலை!..

## இசை!..

நெருப்புச்சூடு வேண்டிய
அழகான மூங்கில் மரம்
இனிய இராகம் மீட்டியது
புல்லாங்குழல் கானம்!..

-சிவா-

## செல் வந்தது!..

-ஜெயா நடேசன்-

செல் வந்தது செல்லமாகவும் வந்தது
தூக்கிஅணைத்துவைத்திருப்போர்-பலர்
அருகினில்படுத்தபடுக்கையில்-உறவாக
உறங்க வைப்போர் பலர்
செல் என்பதை உயிரியல் ஆசிரியர்
உயிரணுவாம் எனச் சொன்னாரே
செல் என்பதை பௌதீக ஆசிரியர்
பற்றரி என நல்ல பெயர் தந்தாரே
கணித ஆசிரியர் மாணவர்க்கு - செல்
விற்பனைப் பொருளாகிவிட்டதே-செல்
என்பதனை சரித்திரஆசிரியர் -ஜெயில்
என்று கூறித் துக்கம் அடைந்தாரே
தமிழ்மொழி ஆசிரியை செல்
அதாவது கிட்ட நிற்காதே
(செல்) போ என்று துரத்தினாரே
இப்படியாகச் செல் வந்ததோ
செல்லும் இடமெல்லாம் செய்தி
சொல்லும் செல் போனை
நாம்சொல்வதையே தடுத்து-சிலையாக
நம்மைச் சிறைபிடிக்க வைக்குமோ
செல்வதைப் போல நமக்கு செல்-
வதை ஆகுது - நம் உடல்
செல்களுக்கும் சிதைவாகுது
அலைக்களிக்கும் அலைபேசியை
அளவோடு அமைப்போம்
அறம் மீறி அளவு மீறலை
அறவே அணைப்போம்- வாழ்க்கையே
கையடக்கப் பேசியாக இராது
தேவைக்கு ஏற்றவாறு
பயன் படுத்துவோம் பயன்பெறுவோம்!..

## சுகம் பலவிதம்!..

-இராஜேஸ்வரி சிவராசா-

இளவேனிற் காலமதில்
இயற்கையின் சுகம்
இளந் தளிர்தனை நெருடுதல்
ஒரு சுகம்
பூரண நிலவைப் பார்ப்பதில்
நல் சுகம்
பூக்களின் வண்ணங்களை
ரசிப்பதில் சுகம்!..

காலைக் கதிர் கண் கூசிடச் சுகம்
சோலைத் தென்றல்
உடல் தழுவிட சுகம்
வேலைக் களைப்பில்
ஓய்வெடுக்கச் சுகம்.
ஓலைப் பாயில் படுத்துறங்க
எவ்வளவுசுகம்!...

அன்னையின் மடியே
பிள்ளைக்குச் சுகம்
அவளுக்கோ பிள்ளையின்
முகம்பார்க்கச் சுகம்
கூடிப்பேசிச் சிரித்துக்
களிப்பதில் ஒரு சுகம்
கூடியே உறவுகளுடன்
கும்மாளமடிப்பதில் சுகம்!..

பள்ளிப் பாடங்களை
நினைப்பதில் சுகம்
பழைய தோழர்களைப்
காண்பதில் சுகம்
கவிக்காக கற்பனை
வளர்ப்பதில் சுகம்
கவிதைகள் எழுதி மகிழ்வதில்
நல் சுகம்!...

# யாழ் நூலகம்...

(கலைவாணி.ஏகானந்தராஜா)

செல்வத்துள் செல்வம் கல்விச் செல்வமே
கல்விதனை உயர்த்துவது வாசிப்பு மட்டுமே
யாழ்ப்பாண மக்களின் விலைமதிப்பற்ற சொத்து
யாழ் நூலகம் என்பதே கற்றோரின் கருத்து..

அறிவாலயங்கள் என்றும் முற்றுப் பெறுவதில்லை
அறிவாற்றல் என்பதும் அழிந்து போவதில்லை
தமிழரின் கலை கலாச்சாரப் பண்பாடுகளை
வமிசத்தை வளர்த்தது யாழ் நூலகம்...

ஆயிரத்தி தொளாயிரத்து முப்பத்து மூன்றில்
கடையொன்றில் ஆரம்பித்த யாழ் நூலகம்
ஆயிரத்தி தொளாயிரத்து முப்பத்து நான்கில்
யாசகமாய் திரட்டியது தொகைப் பணமாம்...

ஐம்பத்தெட்டில் பெயர் பெற்றது யாழ் நூலகமாய்
ஐம்பத்தொன்பதில் நடைபெற்றது குடிபுகு வைபவம்
சாம் சபாபதி முதல் பாலசுப்ரமணியம் வரை உதவிட
யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா திறந்து வைத்தார்...

கங்கையும் ஐமுனையும் கலந்தது போல
தங்களின் நூல்களையும் தந்தது அமெரிக்கா
பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை
காலம் முழுவதும் கல்விக்கு கரம் தந்தது...

நூல்களின் தொகையோ தொண்ணூாற்றேழாயிரமாம்
நால்பத்து ஆயிரம் ஏட்டுச் சுவடிகளாம்
பல்லாயிரம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியாளர்கள்
நல்லுருவாக்கியது யாழ் பொது நூலகமாம்...

ஆயிரத்தி தொளாயிரத்து எண்பத்து ஒன்றில்
யூலை மாதம் முதலாம் திகதியிலே
பேரினவாதிகள் பெருங் குரோதம் கொண்டே
கரியாக்கிட திட்டமிட்டு சதிசெய்தனர்...

அறிவுச் சுடரேற்றிய அத்தனை நூல்களையும்
தறிகெட்ட அரசு தீ மூட்டி எரித்ததுவே
வரலாற்றுப் பதிவான இத் தரங்கெட்ட செயலுக்கு
அரசாங்கமும் அக்கால ஆட்சியுமே பொறுப்பாம்..

இரண்டாயிரத்து ஒன்றில் புத்துயிர் பெற்ற நூலகம்
திரட்டிய நூல்கள் மீண்டும் அறிவூட்டின
வரலாற்றுப் புகழ்பெற்ற யாழ் நூலகமதனை
கரமிணைத்து உயர்த்திடுவோம் காவியம் படைத்திடுவோம்!..

## நினைத்து பாரு மானிடா!..

-கவி மீனா-

சிறகு முளைத்தால் கூட்டை விட்டுக்
குஞ்சுகள் பறக்கும்
பருவம் வந்தால் துணையை தேடி
பிள்ளைகள் நடக்கும்
புவியில் கர்மம் முடிந்தால் உடலை
விட்டு உயிரும் பிரியும்...

இருக்கும் வரைதான் உண்ணலாம்
இருக்கும் வரைதான் உடுக்கலாம்
இறந்த பின்னே உணவு எதற்கு உடை
எதற்கு? உடமைதான் எதற்கு?
கடமை முடிக்க கடந்து போகுது
காலமே இதுதான் வாழ்க்கை என்பதை
நினைத்து பாரு மானிடா..

பிள்ளை தவழும் வரை தாய் சொந்தம்
கொடி படரும் வரை மரம் சொந்தம்
காதல் இருக்கும் வரைதான்
துணையும் சொந்தம் காலப்போக்கில்
மாறிப் போகுது சொந்தமும்..

மாறுகின்ற உலகிலே
மாறி மாறி வரும் சொந்தமே
வானில் தேய்ந்து வளரும்நிலவைப்
போலே வாழ்வின் இன்ப துன்பம்
வருகுதே
நடிக்கும் வரை ஆடை மாற்றும்
மேடையும் இளமை உள்ளவரை
ஆளை மாற்றும் மனிதர்களும்..

உண்மையும்பொய்யும்தெயாதவரை
உறவு நிலைக்கும்..
பொய்கள் வெடித்துச் சிதறும்போது
உறவும் முறிந்து கதறி போகும்
உயிர்கள் படும் வேதனை
இந்த உடலை சேர்த்து வாட்டுது..

இருக்கும் வரைதான் ஆணவம்
அகங்காரம்
உயிர் அற்ற உடலுக்கு வருமா?
நான் என்னும் அகங்காரம்
பிணம் என்று பெயர்மாறிப் போன
பின்னே
உனக்கேது பந்தம் உனக்கேது
சொந்தம் ?
நினைத்துப் பாரு மானிடா
இதை நினைத்துப் பாரு மானிடா!..

# யாழ் நூலகத்தின் சுவடுகள்...

-இரா சம்பந்தன்-

வெண்டாம ரையினின்று நீங்கி
வீணையுடன் கலைவாணி
வீற்றிருந்த கோயிலதை
குரூர மனம்படைத்தோர்
கொளுத்திச் சென்றன ரன்று !

அறிவொளி பாய்ச்சிய
அந்த நூலகத்தை
எரியுந் தீயிடை பொசுக்கியவர்
கரியதைத் தம்முகத்தில் பூசினர் !

அனலிடை வீழ்ந்தன நூல்கள்
புனலிடை வீழ்ந்தன
பூந்தமிழர் விழிகள் !

அள்ளக் குறையா
அருந்தமிழ் பொக்கிஷம்
கொள்ளைபோகாச்செல்வமன்றோ!..
கொள்ளை யடித்தது
கொடுங்கோன்மை .

கலைமகள் கையளித்த
விலையில்லாச் செல்வங்களைத்
தீயின் நாக்குகள்
துளாவித் துளாவித்
தின்று தீர்த்தன !

முத்தனைய சொத்துக்கள்
அத்தனையும் நீறானதே !
எத்தனை காலங்கள்
எந்தமிழர் தேடிய செல்வங்கள் ?

எண்ணிலா நூல்கள்
எரியுண்டு போவதற்கு
தீக்குச்சி வீசியவர்களைத்
தட்டிக் கொடுத்தவர்க ளெங்கங்கே.. .

ஓரினத்தின் அடையாளங்களை
அழித்தொழிப்ப தென்பது
அவ்வினத்தை யழிப்பது போலலவா ?
பேரினத்தின் செயல்களினால்
பேரழிவே நேர்ந்தது !

கனன்றிடும் இனப்பகையை
நீரூற்றி யணைக்காமல்
ஊதி யூதியே வளர்ப்பதனால்
உருவாகும் வன்முறைகள்! . . . .

அன்பைப் போதித்த
அற்புத மதத்தின் தத்துவங்களை
புறந்தள்ளும் தனயர்களால்
நித்திலத் தீவினில்
நித்தமும் துயரங்கள்! . . . .

எண்ணரிய புத்தகங்களால்
நுண்ணறிவு புகட்டிய நூலகம்
எழுச்சி பெற்று நின்றாலும் ,
எந்நாளும் எடுத்தியம்பும்
இன்னா செய்தா ரியல்புகளை! .

அகவிரு ளகற்றிய
அழகிய திருவிளக்கை
அன்றவர்க ளணைத்துச் சென்றாலும்
அகம் , புறம் காட்டிய
அகல்விளக் கினொளி
செகமதிற் றுலங்கும்!....

# முள்ளிவாய்க்கால்...

திரேஸ் மரியதாஸ் - லண்டன்

முள்ளிவாய்க்காலை எழுதவெண்ண
இதயத்தின் நாடிநரம்புகளெல்லாம்
ஒருசேர ஒருங்கே நெருங்கிவந்து
முட்கள் குத்துவதுபோலக் குரூரமான
நினைவுகளாய்க் குடைகின்றதே
சிந்தையை மந்தையாக்கி!..

கழுகுகள் கோழிக்குஞ்சைக்
கெளவிப்பிடிக்கத் துடித்ததுபோல
விமானங்கள் வட்டமிட்டு
நோட்டமிட்டுத் தூக்க
தாய் உடைந்து மடிய
மழலைகள் வாழ்வை முடிக்க
ஓடியது இன்னமும் இழுத்து
மூடமுடியவில்லையே ரணங்களாய்!..

கிபீர் சுப்பசொனிக் சீப்பிளேனென
சிலமணித்துளிகளில்ச் சீறியடித்து
வெடித்து உடல்களைச் சிதறவைத்த
கோரமான தலையில்லாக் காட்சிகள்
இன்னமும் ஈரமாய் நனைக்கிறதே
கண்ணீரைத் தாரையாக்கி!..

மருந்து மருந்துக்குமில்லைப்
பொருளாதாரத்தடை
போக்குவரத்துத் தடா
கிளாலிக்கடலில் கெடுபிடி
கெலியின் கலிவேறயென
காலியானது காலம்
அலங்கோலமாய்!..

அம்மா இறந்துவிட்டாளென
இவளுக்குத் தெரியாமல்
அன்னையிடம் பால்குடித்த
பாலகர்களின் கதை
வதையாய் இன்னுமும்
பதைபதைக்க வைக்கிறதே!..

பதின்மூன்று வருடங்கள்
ஓடிமறைந்தும் இன்னமும்
போர் வடுக்களும் அநாதை
இல்லங்களும் பெண்கள்
தலைமைதாங்கும் குடும்பங்களும்
மாற்றுத்திறனாளிகளும்
குடிசைகளும் வறுமையும்
பட்டினியும் வாட்டியவண்ணமே
கூட்டியழிக்கிறதே கூட்டில்லாத்
தமிழ் அணிகளால்
மீட்டியெழ வழியின்றி!..

சிறைசித்திரவதையென
பூட்டியவறைக்குள்
முட்டிய ஞாபகங்களை
மூட்டைகட்டி
ஆட்டிய கோவித்திலும்
பூட்டுகள் திறவாமலே
வருடக்கணக்காய்
கணங்கள் கழிகிறதே
தலைவர்களின் விழிகள்
தரணியில் மூடியதால்!..

இறைவன்தான் தமிழரைக்
காக்கவேண்டுமென்ற
தந்தை செல்வாவின் வாசகம்
செவிகளில் இன்றும் தெறிக்க
கூவிக்கேட்கிறோம் இறைவா
தருவாயா விரைவாய்
அமைதியை நிம்மதியையென!..

# குன்றில் விளக்காய்....

-வசந்தா-ஜெகதீசன்-

தந்தையென்னும்
பெரும் கொடையே
உறவின் உயிர்ப்பில் முதல்நிலையே
முதன்மை சுமையின் முதலாளி
முழுமை தாங்கும் தொழிலாளி
அறிவின் தீபம் ஆலயமாய்
அன்பின் காக்கும் தந்தையரே
உருகும் திரியாய் விளக்கேற்றி
உறவைக் காக்கும் வழிகாட்டி
செம்மை வாழ்வை சீராக்கி
சேய்கள் நிமிர்வின் சுமைதாங்கி
அல்லும் பகலும் அறிவூட்டி
ஒளிரும் வாழ்வின் காற்றாடி
எங்கும் நிறையுது பேரன்பு
எதிலும் தந்தை முதலெழுத்து
கண்ணாய் காப்பார் கருத்தோடு
கண்ணியம் காப்பார் வாழ்வோடு
உண்மை அன்பின் உறவாளி
மேன்மை போற்றும் பண்பாளி
அப்பா என்னும் அன்போடு
என்றும் மெய்ப்பட
வாழ்வோம் பண்போடு
குன்றில் விளக்கே
நீங்களப்பா
கூடியே வாழ்ந்த வள்ளலப்பா!..

# நூலக எரிப்பு!..

-திரேஸ் மரியதாஸ் -லண்டன்-

வழமான ஆழமான வரப்பிரசாதங்களை
விழுதாய்ப் பரப்பிச்சென்ற ஆணி
வேர்களின் பொக்கிஷங்களின்
பெட்டகமதை அழித்தால்
தமிழரின் அத்திவாரத்தை அசைத்துச்
சுவைக்கலாமென பகற்கனவுகண்டு
ஆன்மாவைக் கொன்ற கரிநாள்
தென்னாசியாவின் தெம்மாங்குச்
சிகரமதை அர்த்த இராத்திரியில்
அடியோடே
பொசுக்கித் தொண்ணூற்றேழாயிரம்
சிசுக்களைக் கலைத்துக் காமுகஞ்செய்த
விசமத்தனமான நொடிபோன்ற இடிநாள்
தமிழரின் கலை கலாச்சாரப்
பண்பாடுகளைகொளுத்தித்
தமிழரின் மூளையைத்
திருடித் தின்றுவிட்டோமெனத்
திமிராய் முழக்கமிட்ட களங்கமான
கார்முகில் படர்ந்த கோரங்கள்
சூரியன் கதிர்களை வெறுப்போடு
பரப்ப மறுக்க இருண்ட
கறுத்த வானம் முழுயாழையும்
மூடிமறைக்க அருட்தந்தை தாவீது
அடிகளார் அதனைப்பார்த்த
அதிர்ச்சியில் மாரடைப்பால்
விறைத்து உறைந்தேபோனாரே
தத்துவம் வரலாறு உளவியல்
இதிகாசம்பன்மொழி பழைய
பழுத்தவைகள் பத்திரிகைகளென
இன்னோரென்னவற்றை இந்தத் தீ
இரக்கமில்லாமலே விழுங்கிவிட்டதே
அரக்கத்தனமாய்!..

# நெடுந்தீவு குமுதினிப் படுகொலைகள்..

- ப.பசுபதிராசா -

அலைகடல்கள் படை எடுத்துப் பாதுகாக்கும் நெடுந்தீவு
வல்லவழி தொடரும் பசுக்கள் பால் சிந்தும் பசுந்தீவு
அள்ள அள்ளக் குறையாத ஆயுள்வேத மூலிகைக்கூடு
பனையும் தென்னையும் பாச அமுதூட்டும் அன்பேடு..

காலா காலமாக கஞ்சல் களைகூட கடலலைகள் தொடாதபோது
கயவர்கள் சுட்டுத்தின்ற உடல்கள் கைவந்து சேர்ந்த நாள்
எங்கள் நெஞ்சக் குமுறல்கள் இடியோசையை கடந்தது பாரு
காலைக் கதிரவனவன் முகத்தில் இரத்தச் சிதறல்களின் சேறு..

பனையில் தேள் கடித்தால் தென்னையில் நெறிகட்டுவதுபோல்
யாருக்கோ வெட்டியவாள் தவறி வீழ்ந்தது எங்கள் தோள்
அப்பாவிகளின் இரத்தமதில் இறைவனுக்கும் அசைதான்
அன்றாடம் நாம் அழுது புலம்புவதால் வாழ்க்கைதான் வீண்..

அன்றாடம் ஒரு துளி இரத்தம் வேண்டி உழைக்கும் எம்மவர்
மன்றாடி இறைபாதம் வேண்டி நின்று தினம் ஜெயிப்பர்
திண்டாடிவாழும் மாந்தர்கள் எல்லாம் மாய்ந்துபோனார் - அதை
கொண்டாடும் கொடியவர்கள் காலக்கொடுமையுள் வீழ்வார்..

ஒன்றையா பலி கொடுத்தோம் ஊர் சுற்றி அன்று ஓடிய ரத்தம்
காலத்தாலும் மாற்றமுடியாத வன்மம் தந்த கோர முத்தம்
பழி அஞ்சும் மக்களுக்கு வழிதெரியாது வாட்டும் யுத்தம்
எங்கிருந்து வந்தது இந்தக் கோரத்தாண்டவ பழிபந்தம்...

வான் நோக்கித் தினம் கண்களைக் கசியவிடும்
சொந்த பந்தத் துயர் நெடுங்கதை எங்கள் வாழ்வைச் சூழும்
மானிட இனமே இனக்கொடுமை செய்யும் விலங்கிடை
இந்தச் சிறுமை இல்லாது இருப்பது பெருமை வெள்ளிடை மலை..

மண் இதழ் 212 அட்டைப்படக் கவிதை..                **-அம்பலவன்புவனேந்திரன்..**




பழுத்திருக்கும் கனிகளையே பாரெல்லாம் விரும்பும்
பயன்தரும் தருக்களும்தான் பூக்களையே அரும்பும்
எழுத்துலகின் மேதைகளையும் இங்ஙனமே இயம்பும்
இன்றில்லை என்றுமே அவரையேற்றி நிதம்போற்றும்
அழுத்துகின்ற சமூகத்தின் அவலநிலைத் தோற்றம்
அன்றாடம் இலக்கியங்களோ ஔடதமாய் ஆற்றும்

பத்திரிகைத் துறையின் பணிகளிலோர ஜாம்பவான்
படைப்பாளி சிவநாயகமோ பல்துறையில் வித்தவான்
முத்திரையாய் தேசத்தின் திருமுகத்தில் படங்களாய்
முறுவலிக்கும் எழுத்துலக முன்மாதிரித் தடங்களாய்
இத்தரையில் தடம்பதித்தே இலங்கிநின்ற பணிகள்
எந்நாளும் உமதுழைப்பாய் எழுப்புமோசை மணிகள்

தெளிவத்தை யோசெப் எனும் தெளிந்த ஞானவிழுது
தெள்ளுதமிழில் கலாபூசணம் தேர்வினில் உயர்விருது
வெளிவந்த இலக்கியங்களோர் வித்துவத்தின் அடக்கம்
வேரோடு சுவைத்தற்கரிய விழுமியங்களின் தொடக்கம்
மொழிபெயர்ப்பு நூல்களிலும் உமதுதடங்கள் பதிப்பு
முகிழ்ந்தெடுத்துக் கோர்த்திட்ட முத்துக்களின் மதிப்பு

அம்பிகைபாகன் என்றழைக்கும் அருங்கவிஞர் அம்பி
ஆசிரியர் பணியோடு அறிஞராய் ஞானத்தை எம்பி
நம்பிக்கையை ஊட்டுகின்ற நலிந்திடாத படைப்பாளி
நலமோடு நடைபயிலும் நல்லூரம்மிக்க உழைப்பாளி
தும்பிக்கையான் துணையில் தொய்திடாதும் பணியை
தொடர்ந்தே இணைத்திடுக இளையோரின் அணியை...

# கவியரசர் கண்ணதாசன்...

அம்பலவன்புவனேந்திரன்..



காலமெல்லாம் உனைப்பாடக் கன்னித்தமிழும் போதாது
கால்பதித்த இலக்கியங்களில் கரைகாணவே வழியேது
ஞாலமெல்லாம் வசீகரித்திட்ட ஞானத்துக்கு அளவேது
நானுனைப் பாடுவதற்கோ நாளும்பொழுதும் அடங்காது
ஓலமிடுகின்ற கடல்வாயை ஒற்றைக்கையோ மூடிடாது
உனைவெல்ல எந்தக்கவியும் உலகினிலெழ முடியாது

ஜாலம் செய்கின்ற மாயக்கண்ணனவனின் தாசனானாய்
யாவரையும் பற்றியிழுக்கும் பேச்சினிலே நேசனானாய்
மூலத்தைக் கண்டறிய முத்தமிழில்நீந்தி அமிழ்ந்தாய்
முன்னைக்கும் பின்னைக்கும் முடிச்சைநீ அவிழ்த்தாய்
காலனுனை அழைக்கும்தருணத்தை கணித்துவென்றாய்
காலத்தைக் கரைத்துவிட்டுக் கவியினில் வாழுகின்றாய்

பாலம்போடுகின்ற பாடல்வரிகளைப் படைத்து வென்றாய்
பல்வகைத் துறைகளிலும் நீயும்பாதம் பதித்தே நின்றாய்
ஆலவிருச்சமாய்ப் படைப்பிலக்கிய அழகினில் சிரிந்தாய்
அர்த்தமுள்ள இந்துமதத்தையும் அள்ளியேநீ விரித்தாய்
கோலம்போடுகின்ற பாசுரங்களை கொட்டிச் சுவைத்தாய்
கோர்வையாய் இயேசுகாவியத்தை கூட்டிச் சமைத்தாய்

ஆலத்தை அள்ளித்தின்ற ஆதிசிவனையும் வெறுத்தாய்
ஆத்திகத்தை ஆத்திரம்கொண்டு அடியோடுநீ மறுத்தாய்
சூலம்கொண்டு உலகாளும் சுந்தரியைப்பின் தொழுதாய்
சுற்றுகின்ற சக்தியென்றவளின் செங்கழல்பற்றி அழுதாய்
நீலம்கொண்ட கண்ணனைப்பாடி நீயோ தேடிச்சென்றாய்
நிலையான கவியரசாய் நித்திலத்தில் நீடுவாழுகின்றாய்!..

# சித்ததில் வந்த சில சிந்தனைகள்!..

-கவி மீனா-

இத்தாலி காரனும் நூடில்ஸ் செய்கிறான் ஜேர்மன் காரனும் நூடில்ஸ் செய்கிறான் ஆனால் சீனாக் காரனுடைய நூடில்ஸ் தாங்க சுவையாக இருக்குது

இந்த நூடில்ஸ் சாப்பிட்ட போது வந்த சிந்தனை தாங்க இது! அமெரிக்காக்காரன் அணுகுண்டு போடுறான் ரஸ்சியா காரனும் அணுகுண்டு போடுறான் ஆனால் சினாக்காரன் போட்ட கொரோனா குண்டு சத்தமிலாமல் கண்ணுக்கு தெரியாமல் குட்டி போட்டு குட்டி போட்டுத் தாக்குது.

பாரத போரிலே அர்சுனன் விட்ட அம்பு பத்தா பெருகிப் போய் எதிரிகளை தாக்கினதாகக் கதையுண்டு. அப்படிதான் கொரோனாவும் பத்தாகப் பெருகி பல திசையும் தாக்குது.

பாம்பை கண்டால் படையும் நடங்கும் என்பர் இந்தியாக்காரன் பாம்புக்குப் பாலை ஊத்தி,ஊத்தி அதை மயங்கிப் படுக்க வைக்கிறான், ஈழத்தமிழனோ பாம்பைக் கண்டால் அலறி அடிச்சு ஓடுறான் சீனாக்காரன் பாம்பைப் படக்கென்று பிடிச்சு டக் என்று வெட்டி சட்டியிலே போட்டு வறுத்து சோஸ் விட்டு சாப்பிடுறான்.

சீனாப் பட்டு சீனா வெடி சீனத்துத் தேயிலைகள் என்றும் இன்னும் சீனாவிலிருந்த பல மின்சார உபகரணங்களும் உலகமெங்கும் விற்பனையாகியது, விலை மலிவு என்று வாங்கிப் போட்டு கெதியா என்று வாங்கிப் போட்டு கெதியா உடையுது ( Made in China ) என்று நக்கல் நையாண்டி கூறிச் சீனாவை ஏளனம் செய்வோருமாகத்தான் சனம் இருந்தது,

இன்று சீனா கொடுத்த கொரோனா ஓட ஓட துரத்துது முடிவில்லாமல் பெருகுது இதுக்கு என்ன சொல்ல போறிங்கோ? இந்தியாக்காரன் சாதம் என்று தோசை இட்லி என்றும் திண்டு திண்டு சோம்பிக் கிடக்கிறான் இலங்கை தமிழனோ சோத்தைத் திண்டு திண்டு வயிற்றை நிரப்பி வண்டியை வளர்க்கிறான். மேலை நாட்டவர்களோ பன்றி மாடு என்று பொரிச்சு திண்டு கொழுப்புக்கூடி திக்கு முக்காடுறான். ஆனால் சீனாக்காரன் மட்டும் எப்பவும் ஒல்லியாக சுறு சுறுப்பாக எறும்பை போல ஓய்வின்றி ஓடி ஓடி உழைக்கிறான்.

யுத்தமில்லாமலே நாடுகளுக்குள்ளே உள்ளடுகிறான் இது எப்படியுங்க? வல்லரசு எந்த நாடு என்று உலக நாடுகளுக்குள்ளே போராட்டம் வலிமையான செயல்பாடு சீனாக் காரனிட்டதானே இருக்குது சிந்திச்சு பாருங்க உங்களுக்கே புரியும்

இது மட்டுமா கைலாயமும் அதிலை வாழுகின்ற சிவபெருமானும் கூட

சினாக்காரன்டை எல்லையிலைதான் இருக்குது என்றால் இந்து மதத்தில் சொல்லப்படுகிற நம்ம கடவுள் கூட தமிழனுக்கு பக்கத்திலை இல்லை பாருங்க!

நல்ல காலம் சீனாக்காரன் இன்னும் சிவபெருமானிண்டை கழுதிலை இருக்கிற கார்கோடனை காணவில்லை! போதி தர்மன் என்ற அரசனும் தனது திறமையை இந்தியாவிலை காட்டவில்லை சினாவுக்குக் குடி பெயர்ந்துபோய் அங்குதான் குங்ஃபூ கலையை சீனர்களுக்கு பயிற்றுவித்தார் காரணம்தான் என்ன? சீனர்கள் மேல்தான் அவருக்கு அன்று நம்பிக்கை வந்தது. இந்த வித்தையை க்கற்க உடல் வலிமை மட்டுமல்லாது மன வலிமையும் வேண்டும் என்பதே முக்கிய காரணம்.

ஐம்புலன்களையும் அடக்கி இந்த கலையை கற்க சீனர்கள் முன் வந்தார்கள் என்பதே உண்மை! இந்தியனுக்கு காதலும் கலையும் சங்கீத ஞானமும் நடனமும் நடிப்பும் எப்படி கை வந்த கலையோ அது போலே சீனருக்கு கராட்டி குங்ஃபூ என்பது உடலுக்கும் மனசுக்கும் உள்ள வலிமை என்பேன்,

சீன மத குருமார்களில் கடைசி குருமார் ஆக ( 28ம் குருமார் ஆக ) போதி தர்மன் கருதப்படுகிறார். ( ஆதாரம் - சீன யங்க்சியா பாட்டு ) வாழ்ந்த வருடங்கள் : 75 (கிபி 550 ) இதிலிருந்து போதி தர்மன் என்ற தமிழன்தான் உலகின் சிறந்த தற்காப்பு கலையான குங்க்ஃபூவை சீனர்களுக்குச் சொல்லித் தந்தார் என்றும் சீனர்களால் இன்றுவரை தெய்வமாக போற்றப்படுகிறார் என்பதும் தெரிகிறது.

எதையும் சாதிக்ககூடிய மனோ வலிமை சினாக்காரனிடம் இருக்கு என்பது மறுக்க முடியா உண்மையுங்க!

இனிமேலாச்சும் சீனாக்காரனை நக்கல் நையாண்டி பண்ணாதீங்கோ, அமெரிக்காவில் எடுத்த ஒரு ஆங்கிலப் படம் பார்த்தனான் பெயர் ஞாபகத்துக்கு வருகுது இல்லை அதிலை உலக நாடு எல்லாம் அழிந்து போனாலும் சீனா மட்டும் அழியாமல் இருப்பதாகதான் காட்டுறாங்க,

எப்பவும் நான் நான் என்பவனும் எங்கடை இனம், எங்கடை மதம் என்று திமிர் பிடித்து அலைபவருக்குமாகத்தான் நான் இதை எழுதுகிறேன் எங்கடை கையிலை எதுவுமில்லை எல்லாம் அவன் செயல்..

சிந்திச்சுப் பார்த்தால் உண்மைகள் புரியும் உண்மைகள் புரிந்தாலும் அதை ஒப்புகொள்ள மனமில்லாதவர்கள் உலகிலே அதிகம் பேரு இதுதாங்க நான் சொல்ல வந்த உண்மை!






## தொழிலாளர் தினம்!... மே - 1........ May Day...

மே தினம் - உலகத் தொழிலாளர் நாள். இது சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நாளாகும். உலகத் தொழிலாளர் பெருமைக்கும் கௌரவத்துக்கும் உரிய நாளாகும். இதனால் இது உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. இந்நாள் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்துகின்ற நாளாகும்.

இலங்கையைப் பொறுத்தளவில் ஒரு அரசியல் கொண்டாட்டமாகவும் களியாட்டமாகவும் சிலர் கொண்டாடுகின்றனர்.தொழிலாளர்களின் 8 மணி நேரவேலை நேரத்தையும் அவர்களில் நலன் சார்ந்தும், அடிப்படை உரிமைகளை வலியுறுத்துவதையும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையே இந்தநாள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் அரசியல் காரணங்களால் தொழிலாளர் விழிப்புணர்வு ஏற்பட வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றது. வேலைநேரம், சம்பளம், வேலைவாய்ப்பு, குடியிருப்பு என சரியான சட்டதிட்டங்கள் இன்மையால் தொழிலாளர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவும் இரண்டாம்தர பிரசைகளாகவும் நடத்தப்படுகிறார்கள்.

இலங்கையின் தொழிற்சங்க தலைவர்களைப் பொறுத்தளவில் தமது சுயநல தேவைகளுக்காகவே தொழிலாளர்களைப் பயன்படுத்துவது வழக்கமாகும். அரசால் தமக்குக்கிடைக்கும் பதவிகள், சலுகைகளை தாம் அனுபவித்துக் கொள்கிறார்கள். தொழிலாளர் அடிப்படை உரிமைகளைக்கூட வென்றெடுப்பதில் போதிய அக்கறை செலுத்தாத நிலையே இருந்து வருகின்றது. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலுப்பாக உழைக்கும் தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் உரிமையற்றவர்களாகவும் குடியிருப்பு, கல்வி, பொருளாதார, வேலைவாய்ப்பு, அரசியல், சுகாதாரம், வாழ்வியல் என பின்தங்கிய நிலையில் இருக்கும் நிலையே காணப்படுகின்றன. இது தொடர் பிரச்சனையாகவே இருந்து வருவதும் வேதனைக்குரிய விடையமாகும்.




இன்று நம் நாட்டின் நிலைமையால் தொழிலாளர்கள் வாழ்வு மேலும் மோசமாக்கப்பட்டிருக்கின்றது. கொரோனா தாக்கம் மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, விலை ஏற்றம், எரிபொருள், மருந்து தட்டுப்பாடு,வேலை இழப்பு என சுமைகள் பல் மடங்கு அதிகரித்துவிட்டதால் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

இலங்கையில் மாறி..மாறி வந்த அரசுகளின் சரியான பொருளாதார கொள்கைகள் இன்மையாலும் அரசியல் குழப்பங்களாலும் போட்டிகளாலும் இன்று பொருளாதாரம் சீர்குலைந்து நெருக்கடிகள் பல மடங்கு அதிகரித்துவிட்டன. இதனால் சாதாரண கூலித்தொழிலாளர்களின் அன்றாட வாழ்வு சீர்குலைந்து காணப்படுகின்றது. இந்தப் பிரச்சனைகள் தீர்ந்து இயல்புநிலை வரவேண்டும் என மக்கள் ஏங்கித் தவிக்கின்றர்.

இத்தகைய பல நெருக்கடிகள், வாழ்வியல் அலங்கோலங்கள் அதிகரித்துக் காணப்படும் பின்னணியில்தான் இலங்கைத் தொழிலாளர்கள் இந்த மே தினத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். உரிமைகளையும் ஐக்கியத்தையும் வலியுறுத்துகின்ற இந்த மே தினம் அவர்களுக்குப் பெரும் துன்பங்களையும் ஆற்றமுடியாத சோகங்களையும் அளிப்பதாகவே இவ்வருடம் அமைந்திருக்கிறது.

சகல தொழிலாள மக்களுக்கும் விடிவுகாலம் விரைந்து வரவேண்டும். ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் உணர்ந்து சாதாரண தொழிலாள மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளையும் உரிமைகளையும் வழங்கி நாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்களைக் காப்பாற்ற அனைவரும் உதவிகளை வழங்கவேண்டிய பொறுப்பில் நாம் எல்லோரும் இருக்கின்றோம்!..




# விதி எப்படியோ?..

(கெங்கா ஸ்ரான்லி)

யன்னலினுடாக வெளியில் பார்க்கிறாள் லதா.அடுத்த வீட்டு கூரையின்மேல இரு புறாக்கள் கொஞ்சியபடி இருக்கின்றன. அதை பார்த்ததும் அவனது கண்களில் நீர் துளித்தது. சிறிது நேரத்தில் அப்புறாக்கள் இரண்டும் ஒன்றை ஒன்று பாராது திரும்பிக் கொண்டு நின்றது.திரும்பவும் ஒன்றுக்குக் கிட்ட ஒன்று வந்து நின்றது.இடையில் இன்னோரு புறா கிட்டே வந்து பறந்து போனது இப்போது பெண் புறா ஆண்புறாவைப் பார்த்துக் கொண்டு நின்றது.

அதையே இமைவெட்டாது நோக்கிய லதாவுக்கு நினைவுகள் மீண்டன.அவளும் நவீனும் ஒரு காலத்தில் இப்படித் தான் எப்படியெல்லாம் கூடினார்கள். ஆடினார்கள் ,பாடினார்கள் சிட்டுக்குருவிகளாட்டம்.அதன் பிறகு திருமணம் என்ற பேச்சு வந்தவுடன் தான் அங்கே வெடித்தது பூகம்பம். அப்பா சொல்லிவிட்டார் தான் தனது நண்பனுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன் என்று..

பொருத்தம் எல்லாம் பார்த்து ஓகே சொல்லியாச்சு என்றார்.அம்மா பேசவில்லை .லதா கேட்டாள்,அப்பா எனக்கும் ஒரு மனம்முண்டு.அதிலும் சில ஆசையுண்டு தெரியுமா அப்பா உங்களுக்கு ஏன் அப்பா என்னிடம் நீங்கள் கேட்கவில்லை என்றாள் அதற்கு அப்பா ஏன் உன்னைக் கேட்கனும். நான் சொன்னால் நீ தட்டமாட்டாய் என்ற நம்பிக்கை தான் அம்மா. என்னை மன்னித்துவிடு. நான் செய்தது பிழைதான்.சரி உனக்கு பிடித்தவனோடு நீ போய் வாழலாம். நான் அவர்களிடம் சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டு போனார்.

இரவு லதாவுக்கு தூக்கம் வரவில்லை யோசித்தாள். என்ன செய்வது. அதற்குள் வெளியில் அப்பா,அம்மாவின் குரல் கேட்டது. அம்மா கேட்டாள் ஏன் கேட்டாள் ஏன் நீங்கள் லதாவுக்கு அப்படிச் சொன்னீர்கள். அதற்கு அப்பா நான் நினைத்தேன் அவள் என் சொல்லைத் தட்டமாட்டாள் என்று. ஆனால் ஏன் என்னைக் கேட்கவில்லை என்றதும் நான் உடைந்து விட்டேன். இனி என்னால் திரும்பிக் கதைக்க முடியாது. அதனால் அவள் விரும்பிய வாழ்க்கையை வாழட்டும்.

அப்ப அவர்களுக்கு என்ன சொல்லப்போகின்றீர்கள். சொல்லுவம் என்மகள் இன்னொருவனை ஆசைப் பட்டுவிட்டாள், அவனையே கட்ட சொல்லி விட்டேன் என்று. உங்களை எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள் தெரியுமா,தெரியும் கொடுத்த

வாக்கைக் காப்பாற்ற முடியாதவன் என்று ஏளனம் செய்வார்கள் பரவாயில்லை பிள்ளையைப் பெற்று வளர்த்த நன்றிக் கடனாக எடுப்பம். எங்களை வைத்துக் காப்பாற்றுவா என்றா வளர்த்தோம்.

எல்லாமே இப்படித்தான் எதிர்ப்பார்ப்பு இருக்ககூடாது. நாம் பெத்த பொண்ணு நல்ல மாப்பிள்ளையாகப் பார்ப்போம் என்று நினைத்தேன் சரி விடு நாளைக்கு அவர்களுக்கு சொல்லுவம் என்று சொல்லிவிட்டு கவலையுடன் தூ ங்கப்போனார்.

தூங்கப் போன அப்பா அடுத்த நாள் காலையில் எழுந்திருக்கவேயில்லை. லதாவிற்கு இது பேரிடியாக இருந்தது. அவளுக்குத் தெரியாது அப்பாவுக்கு அதிர்ச்சி தரும் செய்தி சொல்லக்கூடாது என்று அம்மாவும் முதல் சொல்ல வில்லை.இப்போது தான் சொல்லி அழுதாள். லதாக்கு கவலை அப்பா தன்னால் தானே இறந்தார் என்று. அவளால் கவலையில் இருந்து மீளாவே முடியவில்லை.

அப்பாவின் நண்பர் தான் வந்து எல்லா உதவிகளும் செய்தார்.அப்போது தான் சொன்னார் அவன் எவ்வளவு சந்தோஷப்பட்டான். தன்மகளுக்கு என் மகன் கணவராகவரப்போகின்றான் என்று அந்த இன்ப அதிர்ச்சியாலை போயிட்டானே எனக் கண் கலங்கினார். லதாவால் ஏதுவும் பேசமுடியவில்லை. நெஞ்சம் வெடித்தது.

.இப்பொழுது அம்மா பெரிதாக லதாவுடன் கதைப்பதில்லை. அவளுடைய தாலியைப் பறித்த கொடியவளல்லவா? என நினைத்தாள் போலும்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் நவீன். லதா வீட்டிற்கு வந்தான். லதாவிடம் சொன்னான் உங்கள் அப்பாவின் செய்தி கேட்டுத் துடித்துவிட்டேன் நான் எந்த முகத்துடன் இங்கே வருவது அதனால் வரவில்லை.

உமக்கு கால் பண்ணினாலும் எடுக்க வில்லை. அது தான் என்னவோ ஏதோ வென்று பதறிவிட்டேன் என்றான். லதா சிரித்தாள் உணர்ச்சி இல்லாமல் இருந்தது.

ஏன் இப்படி சிரிக்கின்றீர் என்று கேட்டான். நானும் அன்றே செத்து விட்டேன் நவீன்.இப்போது இந்த உடம்பு மட்டுமே இருக்கிறது என்றாள். என்ன லதா இப்படிக் கதைக்கிறீர், நானில்லையா உமக்கு. நீங்க இருக்கிறீங்க ஆனால் என் அப்பா எனக்குத் திரும்பிக் கிடைப்பார. எனக் கேவிக் கேவி அழுதாள்.நவீனுக்குத் தாங்கமுடியாமல் இருந்தது.

பின் தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டு. நவீன் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா என்றாள். சரி செய்கிறேன். என்ன சொல்லும் . நாங்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருப்போமா வாழ்நாள் பூராவும் எனக் கேட்க. நவினுக்கு தூ க்கிவாரிப்போட்டது.,என்ன? என்றான். ஆமாம் நவீன் நாங்கள் இருவரும்

ஒருவரை நன்றாகப் புரிந்தவர்கள். அதனால் நல்ல நட்பிற்கு அந்தப் புரிதல் போதுமே என்றாள்.நவீன் சரி இந்நிலையில் இவளிடம் அதுவும் கூறமுடியாது என்று நினைத்துச் சரி என்று சொல்லி விட்டு போனான்.

இப்படியும் நாட்கள் ஓடின .அப்பா இறந்து ஒரு வருடம் ஆச்சு.அப்பாவின் நண்பரும் வந்து அம்மாவிடம் கேட்டார். நண்பனின் ஆத்மா சாந்தியடைய இத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றும் அம்மா பதில் சொல்லவில்லை என்னைப் பார்த்தாள். பின்பு அவரிடம் நீங்களே லதாவுடன் கதைத்து முடிவை எடுங்கள் என்று சொல்லிவிட்டாள். சரி நான் லதாவுடன் கதைக்கிறேன் என்று சொல்லிச் சென்றார்.

ஒரு நல்ல நாளாகப் பார்த்து அப்பாவின் நண்பர் குடும்பம் வந்தனர். அவர்கள் மகனும் அதாவது லதாவின் வருங்காலக் கணவர் கதைத்தனர் லதாவைப் பார்த்து கேட்டார் நண்பர் என்னம்மா உனக்கு சம்மதம் தானே எனது மகனைச் செய்வதற்கு என்று,லதாவும் ஆம் என்று சொன்னாள்.அம்மாவுக்கு ஆச்சரியம்.அப்போது அப்பாவின் நண்பர் சொன்னார் என் நண்பனுக்கே பிடித்த மகன் அவன் மகளுக்கு பிடிக்க மாட்டானா. உங்கள் அப்பாவிற்கு சின்ன வயதிலிருந்தே என் மகன் ரூபனைப் பிடிக்கும். பகிடியாக சொல்லுவார்.இப்போது உண்மையாகி விட்டது சரி பிற கென்ன திருமணம் இனிதே நடந்தது. லதா அப்பா படத்தின் முன் நின்று அப்பா உங்கள் வாக்கை காப்பாத்தி விட்டேன். ஆனால் உங்களைக் காப்பாற்றமல் விட்டு விட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் என்று கண்ணீர் விட்டு அழுதாள். பின் அம்மாவின் காலில் விழுந்து மன்னிப்புப் கேட்டாள். அம்மா சொன்னாள் இதை முதல் செய்திருந்தால் அப்பா இருந்திருப்பாரே கொஞ்ச நாள் என அழுதாள்.

இப்படியே நாட்கள் சென்றன. லதாவுக்கு இரு பிள்ளைகள். ஒரு ஆண்,ஒரு பெண்.மகிழ்ச்சியான குடும்பம். அம்மாவும் இவர்களுடன் தான்.நவீனும் இடைக்கிடை தனது குடுபத்துடன் லதாவீட்டுக்கு வந்து போவான்.அவனுக்கும் இரு பிள்ளைகள். நவீன் நாங்கள் நல்ல நண்பர்கள் போல எங்கள் பிள்ளைகளும் அப்படி இருப்பார்களோ என, நவீன் சொன்னான்.அப்படி எதிர்பார்க்க முடியாது. விதி எப்படியோ.எம்மைப் பார்க்கவில்லையா.எதிர்பார்த்தபடி எதுவுமே நடப்பதில்லை,நடப்பவை நல்ல படி நடந்தால் நலமே.யன்னலினூடே பார்த்தாள்.புறாக்களைக் காணவில்லை இப்போது.இப்படித் தான் அவள் பழைய நினைவுகளும் பறந்துவிட்டனவோ!..

-முற்றும்-

## மாசுபடும் சுற்றாடல் சூழல்...

-காகிதத் துண்டு - 2-4 வாரங்கள், -வாழை இலை - 3-4 வாரங்கள்,
-காகிதப் பை - 1 மாதம், -செய்தித்தாள் - 1.5 மாதங்கள்,
-ஆப்பிள் கோர் - 2 மாதங்கள், -அட்டைப்பெட்டிகள் - 2 மாதங்கள்,
-காட்டன் கையுறை - 3 மாதங்கள், -ஆரஞ்சுத் தோல்கள் - 6 மாதங்கள்,
-ஒட்டுப் பலகை - 1-3 ஆண்டுகள், -கம்பளிச் சாக் - 1-5 ஆண்டுகள்,
-பால் அட்டைப்பெட்டிகள் - 5 ஆண்டுகள், -சிகரெட் துண்டுகள் - 10-12 ஆண்டுகள்,
-தோல் காலணிகள் - 25-40 ஆண்டுகள்,
-டின் செய்யப்பட்ட ஸ்டீல் கேன் - 50 ஆண்டுகள்,
-நுரைத்த பிளாஸ்டிக் கோப்பைகள் - 50 ஆண்டுகள்,
-பிளாஸ்டிக் கொள்கலன்கள் - 50-80 ஆண்டுகள்,
-அலுமினியக் கேன் - 200-500 ஆண்டுகள், -ரப்பர்-பூட் உறை - 50-80 ஆண்டுகள்,
-பிளாஸ்டிக் பாட்டில்கள் - 450 ஆண்டுகள், -டயப்பர்கள் - 550 ஆண்டுகள்.
-பிளாஸ்டிக் பாட்டில்கள் - 450 ஆண்டுகள், -டயப்பர்கள் - 550 ஆண்டுகள்.
-மீன்பிடி வலை - 600 ஆண்டுகள், -பிளாஸ்டிக் பைகள் - 200-1000 ஆண்டுகள்
இன்னும் நிறையவே உள்ளன...

நாங்கள் அன்றாடம் பாவிக்கும் பொருட்களைக் நாம் வாழும் மண்ணிலும் நீர் நிலைகளிலும் கண்டபடி வீசி எறிகின்றோம். இதனால் நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரினங்கள் விரைவாக அழிந்துவிடுகின்றன. நாம் வாழும் நிலம் மாசுபட்டு விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றமடைகின்றன. இதனால் இவ் உலகத்தில் வாழும் உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் உணவு கிடைக்காமல் போகும் ஆபத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே மேற்குறிப்பிட்ட பொருட்களையும் இன்னும் பல பொருட்களையும் கண்டபடி வெளியே வீசி எறிவதைத் தவிர்க்க வேண்டும். அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட கழிவுதொட்டிகளில் போடுவதே சிறந்தது. மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் பொருட்களை உரிய இடங்களில் போடவேண்டும்.

நாம் இந்தக்கழிவுகளையும் வெற்றுப் பொருட்களையும் உரிய இடங்களில் போடுவதுடன் நமது சந்ததிகளுக்கும் சிறுவயது தொடக்கம் இதைச் சொல்லுக்கொடுத்து அவர்களை வழம்படுத்தி வளர்க்க வேண்டும். தயவுசெய்து இந்தத் தகவலை உங்கள் நெட்வொர்க்கில் உங்களால் முடிந்தவரை பகிர்ந்து கொள்ளுங்கள். உலகளாவிய பசுமை இல்ல விளைவு தொடர்பான முக்கிய காரணங்களில் ஒன்று பிளாஸ்டிக் என்பது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக் கிறன் ...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோ.. சினிமா தொடர்நாடகம் போல 1, 2, 3,4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1,2,3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?.. கொண்டாட்டங்கள் வைப்போம்?.. கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ..தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!..ராசாத்திகள்!..

இனி கோடை வெய்யிலும் வந்து சிலருக்கு அலர்ஜி, வேறுசில வியாதிகள் வந்து வாட்டி எடுக்கப் போகுது. இது ஒரு புறம் இப்ப புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் பலர் இந்தக் கோடைக்கு தாயகம் சென்றுவர பல திட்டங்கள், விமானச்சீட்டுகள் பதிவுக்கு அல்லோலப்படுகிறார்கள். .

இனி விடுமுறைக்கு ஊருக்குப்போகப் பலர் திட்டம்போட்டிருக்க.. இந்த நாசமாய்போன கொரோனா ஒழியிதில்லை என்று பல ஆயிரம்பேருக்குக் கவலை பெருகிவிட்டுது பாருங்கோ.. ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்ணலாம், ஊரெல்லாம் சுற்றித்திரியலாம், கோயில் குளம் எல்லாம் பார்க்கலாம், கடற்கரையில தண்ணியடித்து, விளையாடிப் படுத்து உறங்கிப் பொழுதைப் போக்கலாம், பலவிதமாகப்போட்டோ எடுத்துப் பேஸ் புக்கில் போட்டு லைக் வாங்கலாம் என்றெல்லாம் ஆசை..எல்லாஆசையும் எப்படி நிறைவேறும் என்று பல்லாயிரம் பேருக்கு ஒரே கவலைதான்பாருங்கோ!..

சரி..சரி.. என்ன கவலைகள் இருந்தாலும் இந்த மயிலனனுக்குச் சில சங்கதிகள்

காதுகளில் விழுந்துகொண்டே இருக்கின்றன. ஒரு சம்பவத்தை உங்களோடு பகிரப்போகிறேன்..

சங்கதி இலங்கையில் ஒன்றாய் படித்தவர்கள் தற்போது மன்மதன் கனடாவில் இருபது வருடங்கள். குடும்பம் பிள்ளைகளோடு வசித்து வருகின்றான். கூடப்படித்த அம்மணி யாழ்ப்பாணத்தில் வங்கி ஒன்றில் கொழுத்த சம்பளத்துடன் நல்ல வேலை. கணவன் இரண்டு பிள்ளைகளோடு வாழ்க்கை ஓகோ என ஓடிக்கொண்டிருந்தது. கணவன் ஆஸ்பத்திரி ஒன்றில் சாதாரண உத்தியோகம்.

இந்தக் கனடா மன்மதன் உந்தப் பேஸ்புக்கை தடவித் துருவி ஆராய்ந்து தனது பாடசாலைத் தோழியைக் கண்டு பிடித்துவிட்டான். பிறகு என்ன சொல்லவும் வேண்டுமா?.. நாட்கள் நகரவே இவர்களின் பாடசாலைக் காதலும் அரும்பியது உண்மைதான் பாருங்கோ.. கொம்பியூட்டரில் சற்றிங்கில வெளிக்கிட்டு இருவரும் நல்ல நண்பர்களல்ல..காதலர்களாகவே மாறிவிட்டனர்.

கனடாத்தம்பிக்கு மூளை கடுமையாக வேலை செய்யத் தொடங்கவே..தான் கொழும்புக்கு ஒரு முக்கிய அலுவலாக வருகின்றேன்..சந்தித்துக் கதைக்க வேண்டும் என்று அவவை தனியாக கொழும்புக்கு வரும்படி கூறியிருக்கிறார். அவவும் வெளிநாட்டிலிருந்து வாறவனிடம் ஏதும் கறக்கலாம் என்று திட்டம்போட்டு தனது கணவனுக்குத் தெரியாமல் தனக்கு கொழும்பில் ஒரு கொன்விறன்ஸ் ஒரு கிழமை கொழும்புக்குப் போட்டு வாறன் என்று சொல்ல அவன்பாவியும் ஆமா போட்டுவிட்டான். ராசாத்தி கொழும்புக்குப் பறந்தது. மன்மதனும் கனடாவிலிருந்து பறந்து கொழும்புக்கு வந்துவிட்டான்.

இருவரும் கொழும்பில் கலந்துரையாடலில் ஆரம்பித்துவிடவே மன்மதனின் ஆசைவார்த்தைகளில் மயங்கி, இவனிடம் அம்பிட்டதை அள்ளவேண்டும் எனத் திட்டம் போட்டாள். இருவரும் கொழும்பில் பல இடங்களையும் சுற்றிப்பார்கிறதில ஆரம்பித்து யூஸ் குடித்து நல்ல கொட்டல் சாப்பாடு எனத் தொடர்ந்து மதுப்பாவனையில் போய் முடிந்தது. பிறகென்ன மதுப் போதையில் அவளை தன் கொட்டலுக்கு அழைத்துச்சென்று படுக்கையையும் பகிர்ந்துகொண்டான் மன்மதராசா.

தாலிகட்டியவளின் தொலைபேசியை இரண்டு நாளாகக் காணவில்லையே என்று ஏங்கித் தவிர்த்த புருசனும் இரண்டு பிள்ளைகளும் அவள் வேலை செய்த வங்கிக்குச் சென்று மனேஜரிடம் தனது மனைவி என்ன பயிற்சிக்குக் கொழும்புக்குப் போனவா?..இரண்டு நாளாக ரெலிபோனையும் காணவில்லை என்று விசாரிக்க விசயம் வெளிச்சுது பாருங்கோ.. மனேஜர் சொன்னார். அவர் ஒரு பயிற்சிக்கும் நாங்கள் அனுப்பவில்லை. அவா தனிப்பட்ட லீவு எடுத்துக்கெண்டு போயிருக்கிறார் எனப் பதில் கூற கணவன் ஏங்கித் தவித்தான் பாருங்கோவன்..

தாலிகட்டிய அன்புக்கணவனும் இரு பிள்ளைகளும் கொழும்புக்குப் பறந்து வந்து கண்டு பிடிக்கமுடியவில்லை. இறுதியாக ரெலிபோன் நம்பரைப் பொலிசுக்குக் கொடுத்து அவர்கள் தேடிய பொழுது அவளும் கனடா தம்பியும் ஒரு கொட்டலில் ஒரே றூமில் தங்கியிருந்த சங்கதி தெரியவந்தது.

பிறகென்ன பொலிஸ் விசாரணை அது இது என்று தொடர்ந்தது. பிள்ளைகளோ அம்மா?..அம்மா?..எனக் கதறி அழ, கணவனோ இவளைக் கொலை செய்தாலும் பறவாயில்லை என்ற நிலைக்கே வந்துவிட்டான். சட்ட திட்டம், பொலிஸ் இவை எல்லாம் சரிவருமா?.. பிள்ளைகள் இரண்டையும் யோசித்தான். அவர்களின் எதிர்காலத்தை யோசித்து மௌனமானான்.

கனடா மன்மதனோ பொலிசுக்கு பெருவாரி பணத்தை இறைத்து அங்கிருந்து தப்பி கனடாவுக்குப் பறந்துவிட்டான். இந்தப் பெண்ணோ தனது தவறை ஒப்புக்கொண்டு கணவனிடம் அழுது, நடித்து ஒருவாறு சமாதானமாகி யாழ்ப்பாணம் திரும்பினாள்..கணவனோ இன்றுவரை இந்த விடையத்தை ஒருவருக்கும் கூறாமல் மௌனமாகவே வாழ்வு நகர்கின்றது.

இந்தப் பேஸ்புக் காதல் எந்தளவுக்குக் கொண்டுபோய் விடுகின்றது என்று சிந்தித்துப்பாருங்கோ. வயதுவேறுபாடு, குடும்ப வாழ்க்கை, எதிர்கால வாழ்க்கை எல்லாவற்றையும் சீரழித்து சின்னா பின்னமாக்கி நடுத்தெருவில் கொண்டுபோய்விடுகின்றது

இந்தப் பேஸ்புக் ஆது இது என்று ஏராளம் உலகில் வரவாகக் கொட்டிக்கிடப்பது நல்லவழிகளுக்குப் பயன்படுத்தி மக்கள் அறிவுபூர்வமாகவும், நல்ல சிந்தனையுடன் எதிர்காலத்தை வளமாக்கவேண்டும் என்னும் நல் நோக்கத்திற்காக இருக்கும் போது, நம்மில் பெருவாரியானோர் தேவையில்லாத வழிகளில் பாவிப்பதால் பல கெடுதிகள் வந்து சேர்வதை நாம் கண்டுகொள்ளத் தவறுகின்றோம் பாருங்கோ.

இந்தச் சமூக இயந்திரனியல் ஊடகங்களின் கட்டுப்பாடு இல்லாமையினால் இன்று பிஞ்சுக்குழந்தைகள் துஸ்பிரயோகம், பெண்கள் துஸ்ப்பிரயோகம், கொலை, கொள்ளை, போதை, போன்ற சமூக சீர்கெடுகள் அதிகரித்தே காணப்படுகின்றன. ஆகவே பெற்றோர்களே உங்கள் சந்ததிகளை இக்கொடுமைகளிலிருந்து வழிதவறிச் செல்வதற்கு நீங்களே பொறுப்பாளிகளாக இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.. என இந்த மயிலன் உங்களை மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கிறான்.. அப்ப அடுத்த மறையும் மயிலன் ஒரு விடையத்தோட வருவான்!..அப்ப வரட்டே!..

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| வி | டு | மு | றை |
| டு | கா | ம் | ல |
| க | க | ட | ல் |
| தை | ம் | கு | க |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போ | ரா | ட் | ட | ம் | ட | கு |
| த் | கொ | ள் | ளை | வ | த | த் |
| து | மு | ன் | வு | ண | உ | து |
| க் | ம் | த | த | ஆ | டு | வி |
| கே | பு | ம | க | டு | ட் | ள |
| ச | வ் | ன் | டை | ட் | ப | க் |
| ர் | ல | ம | ச | பா | க் | கு |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **9** | 3 | 8 | **7** | 6 | **4** | **2** | **5** |
| **2** | **6** | 7 | 3 | **4** | 5 | 8 | **9** | **1** |
| 4 | 8 | **5** | **9** | 2 | **1** | **3** | 7 | 6 |
| 3 | **4** | 6 | 1 | 9 | 2 | **5** | 8 | **7** |
| 8 | 5 | **2** | **6** | 3 | 7 | **1** | 4 | 9 |
| **7** | 1 | 9 | 4 | 5 | **8** | 6 | 3 | 2 |
| **6** | **2** | 1 | 7 | **8** | **4** | 9 | 5 | 3 |
| 5 | **3** | **8** | 2 | **6** | 9 | **7** | 1 | **4** |
| **9** | 7 | 4 | 5 | **1** | **3** | **2** | 6 | 8 |

# உங்களுக்குத் தெரியுமா..

## தண்ணீரின் அவசியம்.

-தண்ணீரின் முக்கியத்துவம் நமக்குத் தெரிந்திருப்பினும் எப்போது எவ்வளவு தண்ணீர் அருந்த வேண்டும் என்ற விபரங்கள் தெரியாமல்தான் இருக்கின்றோம்.
-சரியான நேரத்தில் தண்ணீர் அருந்துவது நமது உடலின் பல பாகங்களையும் செவ்வனே செயல்பட வைக்கிறது.
-காலை எழுந்தவுடன் 350 மிலி தண்ணீர் அருந்துவது நமது உள்ளுறுப்புகள் அனைத்தையும் ஊக்குவிக்கும்.
-உணவுக்கு 30 நிமிடம் முன்பு 300 மிலி தண்ணீர் பருகுவது செரிமானத்துக்கு நல்லது.
-குளிப்பதற்கு முன்னர் ஒஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பது இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.
-இரவு படுக்கும் முன்னர் ஒரு டம்ளர் தண்ணீர் பருகுவது மாரடைப்பு, பக்கவாதம் இவற்றிலிருந்து பாதுகாக்கும்.
-தினசரி 2 லிட்டர் தண்ணீர் பருகாவிட்டால் நமது சிறுநீரகங்கள் பாதிக்கப்படும்

## உலர்ந்த திராட்சை..

-வெறும் 5 உலர்திராட்சை செய்யும் அற்புதம்: தூங்கும் முன்பு இப்படி சாப்பிட்டாலே போதும்
-உலர் திராட்சையானது பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. தினமும் உலர்ந்த திராட்சை சாப்பிட்டால் மலசிக்கல் பிரச்சினை தீரும்.-
-உலர் திராட்சையை சர்க்கரை நோயாளிகளும் தாராளமாக சாப்பிடலாம். ஏனெனில் இதில் நார்ச்சத்தும் இருப்பதால், உடலில் உள்ள கொழுப்பைக் குறைக்கவும் இரத்தத்தில் உள்ள சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கவும் திராட்சை உதவுகிறது.
-உலர் திராட்சையில் தாமிர சத்துக்கள் உள்ளதால் ரத்தத்தில் உள்ள சுவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். இதை சாப்பிடுவதால் எலும்பு மஜ்ஜைகள் வலுப்பெறும்.
-தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இதய துடிப்பு சீராகும். தினமும் படுக்கச் செல்வதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு 5 காய்ந்த திராட்சையை பாலில் போட்டு காய்ச்சியோ அல்லது அப்படியே சாப்பிட்டு வந்தால் சுகமான தூக்கம் வரும்.
-இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் உலர் திராட்சையை உட்க்கொண்டால் இரத்தசோகை குணமடையும்.

# அறிந்துகொள்வோம்..

-யாராவது நமக்கு ஏதாவது நன்மை தரும் செய்தியை பகிர்ந்து, அதனால் நாம் பலனடைந்தால் அத் தகவலை மற்றவர்களுக்கும் பகிருவது நமது தார்மீகப் பொறுப்பாகும். எனவே நீங்களும் உங்களது பங்கைச் செய்ய வேண்டுகிறேன்....
-புகை மற்றும் சிகரெட் புகை சூழ்ந்துள்ள இடத்தில் சுவாசிப்பது நமது நுரையீரல்களைக் கெடுக்கும்.
-துரித உணவு, அதிகநேரம் எண்ணெயில் வறுக்கப்பட்ட உணவு முதலியன நமது கல்லீரலுக்குக் கேடு.
-அதிக உப்பும் அதிக கொழுப்பும் இதயத்தை வெகுவாகப் பாதிக்கும்.
-அதிக இனிப்பு நமது கணையத்தைச் சேதப்படுத்தும்.
-இருளில் செல்போன் மற்றும் கணிணியில் வேலை செய்வது கண்களுக்குக் கெடுதல் விளைவிக்கும்.
-எதிர்மறை எண்ணங்கள் நமது மூளையைப் பாதிக்கும்.
-நமது குடும்பம், நட்பு, உற்றார், உறவினர்களின் அன்பும் அனுசரணையும், பராமரிப்பும் இல்லையெனில் நமது உயிருக்கு நன்றன்று.
-நமது எந்த உள்ளுறுப்பும் சந்தையில் கிடைக்காது.
-எனவே நல்ல கவனத்துடன் உடற்பயிற்சியையும் நாள்தோறும் தவறாது செய்து நமது உள்ளுறுப்புகளைப் பாதுகாப்போம்.
-கிடைத்தற்கரிய இறையின் கொடையான நமது உடல் ஒரு முறை கெட்டுவிட்டால் சீர்செய்யவே இயலாது. உடலை கெடாமல் பாதுகாப்பது ஒன்றே மிகவும் எளிய வழியாகும்.
-காலைச் சிற்றுண்டி உண்ணாவிட்டால் நமது இரைப்பை பாதிப்புறும்.
-இரவு 11 மணிக்குமேல் விழித்திருந்தாலும் காலை சூரிய உதயத்திற்குள் விழிக்காவிட்டாலும் நமது பித்தப்பை பாதிப்புறும்.
-மிகவும் குளிர்ந்த மற்றும் பழைய கெட்டுப்போகும் தருவாயில் இருக்கும் உணவை உண்பது நமது சிறுகுடலுக்குத் தீங்கு.
-அதிக அளவில் பொரித்த உணவு மற்றும் அதிக காரம் நமது பெருங்குடலுக்குக் கேடு...................................................................................................

**4ம் பக்கக் கணக்குப்புதிர் விடைகள்...**

A=24  B=15  C=2  D=23

E=22  F=5  G=25  F=4

**Magisches Zahlenquadrat**

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 11 | 12 | 23 | 20 |
| 18 | 6 | 25 | 5 | 16 |
| 26 | 10 | 17 | 9 | 8 |
| 15 | 21 | 13 | 19 | 2 |
| 7 | 22 | 3 | 14 | 24 |




# இஞ்சி + இஞ்சித்தேநீர்

-சர்க்கரை நோயாளிகள் இஞ்சி டீ குடித்தால் என்ன நடக்கும் தெரியுமா? இவ்வளவு பக்க விளைவுகள் இருக்கா?
-இஞ்சி நிறைய நன்மைகளை தரக்கூடிய ஓர் அற்புமான மசாலா பொருளாகும்.
-பெரும்பாலும் உணவுகளில் நாம் இஞ்சியை பயன்படுத்தி வருகிறோம்.இதில் ஏராளமான மருத்துவ குணங்கள் இருப்பதால் இதை மாத்திரை வடிவில் கூட பயன்படுத்தி வருவது உண்டு.
-இஞ்சியில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் காணப்படுவதால் வலி மற்றும் வீக்கத்தை போக்க உதவுகிறது.
-இது உடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களை நடுநிலையாக்கும் ஒரு ஆக்ஸிஜனேற்றயாகும்.
-இஞ்சி புற்றுநோயை குறைக்கும் ஆற்றலை கொண்டுள்ளது. இப்படி ஏராளமான நன்மைகளை அளிக்கும் இஞ்சியை சிலர் சாப்பிட்டால் பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.
-ஒருவர் தினசரி அளவில் இஞ்சியை நாள் ஒன்றுக்கு 4 கிராமுக்கு மேல் சேர்க்க கூடாது என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.
-30 நாட்கள் இஞ்சியை எடுத்துக்கொண்டால் நடக்கும் அற்புதம்: பலருக்கும் தெரியாத ரகசியம்
-பொதுவாக இஞ்சி ஒரு சிறந்த மருத்துவ குணம் கொண்டுள்ள உணவுப் பொருள். நாம் அன்றாடம் சேர்த்துக் கொள்ள உணவுப் பொருட்களில் இஞ்சி முதன்மையானது.
-ஏனெனில் இது உடலில் கொழுப்பு சேராமல் இருக்கவும், செரிமானம் சிறக்கவும், இரத்தம் ஆரோக்கியமாக இருக்கவும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் உதவுகிறது.

-இதனை அன்றாடம் உணவில் சேர்த்து கொண்டால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.
-30 நாட்கள் தினமும் இஞ்சியை உணவில் சேர்த்து உண்டு வருவதால் உங்கள் உடலில் உள்ள ஜி.ஐ குழாய் சீராக நலன் பெற்று புத்துணர்ச்சி அடையும். எனவே வெறும் 1.2 கிராம் அளவு இஞ்சியை ஒரு மாத காலம் உட்கொண்டு வந்தாலே 50 வீதம் செரிமான பிரச்சனைகளுக்கு தீர்வுக் காண முடியும்.
-குமட்டல் பிரச்சனை உள்ளவர்கள் இஞ்சி டீ அல்லது இஞ்சியை அப்படியே சாப்பிடுவது குமட்டலை தடுக்கும். மேலும், கர்ப்பகாலத்தில் பெண்களுக்கு உண்டாகும் காலை நேர உடல் சோர்வு அல்லது உடல்நலம் குன்றுதல் போன்றவற்றை சரி செய்யும். அதற்கு தினமும் 1.5 கிராம் அளவு இஞ்சியை சேர்த்து வந்தாலே போதுமானது.
-அன்றாட உணவில் இஞ்சியை சிறிதளவு சேர்த்துக் உட்கொள்வது தசை வலிகளை 25வீதம் அளவு குறைக்க செய்கிறது. மேலும், பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் உண்டாகும் வலியை குறைக்கவும் கூட பயனளிக்கிறது.
-நீரிழிவு நோயாளிகள் தினமும் 2 கிராம் அளவு இஞ்சியை உட்கொண்டு வந்தால் இரத்த சர்க்கரை அளவை வெகுவாக குறைக்க முடியும். மேலும், இது 10வீதம் வரை இதய நோய்கள் உண்டாகும் அபாயத்தையும் குறைக்கிறது.
-கொலஸ்ட்ரால் பிரச்சனை இருப்பவர்கள் 45 நாட்கள் அன்றாட உணவு முறையில் 3 கிராம் அளவு இஞ்சியை சேர்த்து உண்டு வந்தால் கொலஸ்ட்ராலை கணிசமான அளவு குறைக்க முடியும்.
-தினமும் 2 கிராம் அளவு இஞ்சியை உணவில் சேர்த்துக் கொள்வது புற்றுநோய் கட்டியின் வளர்ச்சியை தடுக்கும்.-இஞ்சியில் இருக்கும் ஆண்டி-ஆக்ஸிடன்ட்ஸ் மூளையின் செயற்திறனை ஊக்குவிக்கிறது. இப்படி மூளையின் ஆரோக்கியத்தை பலவகையில் ஊக்குவிக்கிறது இஞ்சி. ............

..............................................................................

## வினாடிக்கு 1,000 டொலர்கள் இலாபமீட்டும் தடுப்பூசி நிறுவனங்கள்....

பைசர், பயொஎன்டெக், மொடர்னஹ (Pfizer, BioNTech, Moderna) ஆகிய மருந்தாக்க நிறுவனங்கள் அவற்றின் கொவிட்-19 மருந்துகளின் மூலம் நிமிடத்துக்கு மொத்தம் 65,000 டொலர் இலாபம் ஈட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்த நிறுவனங்கள் அவற்றின் தடுப்புமருந்தில் பெரும்பாலானவற்றைப் பணக்கார நாடுகளுக்கு விற்றுள்ளதாக நம்பப்படுகிறது. அதன் காரணமாக ஏழை நாடுகளில் தடுப்பு மருந்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தடுப்புமருந்து கூட்டணி எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த 3 மருந்தாக்க நிறுவனங்களும் இவ்வாண்டு மட்டும் மொத்தம் 34 பில்லியன் டொலர் இலாபம் ஈட்டலாம் என அந்த அமைப்பு ஊகித்துள்ளது. அப்படியானால் வினாடிக்கு அவை 1,000 டொலர் இலாபம் ஈட்டுகின்றன.



# ஆரஞ்சுப்பழம்

-கொலஸ்ட்ராலை குறைத்து இதயத்திற்கு பலம் தரும் அற்புத பழம்ஆரஞ்சு பழம் போன்ற சிட்ரஸ் வகை பழங்களில் வைட்டமின் சி அதிக அளவில் உள்ளது.

-ஆரஞ்சில் வைட்டமின் சி மட்டுமில்லாமல் கால்சியம், பொட்டாசியம், நார்ச்சத்து வைட்டமின் ஏ மற்றும் பீட்டா கரோட்டீன் போன்ற பல சத்துக்கள் உள்ளன.

-ஆரஞ்சு மிகக் குறைவான அளவு கலோரி கொண்ட பழமாக இருந்தாலும் உடல் நலத்திற்கு ஏராளமான நன்மைகளை தரக்கூடியதாக உள்ளது.அவை கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்துகிறது.

-ஆரஞ்சு பழத்தில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்துக்கள் இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவை குறைத்து நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கிறது.

-ஆரஞ்சு கொலஸ்ட்ராலை குறைத்து இதயம் சீராக இயங்குவதற்கு உதவி செய்கிறது. உடலில் பொட்டாசியம் சத்து குறையும் போதுதான் இதய சம்பந்தமான பிரச்சினைகள் தோன்ற ஆரம்பிகின்றன ஆரஞ்சு பழத்தில் உள்ள போட்டாசியம் மற்றும் இரும்பு சத்து இதய சுவர்களை பலப்படுத்துவதன் மூலம் இதயத்தை பாதுக்காக்கிறது.

-கண் சம்பந்தமான பிரச்சினை உள்ளவர்கள் ஆரஞ்சு பழம் சாப்பிட்டுவர இதில் இருக்கக்கூடிய கரோட்டினாய்டுகள் என்னும் வேதிப்பொருள் விட்டமின் ஏ சத்தாக மாறி கண் சம்பந்தமான பிரச்சினைகள் குணமாகும்.


அனா ஜார்விஸ்


ரீவ்ஸ் ஜார்வீஸ்

# அன்னையர் தினம்!..

செல்வி சாமினா சிவதாசன்
எசன் - யேர்மனி

இந்த உலகில் உறவுகளைப் போற்றிக் கொண்டாடுவதற்குப் பல்வேறு தினங்கள் உண்டு. இதில் அன்னை என்ற புனிதமான உறவை நினைவூட்டும் தினமே அன்னையர் தினம் ஆகும். இத்தினமானது ஆதிகாலத்தில் தாய்க்கடவுளுக்குரிய விழாவாகப் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாகக் கொண்டாடப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

16ம் நூற்றாண்டில் கிரீஸ் நாட்டில் "Mothering Sunday" என்ற நாள் முதன்முதலாக அனுசரிக்கப்பட்டிருக்கின்றது. ஈஸ்டர் வரும் மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை இயேசுவின் தாயை நினைவுகூறும் வகையில் இந்தநாள் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான நிலையில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் தொடங்கிய அன்னையர் தினமே இன்று பெரும்பாலான உலகளாவிய நாடுகளில் கொண்டாடப்படுகின்றது.

"ஜார்விஸ்" என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா (Virginia) மாநிலத்தில் கிராப்டன் (Grafton) என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தினால் அமெரிக்க வீரர்கள் பலியாக அவர்களின் குடும்பங்கள் சிதைந்து சீரழிந்து நாலா பக்கமும் சிதறிப்போக, பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரவும் அவர்களின் நல் வாழ்க்கைக்கும் சமாதானத்திற்கும் தன் இறுதி மூச்சுவரை அயராது பாடுபட்டு சமூகசேவகியாகவே வாழ்ந்து 1904ல் ஜார்விஸ் மறைந்தார். இவரின் மகள் அனா ஜார்விஸ் (Anna Jarvis) முதன்முதலாக தனது அன்னையின் நினைவாக உள்ளூரில் உள்ள மெதடிஸ்ட் (சர்ச்சில்) தேவாலயத்தில் 1908ம் ஆண்டு மே மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தினார்.

தனது அன்னையைப் பாராட்டிச் சீராட்டி அன்னையர் தினம் கொண்டாடிய முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெற்றார். சமூக நலனில் அக்கறைகொண்ட ஜார்விஸ் ஏதாவது ஒரு நாளையாவது எல்லோரும் தங்களது தாயை அவர் உயிரோடு இருந்தாலும்சரி இல்லாவிட்டாலும்சரி அவளது தியாகத்தையும் தங்களுக்கு அவர்செய்த சேவைகளை ஈடு இணையற்ற பணிகளையும் நினைத்து அவளைக் கௌரவப்படுத்த வேண்டும் என்று விரும்பினார்.

இதைத்தொடர்ந்து அனா ஜார்விஸ் 1913ம் ஆண்டில் தன்பணி நிமித்தம் பென்சில்வேனியா (Pennsylvenia) மாநிலத்தில் பிலடெல்பியாவில் (Philadelphia) குடியேறினார். தாயார் விட்டுச் சென்ற சமூகசேவையை மகள் ஜார்விஸ் தன் தனிப்பெரும் கடமையாகக் கருதி தொடர்ந்தார். கஸ்டப்படுகின்ற வாழ்க்கையில் இன்னலும் சோதனைகளும் ஒரே சேரத்தாக்கி மனம்வெந்து, நொந்து சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களுக்கான அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார்.

தன் தாயாரின் நினைவாகவும் தத்தம் வீடுகளில் அவரவர் அன்னையர்களும் கௌரவிக்கப்பட வேண்டும். எல்லோர் இல்லங்களிலும் அன்றைய தினம் மகிழ்ச்சி ததும்பவேண்டும் என்று எண்ணினார். அரசும் அவர் கருத்தை ஏற்று 1913ம் ஆண்டு முதல் அன்னையர் தினம் என அங்கீகரித்து அறிவித்தது. மாநில அரசு அங்கீகரித்தாலும் அனா ஜார்விஸ் திருப்தியடையாமல் ஆயிரக்கணக்கில் அரசியல்வாதிகளுக்கும் தன்னார்வ அமைப்புகளுக்கும் கடிதம் எழுதி அமெரிக்கா முழுவதும் "அன்னையர் தினம்" கொண்டாடவும் அந்நாளை அரசின் விடுமுறைநாளாகவும் அங்கீகரித்து அறிவிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்க ஜனாதிபதிக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவரின் வேண்டுகோளையும் நியாயத்தன்மைகளையும் ஏற்றுக்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்ஸன் (Woodrow Wilson) 1914ம் ஆண்டுமுதல் வருடந்தோறும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை அதிகாரபூர்வமான அன்னையர் தினமாகவும் அன்று விடுமுறைதினமாகவும் இருக்கும் என அறிவிப்பை வெளியிட அதனை அமெரிக்க காங்கிரசும் ஏற்றுக்கொண்டது. பின்பு கனடா அரசாங்கமும் ஏற்று அங்கீகரித்து அறிவித்தது. அது மட்டுமல்ல 46 நாடுகளில் இதே நாளில் "அன்னையர் தினம்" என அறிவித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

தனது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையிட்டு ஜார்விஸ் அளவற்ற மகிழ்ச்சியடைந்தாலும் முழுமனநிறைவு அடையவில்லை. 46 நாடுகளில் மட்டுமல்ல உலகெங்கும் அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் தொடர்ந்து ஈடுபட்டார். உலகம் முழுவதும் அன்னையர்தினம் அனுசரிக்கப்பட வேண்டும், ஒவ்வொரு வீட்டிலும் அன்னையைப் போற்றுகின்ற, வாழ்த்துகின்ற, மகிழ்விக்கின்ற நாளாக அன்றைய தினம் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என்பதுதான் என் ஆசை என்று தனது 84வது வயதில்

தனியார் மருத்துவ மனையில் இறப்பதற்குமுன் தன்னைச் சந்தித்த நிருபர்களிடம் வெளிப்படுத்தினார். இன்று நாம் கொண்டாடும் அன்னையர் தினம் அன்னைகளுக்கெல்லாம் அன்னையாகத் திகழ்ந்த அனா ஜார்விஸ் என்பவரின் முயற்சியினாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவர் திருமணமானவரோ பிள்ளைகளைப் பெற்றெடுத்தவரோ அல்ல. ஆனால் அன்னைகளுக்காக அரும்பாடுபட்டவர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

ஜார்விஸின் வெற்றிகரமான பணிக்குப்பின் முதலாம் உலகப்போர்க் காலத்தில் ஐரோப்பாவிற்கும் அன்னையர்தினம் பரவியது. ஐரோப்பாவில் முதலில் சுவிஸ்லாந்தில் இத்தினம் 1917ம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அதற்குப்பின்பு இத்தினம் ஆஸ்திரியா (Austria) மற்றும் வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள ஸ்கன்டிநேவியன் (Scandinavia) நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பாக ஜேர்மனியில் 1922ம் ஆண்டு இத்தினமானது பூக்கடை வியாபாரச் சங்கத்தின் முயற்சியின் பயனாக முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தினமானது வெவ்வேறு நாடுகளில் பலவிதமாக வேறுபட்ட நாட்களில் கொண்டாடப்படுகின்றது. இலங்கை, ஜேர்மனி, இந்தியா, கனடா, இத்தாலி, சுவீஸ்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் அன்னையர்தினம் வைகாசி மாதம் 2வது ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது. ஆப்கானிஸ்தான், உக்ரைன், ரஷ்ஷியா போன்ற சில நாடுகளில் அன்னையர் தினத்தை உலக மகளிர்தினம் வரும் பங்குனி 8 அன்று அல்லது மகளிர் தினத்திற்குப் பதிலாக இத்தினத்தை கொண்டாடுவார்கள். இவற்றிற்கு மாறாகச் சில நாடுகளில் அன்னையர் தினத்திற்குப் பதிலாக பெற்றோர் தினம் என்றும், அன்னை குழந்தைகள் தினம் என்றும் வெவ்வேறு விதமாக அன்னையைப் போற்றுவார்கள்.

இந்த உலகில் தாய் என்பவள் இல்லை என்றால் மனிதன் என்ற பிறப்பே இல்லை. அதாவது நாம் இந்த உலகில் தோன்றக்காரணமாக இருப்பவர் நம் அம்மா. நமக்கு உயிரையும் உடலையும் கொடுத்தது மட்டுமன்றி இளமையிலிருந்தே நம்மைத் தாலாட்டிச் சீராட்டி, பாராட்டி வளர்த்து ஆளாக்குவதில் தாய் என்ற உறவின் பங்கினை வேறு எவரும் செய்ய இயலாது. ஔவையார் "தாயிற்சிறந்த கோவிலுமில்லை" என்ற வைர வரிகளில் தாயின் புனிதத்துவம், தாயின் பெருமை, தாய்மையின் தியாகம் போன்றவற்றை எடுத்துக்கூறியுள்ளார்.

ஒரு பெண்ணானவள் வாழ்நாளில் பல பாத்திரங்களில் வலம் வந்தாலும் "அன்னை" என்ற பாத்திரம் மிக உன்னதமான இடத்தை வகிக்கின்றது. எனவே அன்னையர் தினம் என்பது ஒரு உயரிய தினம். அன்னையரை மகிழ்விக்க நமது சக்திக்கேற்றாற்போல எதைச்செய்ய முடியுமோ அதைச் செய்து உண்மையான அன்பிற்காகவும் தனது அன்னைக்கு நன்றிகூறும் விதத்திலும் இருக்க வேண்டும் என்று நினைத்துப் போராடிய அனா ஜார்விஸின் உண்மையான நோக்கத்தை நாம் புரிந்து எமது அன்னையை வாழ்த்தி வணங்கி மகிழ்வித்து இத்தினத்தைக் கொண்டாடுவோம்!..

# மனிதா...உன்னுடைய மரணம் எப்படியிருக்க வேண்டும்....

(சிறப்பு பதிவு)

இந்த உலகம் உன்னுடைய இறந்துபோன உடம்பிற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்காது.
உற்றார் உறவினர்கள் உன் உயிர் போன உடம்புக்கு செய்ய வேண்டிய மத சம்பிரதாயங்களை தெரிந்தவரை செய்வார்கள்.
அதாவது
1. உனது ஆடைகளை களைவர்.
2. குளிப்பாட்டுவர்.
3. புது துணி அணிவிப்பர்.
4. உன்னுடைய வீட்டை விட்டு ஊனுடம்பை வெளியே கொண்டு போவார்கள்
5. அடக்க ஸ்த்தலம் என்கிற புதிய இடத்திற்கு உன்னை எடுத்துச் செல்வார்கள்.
6. உன் மரணத்திற்காக கூடும் கூட்டம் பெரும்பாலும் உனது அனுதாபத்திற்காக அல்ல. உன் குடும்பத்தினர்கள் தவறாக நினைத்து விடுவார்களோ என்கிற எண்ணத்தினால் தான் என்பதை நினைவு கொள்.
7. உனது கூட வரும் பலர் உன்னை அடக்கம் செய்வதிலேயே குறியாக இருப்பார்கள்.
8. நீ உபயோகித்த உன்னுடைய உடமைகள், உடைகள், புத்தகங்கள், பைகள், கண் கண்ணாடி, செருப்புகள் எல்லாம் வெளியேற்றப்படும். உன்னுடைய பொருட்கள் உன்னை விட்டும், உன் வீட்டை விட்டும் பிரிக்கப்படும். அல்லது வெளியில் வீசப்படும்.
உன்னை விட்டு நீங்குவது...
1. உன் உயிர் 2. உனது அழகு
3. சொத்துக்கள். 4. பிள்ளைகள்
5. வீடு, மாளிகைகள் 6. மனைவி மற்றும் பிள்ளைகள்.....
இதில் உனக்கென்று எதனை தயாரித்து வைத்துள்ளாய்......?
உறுதியாக விளங்கிக்கொள். உனது பிரிவால் இந்த உலகம் கவலைப்படாது. பொருளாதாரம் தடைப்படாது.
உன்னுடைய உத்தியோகத்தின் வேலைக்கு வேறொருவர் சந்தோசமாக வருவார். உனது சொத்து வாரிசுகளுக்கு போய்விடும்.
எவ்வளவு சொத்து சுகத்தோடு வாழ்ந்தாலும் வெறும் கையுடன் தான் படுத்திருப்பாய்.....நீ மரணித்தவுடன் முதலில் மறைவது உனது பெயரே....!!
(பிணம் அல்லது சவம், பொடி என்று மாறும்.....)

பொடியை எப்ப எடுப்பாங்கள் ) உன் உறவுகளே இப்படித்தான் அழைப்பார்கள்.
உன்னைப்பற்றிய கவலை மூன்று பங்காக பிரிக்கப்படும்
1. உன்னை அறிந்தவர்கள் சொல்வார்கள்....
பாவம் நல்ல மனுசன் போயிட்டான் என்று....
2. நண்பர்கள் சில தினங்களுக்கு உன்னை நினைப்பார்கள்...
3. உன் குடும்பத்தினர் சில மாதங்கள் கவலைபடுவார்கள் அவ்வளவுதான்.
பிறகு நீ ஒருத்தன் இருந்ததே மறக்கப்படும்.
மக்களுடன் உன்னுடைய தொடர்பு முடிந்து விட்டது.
உண்மையான உனது வாழ்க்கை இப்போது தான் ஆரம்பமாகப் போகிறது.
மனிதா....
உனது குடும்ப கௌரவம், பணம், பட்டம், பதவி என்று வாழும் போதே ""வாழாமல்"" உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்.
உன் மனைவி, குழந்தைகளுக்கு அத்தியாவசிய தேவைக்கு மட்டும் சேர்த்துவை.
அதிகமாக உழைத்து உன் வாழ்க்கையை வாழாமல் இழந்து விடாதே...
இறுதியில் உன்னுடன் வருவது... நீ செய்த நற்காரியங்கள்..
நீ நன்முறையில் வளர்த்த உன் பிள்ளைகளின் பிரார்த்தனைகள்...
நீ செய்த உதவியும் மற்றும் தர்மங்கள்....
இதை மனதில் நிறுத்தி ஒவ்வொரு நாளும் செயல்பட்டால்
இந்த உலகத்திலும், இறந்த பின்னும் நன்மையடைவாய்....
நல்லவனுக்கு மரணம் முடிவு இல்லை, கொடியவனுக்கு மரணம் முடிவாகும்,
இன்று தெருவில், ஊரில், அலுவலகத்தில், அண்டை வீட்டில் ,
வயலில் , களத்தில்- களத்து மேட்டில் ,எங்கும் மனித உள்ளங்களில் வாழ முயன்று பார் ,
இதழ்கள் புன்னகை வீசட்டும் ,அன்பு, கருணை கண்ணில் ஒளிரட்டும்,
கைகள் உதவிட எழும்பட்டும் .உன்னை மரணம் கவ்வுவதற்குள்....
எரிமேட்டில் புகையாக வெளிப்படும் முன் ,ஒருபிடி சாம்பலாக மாறும்முன்...
இல்லையா.. கல்லறை கூட்டுக்குள் உடல் அடங்கும்முன்...
அடுத்தவர் உள்ளங்களில் இடம்பிடி... அன்பை தூவி வாழு.
பணத்தை கட்டி கொண்டு அழதே....மற்றவர் மனம் நோகும்படி வாழாதே....
வாழ்க்கை என்பது ஓட்டப் பந்தயமல்ல....
நடை பழகும் நடை வண்டியைப்போல....
அழகாய் உன் வாழ்க்கையை வழி நடத்திடு!
உயர்ந்த உணர்வை அடைந்திடு! வாழ்க வளமுடன்..

-வேதாந்த மகரிஷி -

# யேர்மனிய அரசியலில் தமிழ்ப்பெண்!..




BÜNDNIS 90 DIE GRÜNEN

எனது பெயர் சாந்த ரூபிணி டேவிட்.எல்லோரும் ரூபி டேவிட் என்று அழைப்பதால் என்னை ரூபிடேவிட் என்று அனைவரும் அறிந்திருகிறார்கள். எனக்கு வயது33,திருமணமாகி நான் என் கணவருடன் 2018ம் ஆண்டில் இருந்து யேர்மனி - லீவகூசன் நகரில் (Leverkusen) வசித்து வருகின்றேன். எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கின்றார்.

யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களில் ஒன்றான டுசுல்டோவ் (Düsseldorf) மாநிலப் பாராளுமன்றத்தில்(Landtag Düsseldorf) அரசியல் அறிவியல் பகுதியில் நான் வேலை செய்கிறேன்.நான் 11 வருடங்களாக கிறீன் (பசுமைக்கட்சி) (BÜNDNIS 90/DIE GRUNEN)கட்சியில் அங்கத்தவராக இருக்கிறேன்.ஏனெனில் அவர்கள் ஈழத்தமிழ்மக்கள் மீது காட்டிய கருணையால்.நான் எனது சொந்த விருப்பத்தில் அரசியலில் ஈடுபடத் தீர்மானித்து சேர்ந்துகொண்டேன்.

எனது தங்கை வலது குறைந்த பெண்பிள்ளை என்பதால் எனக்கு அவரால் ஏற்பட்ட அனுபவங்களால் அவர்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் பாடுபடவேண்டும் என்று உறுதி கொண்டேன்.நான் மக்களுக்குகாகச் சேவை செய்ய நினைப்பது-

1.ஈழத்தமிழர்களை நாட்டிற்கு திருப்பியனுவதை தடுத்து நிறுத்தவேண்டும்.

2.மக்கள் வீடுகள் எடுப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள் அவர்கள் காசு கட்டக்கூடியதாக சாதாரண நிலையில் எல்லோரும் வீடுகள் பெற்றுக்கொள்ளும் வசதி செய்யவேண்டும்.

3.நோயாளிகளைப் பராமரிப்போர் (Pflege) முதியோர்களை பராமரிப்போர்(AltenPflege) பிள்ளைகளைப் பராமரிப்போர்,(Erzieher) ஆசிரியர்கள் (Lehrer) போன்றோருக்கு போதிய சம்பளம் கொடுக்கச் செய்ய வேண்டும்.

4. மாற்றுத்திறனாளிகள் சாதாரண மக்களைப் போல் இவர்களும் வாழவேண்டும்.வேற்றுமை காட்டாது வாழவேண்டும்.அவர்களுக்கு வேண்டிய உரிமைகள் சலுகைகள் கொடுக்கவேண்டும்.

என்பது எனது குறிக்கோளாக இருக்கிறன. இதை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால் மக்களே நீங்கள் லீவகூசன் நகரில் வசிக்கும் தமிழ் உறவுகளே உங்களுடைய முதலாவது வாக்கையும் ,இரண்டாவது வாக்கையும் (1.Stimme und 2.Stimme)உங்கள் இடத்தில் உள்ள கிறீன் கட்சிக்கு (பசுமைக்கட்சி) புள்ளடி போடுங்கள். (N.R.W.)இன் வசிக்கும் உறவுகளே உங்கள் வாக்குச்சீட்டில் 2 (2.Stimme)வது இடத்தில் உள்ள கிறீன் கட்சிக்கு புள்ளடி போடுங்கள்..

எதிர்வரும் 15.05.2020 அன்று நடைபெற இருக்கும் நோத் றைன் வெஸ்பாளின் மாநில பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்களாகிய நீங்கள் அளிக்கும் வாக்குகளால் கிறீன் கட்சிக்கு 20% கூடுதலாக வாக்குகள் கிடைக்கும்.டுசுல்டோப் பாராளுமன்றத்தில் எனக்கு ஒரு இருக்கை கிடைக்கும். என்னாலும் கதைக்க முடியும். தமிழ் மக்களுக்காக சேவை புரிய முடியும். ஆகவே உறவுகளே உங்களுடைய வாக்குகளை கிறீன் கட்சிக்கு போடுங்கள் என்று அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்..

நன்றிகளுடன்... **திருமதி சாந்தரூபினி டேவிட்**
**பசுமைக்கட்சி வேட்பாளர் - யேர்மனி**

**அன்பானவர்களே!..**

புலம்பெயர் வாழ்வில் கனடா, ஐரோப்பா நாடுகளில் தமிழ்ப்பெண்களும் இன்று அரசியலில் கணிசமான பங்கு வகிக்கிறார்கள். கனடா, நோர்வே நாடுகளில் பாராளுமன்றங்களிலும் உறுப்பினராக இருக்கிறார்கள். காரணம் அரசியலில் தமிழர்களாகிய நாம் காட்டிவரும் அக்கறையே எனக்குறிப்பிடலாம்.

ஆகவே தமிழ்பெண்களை அரசியலில் பிரவேசிக்க வைத்து, வெற்றிக்கொடிநாட்டி, புகழ்பெற வைப்பது புலம்பெயர்வாழ் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். அந்தவகையில் இந்தத் தேர்தலில் போட்டியிடும் திருமதி சாந்தரூபினி டேவிட் அவர்கள் வெற்றிபெற நாம் எல்லோரும் வாக்களிப்போம்..

-ஆசிரியர்- "மண்" சஞ்சிகை




## புதிய முதலமைச்சர் அங்க றேலிங்கர் (Anke Rehlinger)

**23 வருடங்களின் பின்பு வெற்றிபெற்றது ஐனு கட்சி**

**யேர்மனி - சார்லாண்ட் மாநில தேர்தல் முடிவு...2022**

**யேர்மனியின் மத்திய அரசின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது.**

யேர்மனியின் 16 மாநிலங்களின் ஒன்றான சார்லாண்ட் மாநிலத்தின் தேர்தல் 27.03.2022 அன்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில் யேர்மனியின் பிரதான ஆளும்கட்சியான எஸ்.பி..டி கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. அதாவது 51 இருக்கைகள் கொண்ட மாநில அரசில் எஸ்.பி.டி கட்சி 29 இருக்கைகளைப் பிடித்து 23 வருடங்களின் பின் வெற்றிபெற்றுச் சாதனை படைத்துள்ளது.

27.3.2022 அன்று நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள்..

| கட்சி | -வாக்குவீதம் | - இருக்கைகள் |
|---|---|---|
| எஸ்.பி. டி கட்சி | - 43.05 | - 29 பேர் |
| சி.டி.யு கட்சி | - 28.5 | - 19 பேர் |
| ஏ.டி கட்சி | - 05.7 | - 03 பேர் |
| பசுமைக்கட்சி | - 04.9 | - 00 |
| எவ்.டி.பி கட்சி | - 04.8 | - 00 |
| இடதுசாரிகட்சி | - 02.6 | - 00 |
| ஏனையகட்சிகள் | - 09.9 | - 00 |
| | | --------------- |
| மொத்தம் | | 51 பேர் (M.P கள்) |

இந்த மாநிலத்தைப்பற்றிய சிறுகுறிப்பைப் பார்ப்போம்..

31.07.1945ம் ஆண்டு உருவாகிய இந்த மாநிலத்தின் பரப்பளப்பு 2.570 சதுரகிலோமீட்டர். இதன் எல்லை நாடுகளாக பெல்ஜியம், பிரான்ஸ் நாடுகள் காணப்படுகின்றன. மக்கள் தொகை சுமார் ஒரு கோடி (9.90.509) தலைநகர்

சார்புறூக்கன் (Saarbrücken) சமயத்தவர்களாக கத்தோலிக்கர் 56 வீதம் புரட்டஸ்தாந்தினர் 18 வீதம், ஏனைய மதத்தவர்கள் 26 வீதம். இந்த மாநிலத்தின் வேலையில்லாதோர் எண்ணிக்கை 6.1வீதமாகும். இந்த மாநிலத்தின் முதலமைச்சர்களாக மாறி..மாறி CDU , SPD கட்சிகளைச் சேர்ந்தவர்களே இருந்திருக்கிறார்கள். இறுதியாகக் கடந்த நான்கு வருடங்களாக CDU கட்சியைச் சேர்ந்த ரொபியாஸ் கன்ஸ் என்பவரே (Topias Hans) இருந்து வருகின்றார். இந்த மாநிலத்தில் கணிசமான தமிழர்களும் குடியுரிமைபெற்று 1980 ஆண்டிலிருந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.


யேர்மனிய மாநில முதலமைச்சர்களைப் பற்றிய சிறுகுறிப்பு..
யேர்மனியில் 16 மாநிலங்களாக அரசியல் அரச கட்டமைப்பு நடைமுறையிலுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு முதலமைச்சர் தெரிவுசெய்யப்படுவார். 4 வருடங்களுக்கு ஒருதடவை தேர்தல் நடைபெறும். இந்தப் பதினாறு மாநிலங்களின் தற்போதைய முதலமைச்சர்களின் கட்சி விபரம் விபரம்..

CSU - 1
Linke - 1
Grüne - 1
CDU - 5
SPD - 8

16 முதலமைச்சர்களில் 4 பேர் பெண்கள். இந்த நால்வரும் SPD கட்சியைச் சேர்ந்தவர்கள். (பேர்ளின், றையின்லாண்ட், மக்லன்பேர்க் வோக்மன், சார்லாண்ட்)






# யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்...

-தொகுப்பு:- சாந்தினி துரையரங்கன்-

## யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 11






**திருமதி கீத்தாராணி பரமானந்தன்**

| | | |
|---|---|---|
| பெயர் | - | கீத்தாராணி பரமானந்தன் |
| பிறப்பு | - | யாழ்ப்பாணம் திருநெல்வேலி - 20.03.1959 |
| தந்தை தாய் | - | திரு குணராஜா, திருமதி குணராஜா பரமேஸ்வரி |
| கல்வி | - | பரமேஸ்வராக் கல்லூரி,<br>யாழ் இந்து மகளீர் கல்லூரி<br>வீணை இசை தரம் - 6 வடஇலங்கை சங்கீத சபை. |
| எழுத்துத்துறை | - | கவிதை, சிறுகதை, கட்டுரை |
| படைப்புகள் | - | 1. சிறுகதை தொகுப்பு சுவடுகள் - 10.06.2018<br>2. கவிதைகளிள் தொகுப்பு முகவரி -10.06.2018 |

தற்போதைய வதிவிடம் - கேவலார் - Kevelaer

தாயகத்தில் இருக்கும் போது அவரின் தந்தை அவர்களுக்கு ஊட்டிய தமிழார்வத்தால் வீரகேசரி வாரமலருக்கு சின்னச் சின்னக் கவிகளை எழுதியிருந்தார். நாட்டுச் சூழல் காரணமாய் திருமணத்திற்காய் 1994ல் புலம்பெயர்ந்தார். புலம்பெயர்வின் பின் பூச்செடி மலர்களை ஏற்றுமதி செய்யும் ஒரு தொழிலகத்தில் விலைகள் ஒட்டித் தயார் செய்யும் பணி செய்தார்.

கணவர் திரு பரமானந்தன். ராம், அபிராமி என்னும் இரு பிள்ளைகள். புலப்பெயர்வின் பின் தமிழ்த் தாகத்தால் தமிழாலயத்தில் ஆசிரியையாக ஏறக்குறைய 25 வருடங்கள் பணி புரிந்தார். புலத்தில் உள்ள சஞ்சிகைக்களான மண், பூவரசு போன்றவற்றிலும் ஐபிசி தமிழ், லண்டந்த் தமிழ் லண்டந்த் தமிழ் வானொலி, பரிஸ் எபிசி வானொலி போன்றவற்றில் கவிதைகள், இசையும் கதையும், கட்டுரை போன்றவற்றை எழுதி வந்தார்.

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ஆரம்ப காலத்திலேயே இணைந்து உதவிச் செயலாளராகவும் பின்னர் காசாளராகவும் பணியாற்றினார். செயற்குழு உறுப்பினராக தற்போது தொடர்கின்றார்.

இப்போது முகநூல்த் தளங்களிலும் மின் இதழ்களிலும் பெரும்பாலா எழுதிக் கொண்டிருக்கின்றார். முகநூல் தளத்தில் இரண்டு முறை போட்டிக் கவிதையில் இந்தியாவின் பெரும் கவிகளுடன் இவர் கவியும் 2 முறை இந்திய ரூபாய் 1000 பெற்றது இவருக்கு மன மகிழ்வைத் தந்ததை நிறைவாய்க் கருதுகின்றார்.

இப்போது மரபுக் கவிதையைக் கற்று அதனையும் எழுதி வருகிறார். மேலும் சிறு கதை, கவிதை என இருநூல் களை வெளியீடு செய்திருக்கின்றார். இன்னும் இவரின் கவிதை, சிறுகதை நூல்கள் வெளியீடு செய்வதற்காய்க் காத்துகொண்டிருக்கின்றன.

மண்சஞ்சிகையின் ஆண்டு விழாக்களில் சிறுகதைக்கான முதல் பரிசினையும், கட்டுரைக்கான முதற் பரிசினையும் ,கவிதைக்கான பரிசுகளையும் பெற்றிருந்தார், மேலும் சிட்னி உதயசூரியன் சஞ்சிகை, இலங்கையிலிருந்து வெளிவரும் ஞானம் சஞ்சிகை, லண்டனில் இருந்து வெளிவரும் காற்றுவெளி போன்றவற்றிலும் எழுதி வருகின்றார்.

இன்றைய கொரொனா காலகட்டத்தில் இணைய செயலியூடாகக் கவியரங்கம் பட்டிமன்றம் போன்றவற்றில் கலந்து தமிழார்வத்தைப் பூர்த்தி செய்து வருகின்றார். இவர் தனது எழுத்துப் பணியின் நிறைவாக தமிழில் தன் மகன் ராம் கட்டுரை, கதைகளை எழுதிக் கொண்டிருப்பதை மிகப் பெருமையாகக் கருதலாம் என்கின்றார். தமிழோடு தனது பயணம் எப்போதும் தொடரும் என்பதை உறுதியாகவும் மகிழ்வோடும் கூறிக்கொள்கின்றார். தொடர்க உங்கள் தமிழ் பணிகள்.

**யேர்மன் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 12**

பெயர்:- மேரி அகஸ்தா ஜெயபாக்கியம் நடேசன்.

பிறப்பு:- நெடுந்தீவு - 05.02.1943

தந்தை:- ம.யோசவ் சின்னத்துரை - ஆசிரியர், ஆயுள்வேத வைத்தியர்

தாய்:- மேரி திரோசா அமிர்தம்.

கல்வி :- நெடுந்தீவு புனித சேவியர் பாடசாலை,
நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயம்,
நெடுந்தீவு திருக்குடும்ப கன்னியர் மகளீர் பாடசாலை
திருநெல்வேலி விவசாயப் பாடசாலை -1964
யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரி - 1965

18 வருடங்களாக மருத்துவ தாதியாக அனலைதீவு, யாழ்ப்பாணம், கண்டி, சங்கானை ஆகிய இடங்களில் சேவையாற்றிய அனுபவம் நிறைந்தவர்.
1980 ஆண்டளவில் ஆன்மீகக் கட்டுரைகள் தாயகத்தில் "சத்தியவேதப்

## யேர்மன் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 12


### திருமதி ஜெயா நடேசன்

முற்பக்கத்தொடர்ச்சி..

பாதுகாவலனில்" இடம்பெற்றது. யாழ் ஈழநாடு பத்திரிகையிலும் இவரின் பல ஆக்கங்கள் பிரசுரமாயின.

27.07.1986 ம் திகதி யேர்மனிக்கு புலம்பெயர்ந்தார்.

தற்போதைய வாழ்விடம் - ஹவிக்ஸ்பெக் ( Havixbeck )

இவர் எழுதிய நூல்கள் - 3

(1) "தாயகச் சமாதானம்" கவிதை நூல் சென்னை மணிமேகலைப் பிரசுர வெளியீடு. சென்னையில் கல்வெட்டில் பதியப்பட்டது. ஈழத்து சர்வதேச தமிழ் நூல்களின் பதிவு ஆவணமான "நூல் தேட்டம்" தொகுதி 1ல் 414வது பதிவாக இடம்பெற்றது.

(2) "அர்ச்சனை மலர்கள்" கவிதைத் தொகுப்பு 03.05.2004ல் யேர்மனியில் வெளியிடப்பட்டது.

(3) "ஜெயாவின் அறிவுக்களஞ்சியம்" (பொது அறிவு) லண்டன் தமிழ் வானொலி மூலம் "பொன்மாலைப் பொழுது" நிகழ்வில் 15.11.2014ல் யேர்மனியில் வெளியீடு செய்யப்பட்டது.

இவரது எழுத்துப் பணிகள் மீண்டும் யேர்மனியில் துளிர்விட்டதால் அப்போ வெளிவந்து கொண்டிருந்த “மண்”, “பூவரசு” சஞ்சிகைகள், “தொடுவானம்” “இளைஞன்” “தமிழருவி” பத்திரிகைகளிலும், பிரான்ஸ் T.R.T வானொலில் ஆரம்பகால எழுத்தாளராகவும் இருந்திருக்கின்றார்.

இந்த வானொலியில் இற்றைவரை காலை நற்சிந்தனை, இலக்கியம், கவிதை, போட்டி நிகழ்ச்சிகளில் எழுதி வருகின்றார். பல இலக்கியப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசுகளும் தங்கப் பதக்கங்களும் வென்றுள்ளார்.

யேர்மனி தமிழருவி பத்திரிகை 1994ல் நடத்திய கவிதைப் போட்டியில் "நெஞ்சம் இனிக்கிறதே", "பிரிவு பொய்யாகிப் போகாதே" என்ற தலைப்பில் கவிதை எழுதி தங்கப் பதக்கமும் சான்றிதழும் பெற்றிருந்தார். யேர்மனி "மண்" சஞ்சிகையின் 5, 7, 10, 15,வது ஆண்டுவிழாப் போட்டிகளில் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றவர். யேர்மனி "பூவரசு" சஞ்சிகையின் ஆண்டுவிழா கட்டுரைப் போட்டியிலும் பரிசு பெற்றார்.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் நடாத்திய கவியரங்கு நிகழ்ச்சியில் சான்றிதழ் பெற்றார். வண.தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு நினைவுதின விழாவில் பிரான்சில் நடைபெற்ற நிகழ்வில் கவிதைபாடி சான்றிதழ் பெற்றார். பன்னிரண்டு வருடங்களாக யேர்மனி முன்ஸர் நகரில் இடம்பெற்ற கிறிஸ்தவ ஒளிவிழாவை தனது கணவருடன் சேர்ந்து நடாத்தி ஆன்மீகப்பணிகளுடன் நிதிசேகரித்து தாயகத்துக்கான உதவும் பணிகளையும் மேற்கொண்டிருக்கிறார்.

லண்டன் தமிழ் வானொலி, பாமுகத் தொலைக்காட்சி...

1985ல் இந்த வானொலியுடன் ஆரம்பித்த தமிழ் எழுத்து, இலக்கியப் பணியானது இன்றுவரை தொடர்கின்றது. இந்த வானொலில் இவரின் கவிதைகள் 1.400 எழுதி ஒலிபரப்பாகிவிட்டன. இவற்றைவிட நற்சிந்தனைகள், ஆன்மீகச் சிந்தனைகள், படைத்து வருகின்றார். அறிவுக்களஞ்சியம், கேள்வியும் பதிலும் நிகழ்ச்சிகளின் தொகுப்பாளராகவும் இருந்து வருகின்றார். இவர் எழுதிய 33 பாடல்களை பாடகர் சுப்பிரமணியம் நடராசா என்பவரால் இசை அமைத்து பாமுக தொலைக்காட்சியில் வெளிவந்தன. இவர் 1000 கவிதைகளை எழுதி வானொலியில் ஒலி பரப்பானதைப் பாராட்டி சுவீஸ் நாட்டில் இடம்பெற்ற இந்த வானொலியின் "பொன்மாலைப் பொழுது" நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறு பல வெற்றிகளைப்பெற்ற தமிழ், இலக்கிய பயணத்தில் உற்ற துணையாக இருந்த தனது அன்புக் கணவர் காலம் சென்ற கந்தையா யூட் நடேசன் அவர்களையும் எப்போதும் நினைவுகொள்கிறார். அன்பான நான்கு பிள்ளைகளான ஆன் ஹேமாலினி (மருத்துவர்) ஆன் பிரேமாலினி (மருத்துவ தாதி) றெஜி நிசாந்தன் (அம்புலன் சேவை) ஆன் வினோலினி (பாடசாலை மேற்பார்வையாளர்) ஆகியோரின் அன்பும் அரவணைப்பும் நீடித்து

நிலைப்பதால்தான் இன்றுவரை இந்த வயதிலும் தமிழ், இலக்கியப் பணிகளைச் செய்யக்கூடியதாக இருக்கின்றது என்று பெருமையாக எடுத்துரைத்தார்.

Herne என்ற நகரத்தின் தமிழாலயத்திலும் இரண்டு வருடங்கள் தமிழாசிரியராக தமிழ்ப்பணியாற்றியிருக்கிறார். யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் கடந்த இருபது வருடங்களாக இருந்து வருகின்றார். "மண்" சஞ்சிகையில் வெள்ளிவிழா கண்ட மூத்த எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. யேர்மனி "மண்" சஞ்சிகை, லண்டன் தமிழ்வானொலி, பாமுகத் தொலைக்கட்சி, பாரிஸ் ரி.ஆர்.ரி வானொலி என இவரின் எழுத்துப் பணிகள் வானொலிப் பணிகள் தொடர்வதால் இவரை வாழ்த்துவதோடு பல்லாண்டுகாலம் நோய் நொடியில்லாமல் ஆரோக்கியமாக வாழ வாழ்த்தி நிற்கின்றோம்!.....









# திரு கந்தையா மயில்வாகனம்

எழுத்தாளர், சமூகத்தொண்டன்..

சாதனைத் தமிழன் "யாழ் ரத்னா" விற்கு பவளவிழா!..

75 வது பிறந்தநாள் வாழ்த்து!.. 31.03.2022

எழுத்தாளர், சமூகசெயற்பாட்டாளர், பன்முக ஆளுமைபடைத்தவர்!..

**40 லட்சம் + ஒரு கோடி ரூபா அன்பளிப்புக்கள்!..**

யாழ்-தென்மராட்சிப்பிரதேசம் நாவற்குழி கிராமசபைப் பகுதியின் சிற்றூரான தச்சன்தோப்பு கிராமத்தில் கந்தையா-கனகம்மா தம்பதிகளுக்குப் பிறந்த திரு மயில்வாகனம் அவர்கள் இன்று (31.03.2022) தனது எழுபத்தைந்தாவது பிறந்தநாளைக்(பவளவிழா) கொண்டாடுகின்றார். இவரை நாமும் வாழ்த்தி மகிழ்கின்றோம். இவர் யாழ்-நாவற்குழி மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவர்.

இவர் கடந்த பத்து வருடங்களில் பதினைந்து புத்தகங்களை எழுதி வெளியீடு செய்திருப்பது முதல்ச்சாதனையாக நாம் பார்க்கலாம். இன்றைய உலகத்தில் பல எழுத்தாளர்கள் பெயருக்கும் புகழுக்கும் பணத்துக்கும் எழுதுபவர்கள் மத்தியிலிருந்து வேறுபட்டு, தனது எழுத்துக்கும் செயற்பாட்டிற்கும் ஒருமித்த வழியில் பயணித்து வருபவர்தான் திரு மயில்வாகனம் ஐயா அவர்கள். அவரது கடந்த பத்து வருட செயற்பாடுகளை உற்று நோக்கினால் பல விடையங்களை நாமும் கற்றுக்கொள்ளலாம்.






### 40 லட்சம் ரூபா பெறுமதியான கந்தையா-கனகம்மா அறக்கட்டளை நிறுவனம்

"கற்பதனால் உயர்வோம் காலத்தை வெல்வோம்" என்னும் மகுடவாசகத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ள இவரின் கல்வி, சமூகப்பணிகள் பலவாறு விரிந்து காணப்படுகின்றன. காலம் சென்ற தனது தாய்-தந்தையரின் பெயரில் கந்தையா - கனகம்மா அறக்கட்டளை என்ற அமைப்பை 2007ம் ஆண்டு உருவாக்கினார். சகோதரர்களினதும் ஒத்துழைப்புடன் நாவற்குழி கிராமசபைக்கட்டிடத்தோடு அருகிலுள்ள காணியையும் வேண்டி மண்டபம் ஒன்றை சுமார் 40 லட்சம் ரூபா செலவில் கட்டி கந்தையா-கனகம்மா நிதியத்தின் பணிகள் 2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இப்பிரதேசத்திலுள்ள நாவற்குழி மகாவித்தியாலயம், கோவிலாக்கண்டி அ.த.க.பாடசாலை, கோவிலாக்கண்டி

### ஒரு கோடி ரூபா பெறுமதியான யாழ்-நாவற்குழி மகாவித்தியாலய பிரார்த்தனை மண்டபம்

கடற்கரை மகாவித்தியாலயம், மறவன்புலு சலசகலாவல்லி பாடசாலை, என ஐந்துபாடசாலை களைச்சேர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக அறநெறி வகுப்புகளை நடாத்தி வருவதுடன் இன்றுவரைஇலவசமாக கணனிவகுப்பு, யோகாசனவகுப்பு, அறநெறி வகுப்பு என மாணவர் களுக்கும் பொதுமக்களுக்கும் இலவசமாக வழங்கி வருகின்றார். இப்பாடசாலைகளில் கல்விகற்று சிறப்புச் சித்திபெறும் மாணவர் களையும் வறிய மாணவர்களையும் இனங்கண்டு வருடாவருடம் பரிசில்கள் வழங்கி அவர்களைச் சிறப்பித்து கௌரவித்து வருகின்றார். ஒவ்வொருவருடமும் வைகாசி மாதம் இந்த நிகழ்வு நடைபெற்றுவருவது வழக்கமாகும்.

அடுத்து க.பொ.த சாதரணஉயர் தரத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி மேலும் கல்வியில் உயரவைக்க விசேட பரிசுகளை வழங்கிக் கௌரவப்படுத்தி வருகின்றார். இப்பிரதேசத்திலிருந்து பல் கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுவரும் சுமார் 30 மாணவர்களில் 22 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்போல மாதாந்தம் நிதி உதவி செய்துவருகிறார். இதனால் இப்பிரதேச மாணவர்களின் கல்வி நிலை உயர்ந்துவருகின்றது. இதுவே கல்விச் செல்வத்துக்கு இவர் ஆற்றிவரும் பெரும் பணியாகவே கருதலாம். சிறப்பு.. மகிழ்ச்சி..

இப்பிரதேசத்தின் பல பகுதிகளை உள்ளடக்கி ஆரம்பபாடசாலை மாணவர்களின் கல்வி விருத்திக்காக தமது செலவில் பாடப்புத்தகங்கள், புத்தகங்கள், பாடசாலை உப கரணங்கள், பாடசாலை பைகள் என அன்பளிப்பாக வழங்கி வருகின்றார். இவர்களிலும் விசேடசித்தி பெறுபவர்களையும் வறிய மாண வர்களையும் அடையாளம்கண்டு பரிசுகள் வழங்கி கௌரவித்து வருகின்றார்.

இப்படியாக இவரின் கல்விப் பணிகள் பரந்து விரிந்து கல்வியில் தமிழினம் மேலும்உயர வேண்டும் என ஓயாதுஉழைத்து வரும் இவரின் பணிகளோ மலை போல உயர்ந்து காணப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தது போல தான் படித்த நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு 2019ம் ஆண்டு காலம்சென்றதனது மனைவி சாந்தகுமாரியின் பெயரில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியில் மணி மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடுத்த இந்த வள்ளலை யாவரும் பாராட்டுவோம். இன்று இந்த மண்டபம் அழகாக ஒளிவீசிக்கொண்டிருப்பதை நாம் கண்டு மகிழ்கின்றோம்.

அடுத்து இவர்இந்த அறக்கட்டளை ஊடாகப்பல சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார். நம் முதியோர்களே நமது சொத்து என்பதைக் கருத்திற் கொண்டு இந்தப் பிரதேசத்தில் 75 வயதைத்தாண்டி வாழ்ந்துவரும் முதியோரை வருடாவருடம் அழைத்து அவர்களுக்கு மாலை அணிவித்து, சிற்றுண்டி, உணவு, உடை வழங்கி, பரிசுகள் கொடுத்து, கௌரவப்படுத்தி வருகின்றார்.

மேலாக கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவ பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் இணைந்து தமது நிதியத்தின் நிதிப்பங்களிப்பால் வாராவாரம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மூலிகை இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தையும் செய்துவர, பல நோயாளிகளும் ஏனையவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். ”

"பசித்திருப்பவனுக்கு உணவளி " என்னும் நல்நோக்கத்தை நிறைவேற்றி வருவது சிறப்பான சமூகப்பணியாகும்.

இப்பிரதேசத்தை சகல துறைகளிலும் முன்னேற்றினால் மாவட்டம், நாடு என முன்னேறும் என்னும் நல் நோக்கில் நீண்டகாலம் கல்வி பொதுப்பணிகளை ஆற்றிவரும் திரு மயில்வாகனம் ஐயா அவர்களின் பணியைப் போல் இப்பிரதேசத்தில் இன்றுவரை ஒருவரும் செய்யவில்லை என்றே கூறலாம். இவர் கல்வி, சமூகப்பணிக்குரியவர் என்று நாம் மதிப்பிடமுடியாது. அதற்கும்மேலாக எழுத்துப் பணிகளிலும் தடம்பதித்து வருகின்றார். சுமார்பத்து வருடங்களில் பதினைந்து புத்தகங்களை தானே எழுதி வெளியீடுசெய்த பெருமைக்கும் உரியவரே.

5 சிறுகதைத்தொகுப்புகள், 9நல்வழி நூல்கள், உயிரெழுத்து அகராதி ஒன்று என 15 நூல்களை வெளியீடு செய்ததுடன் "ரௌத்திரம் பழகவேண்டும்" என்னும் நூலையும் தனது 75வது பிறந்த நாளில் (31.03.2022) வெளியீடு செய்துள்ளார். இதன் வெளியீட்டு விழாவும்அவரின் பணிகளைக் பாராட்டிச் சிறப்பிக்கும் பாராட்டு விழாவும் உதவிபெறும் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள்,பாடசாலை பழைய மாணவர்கள்,பாடசாலைச் சமூகம், மற்றும்சமூக நோக்காளர் களால் ஒன்றுகூடி 2.4.2022வியாழக் கிழமை அன்று அவருக்குவிழா எடுத்து மகிழ்விப்பதானது வாழும்பொழுதே எழுத்தாளர்கள்,கல்வியாளர்கள் ,சமூகச் செயற்பாட்டாளர்கள் கௌர விக்கப்படவேண்டும் என்னும் நல் நோக்கம் நிறை வேற்றப்படுவது சிறப்பான விடையமாகும் நாமும் பாராட்டி மகிழ்கின்றோம்.அவரால் எழுதப் பட்ட நூல்கள்..

**(சிறுகதைத் தொகுப்புகள்)**

**1-கனவு மெய்பட வேண்டும்**

**2-மெய்ப்பொருள் காண்பது அறிவு**

**3-நிறச்சட்டையும் நிர்மலா ஆசிரியரும்**

**4-நல்வழி**

**5-ரௌத்திரம் பழகல் வேண்டும்**

**6-உயிரெழுத்தில் அகராதி**

**7 - 15 வரை வருடாவருடம் "இளந்தளிர்" என்னும் 9 நூல்கள் வெளியீடு செய்துள்ளார்**

**மொத்தம் 15 நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன.**

தனிமரம் தோப்பாகாது என்று கூறுவார்கள் நம்மவர்கள். ஆனால் இங்கு இவர் தனிமரமாய் நின்று, அதாவது தனது குடும்பத்தவர்கள் மட்டும் நிதிப்பங்களிப்புச் செய்து, கந்தையா-கனகம்மா அறக்கட்டளை நிறுவனத்தை நிறுவி அதனை வழிநடாத்தி, கல்வி, சமூகம், எழுத்து எனப் பொதுப்பணிகள் செய்துவரும் இவரின் ஒட்டுமொத்த குடும்பத்தவர்களின் மனிதநேயப் பணிகளை நாமும் பாராட்டி நிற்கின்றோம். ஒரு அமைப்பு, ஒரு நிறுவனம், ஒரு சமூகம், ஏன்

அரசாங்கம் செய்யமுடியாத பல பணிகளை மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செய்துவரும் திருவாளர் மயில்வாகனம்ஐயா அவர்கள் தமிழர் வாழ்வியல் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்திருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும்.

திரு மயில்வாகனம்என்ற எழுத்தாளருடன் நான் பழகிய காலம் குறைவாக இருந்தாலும் அவரின் திறமை, நேர்மை, விடா முயற்சி, கடின உழைப்புக்கு நிகர் அவரேதான். சகல மட்டத் தினருடனும் இலகுவாகப்பழகும் இயல்புடையவர். நல்லசாந்த குணப்படைத்த இவர்அறிவுபூர்வ மாகவே பல செயற்பாடுகளையும் சிந்தித்துச் செயற்படும்ஒரு செயல்வீரன் என்றே நான் கருது கின்றேன். சமூக மாற்றத்திற்கான ஒரு போராளி, ஒரு எழுத்தாளன் என்றே நான் காண்கின்றேன். இப்படிப் பல ஆளுமைகள், திறமைகளைக்கண்ட இப்பகுதி கல்வியாளர்கள், நாவற்குழி மகா வித்தியாலய பழையமாணர் சங்கம், சமூக அக்கறையாளர்கள், " வித்தியரத்னா" போன்றபல பட்டங்களை வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளார்கள். மேலாகயாழ் பிரதேச செலயகத்தால் 2021ம் ஆண்டில் "யாழ் ரத்னா " விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது பெருமைக்குரிய விடையமாகும்.

இதுவரை பல கல்விமான்கள், பாடசாலைச் சமூகங்கள், பொது நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சமய தாபனங்கள் என இவரைப் போற்றி வாழ்த்திய அமைப்புகள் ஏராளம். அந்த வகையில் யேர்மனியில் கடந்த 32 வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும் "மண்" கல்வி, கலை, இலக்கி, சமூக சஞ்சிகை நிறுவனமும் இவரைப்பாராட்டி மகிழ்வதில் பெருமிதம் கொள்கின்றது.

திருவாளர் மயில்வாகம் ஐயா அவர்கள் ஆரோக்கியமாக நீண்ட ஆயுள்பெற்று மேலும் பல பணிகளையும் செய்ய எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக என வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

"சமூகமாற்றத்திற்கான நல்ல எழுத்தாளனும் ஒரு சமூகப்போராளியே" மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றோம்!... நன்றி வணக்கம்!...

**வைரமுத்து சிவராசா**
**பழைய மாணவன் யாழ்-நாவற்குழி**
**மகாவித்தியாலயம்**

# இலங்கைச் செய்திகள் சில...

8.3.22-மிகப்பெரும் சீமெந்துத் தொழிற்சாலை ஒன்றை அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி திறந்து வைத்தார்.
-வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் ஐந்து ஆண்டுகள் முற்றுப்பெற்று முடிவில்லாத போராட்டமாகத் தொடர்கின்றது.
12.3.22-இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழங்கியுள்ளது.
-பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற குறிப்பை பெண்களுக்கான தேசிய பாதுகாப்புக் குழு அறிவித்துள்ளது..

| | |
|---|---|
| 2016ல் - 8.418 சம்பவங்கள் | -2019ல் - 7.270 சம்பவங்கள் |
| 2017ல் - 8.466 ” | -2020ல் - 7.211 ” |
| 2018ல் - 7.824 ” | -2021ல் - 6.215 ” |

14.3.22-இலங்கையில் 2021ல் 285 யானைகள், 72 மனிதர்கள் பலியாகியிருப்பதாக வனபரிபாலத்திணைக்களம் அறிவித்துள்ளது.
-கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 25வது பட்டமளிப்புவிழா 12.3.2022ல் நடைபெற்றது.
15.3.22-இலங்கையின் தினகரன் பத்திரிகை 90 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது.
20.3.22-இந்தவருடம் தை, மாசி பங்குனி மாதங்களில் 434 வீதி விபத்துக்களால் 457 பேர் இறப்பு 861 பேர் காயம்.
-கடந்த 13 ஆண்டுகளின்பின் இலங்கையில் தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி தேயிலைச்சபை அறிவித்துள்ளது.
21.3.22-யாழ் மட்டுவிலில் பொருளாதார மத்திய நிலையத்தை பிரதமர் மகிந்தா திறந்து வைத்தார். காணாமல் போனோருக்கான ஆர்பாட்டம் ஒன்றை பெண்கள் அமைப்பு நடத்தினர்.
22.3.22-நாடுபூராகவும் தற்போது 20.000 சிறைக்கைதிகள் காணப்படுகிறார்கள் என்றும் இவர்களுக்கு ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு உணவுக்கு 1000 ரூபா செலவு ஏற்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.
24.3.22-பனாமா நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்திவரப்பட்ட 600 கோடிரூபா பெறுமதியான 350 கிலோ போதைப்பொருள் சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.
-போதைப்பொருள் குற்றங்களால் கடந்த ஆண்டில் 95.000 பேர் கைது செய்யப்பட்டதாக பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.
25.3.22-இவ்வருடம் தை, மாசி, பங்குனி மாதங்களில் 12.034 டெங்குநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டார்கள். சுகாதாரப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

28.3.22-கடந்த 54 வருடங்களின்பின் இரத்மலானையிலிலிருந்து வெளிநாடுகளுக்கான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
-யாழ் கலாச்சார மத்திய நிலையம் 1800 பில்லியன் ரூபா செலவில் இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.
29.3.22-கடந்த 2016 - 2021காலப்பகுதியில் நாட்டில் 31.810 சிறுவர் வன்முறை,45.404 பெண்கள் சம்பந்தமான முறைப்பாடுகள், 142 சிறுவர் கொலைகள் 7.758 சிறுவர் பாலியல் சம்பவங்கள், 499 பெண்கள் கொலை 14.023 பெண்கள் பாலியல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.
1.4.22-மலையகத்தில் நிலவும் வேலைவாய்ப்பின்மை, வறுமை, பொருளாதார நெருக்கடிகளால் 87.000 பேர் மத்தியகிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.
இலங்கைத் தமிழர்கள் கடந்த 3 மாதங்களில் 70 பேர்வரை கடல்வழியாகத் தப்பிச் சென்று தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.
18.4.22-அரசியல் நெருக்கடியோடு 20 பேர்கொண்ட புதிய மந்திரிசபை நியமனம்.

## உலகச் செய்திகள் சில..

8.3.22-ஹெட்டி நாட்டிலி படகு விபத்தில் 300 பேர்வரை பலியானார்கள்.
9.3.22-உக்ரைன்-ரஷ்ஷியப் போரால் இதுவரை 1.5 கோடி மக்கள் அகதிகள். 50 லட்சம் சிறுவர்கள் குழந்தைகளும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தஞ்சம்.
12.3.22-ஒரே நாளில் ஈரானில் 81 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.
15.3.22-உலகில் போதைப் பொருள் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் 1வது இடம் சிறுவர்கள் பெண்கள் உட்பட மொத்தம் 5 மில் பேர் இதற்கு அடிமை.
21.3.22 நீர்வழியாக ஆசியா - ஐரோப்பாவை இணைக்கும் உலகிலே மிகநீளமான தொங்குபாலம் (2.023 கி.மீ) துருக்கியில் திறந்து வைக்கப்பட்டது.
22.3.22-சீனாவில் எற்பட்ட விமானவிபத்தில் பயணம் செய்த 132 பேரும் பலி.
23.03.22-யப்பான் சனத்தொகையில் 70.000 பேர் 100 வயதைத் தாண்டியுள்ளனர். இதில் 88 வீதமானோர் பெண்களாவர்.
24.3.22-காற்று மாசடைதலில் பாதிக்கப்படும் முதல் 100 நகரங்களில் இந்தியாவில் 63 நகரங்கள் இடம்பிடித்ததாக ஐ.நா.சபை சுற்றுச்சூழல்அமைப்பு அறிவித்துள்ளது.
1.4.22-உலக மக்கள் தொகையில் சுமார் 200 கோடிபேர் அதாவது நான்கில் ஒரு பங்கினர் போர் நடைபெறும் நாடுகளில் வசிக்கிறார்கள் என ஐ.நா.சபை குறிப்பு.
-31.3.22 வரை உலக கொரோனா மரணங்கள் 62 லட்சம், பாதிப்பு 50 கோடி.
4.4.2022-மத்தியதரை கடல்வழியில் அகதிகள் படகு விபத்து 100 பேர் பலி.
-வடகொரியா ஜனாதிபதி கிம் ஏற்று 10 வருட விழா கொண்டாடப்பட்டது.

-பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் பதவி இழந்தார். புதிய பிரதமர் ஷெபாஸ் ஷெரிவ் பதவி ஏற்பு. இவர் முன்னாள் ஜனாதிபதி நவாப் ஷெரிப்பின் சகோதரர்.
7.4.22-ஆப்கானிஸ்தானில் பசி பட்டினி 90 லட்சம் மக்கள் பாதிப்பு. ஐ.நா. சபை அறிவித்துள்ளது.
15.4.22-தென்னாபிரிக்காவில் கடும் மழை வெள்ளம் 500 பேர்வரை பலி. 50.000 பேர் பாதிப்பு. 250 பாடசாலைகளும் அழிவு.
17.04.22-மியன்மாரில் கிராமம் ஒன்றை இராணுவம் தீ வைத்துக் எரியூட்டியதில் 100 பேர்வரை பலியாகியுள்ளனர்.
20.4.22-உக்ரைன் போரால் உலகில் சுமார் 170 கோடிபேர் வறுமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக ஐ.நா. அறிவித்தது.
24.4.22-நைஜீரியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 100 பேர்வரை பலியாகியுள்ளனர்.
24.4.22-பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் 58.2 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக வெற்றி பெற்றார் மைக்ரோன்.
27.4.22-ஒவ்வொரு ஆண்டும் உலகில் 24 கோடிபேர் மலேரியா நோயால் பீடிக்கப்படுகிறார்கள். 6.27 லட்சம் பேர்வரை இறப்பு. ஐ.நா. தெரிவிப்பு.
30.4.22-உக்ரைன் போரால் உலகளவில் 2024வரை உணவு மற்றும் பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலை ஏற்றமும் நிலவும் என உலக வங்கி எச்சரித்துள்ளது

---

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2022

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு : ரூபா 10,000/= இரண்டாம் பரிசு: ரூபா 5,000/= மூன்றாம் பரிசு: ரூபா 3,000/=
ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
போட்டிக்கான விதிகள் : சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும்.
போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும்.
தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
அனுப்ப வேண்டிய முகவரி: ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.
போட்டி முடிவுத் திகதி: 30.07.2022. முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது.

# யேர்மனியில் பிறந்து வளர்ந்த...






## பல்கலைக்கழக மாணவியின் முன்மாதிரி...
## செல்வி ஸ்ரெவ்வானி மகாலிங்கம் Obahausen- Germany

யேர்மனியில் பிறந்து வளர்ந்த ஸ்ரெவ்வானி இந்த வருடம் தனது பிறந்தநாளுக்குத் (3.4.2022) தாயகம் சென்று மாங்குளம் "நல்லாயன்" சிறுவர் இல்லம் , ( 25 - 30 பிள்ளைகள் ) 28.03.2022 இலும் திருகோணமலை "சிறீ சண்முகா" பெண்கள் இல்லத்திற்கு ( 15 - 20 பிள்ளைகள்) 29.03.2022 இலும் நேரடியாகச் சென்று அங்குள்ள பிள்ளைகளுடன் தனது பிறந்தநாளை கொண்டாடி மகிழ்ந்ததுடன் பெருமளவு நிதிப்பங்களிப்பையும் செய்து, அங்கு வசிக்கும் பிள்ளைகளுடன் கூடிக்குலாவி உண்டு களிப்புற்று ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கிறார். இங்கு பிறந்து வளர்ந்த ஸ்ரெவ்வானிக்கு எமது நாட்டைப்பற்றித் தெரியாவிடினும் பெற்றோரின் வழிகாட்டலில், மண் சஞ்சிகையில் வெளிவரும் விடையங்களைப் படித்தறிந்து தானும் இப்பிள்ளைகளுக்கு ஏதாவது செய்யவேண்டும் என முடிவெடுத்தார்.

இதற்காக கடச்த சில வருடங்களாகப் பல்கலைக்கழகப் படிப்போடு பகுதிநேரவேலையும் செய்து பணம் சம்பாதித்து சேமித்து வைத்திருந்த அப்பணத்தை நேரடியாகத் தாயகத்திலுள்ள இரண்டு இல்லங்களுக்கு பெருந்தொகைப் பணத்தை அள்ளிவழங்கி மனிதநேயக்கடமையைச் செய்துவிட்டு இந்தவாரம் 5.4.2022ல் யேர்மனிக்குத் திரும்பி வந்துள்ளார். இது ஒரு முன்மாதிரியான செயற்பாடு மட்டுமல்ல ஒரு முன்மாதிரியான மாணவியாகவும் திகழ்ந்திருக்கிறார். இவரின் சிந்தனையும் செய்பாடும் நல்ல விடையமே. இவரை நன்றியோடு பாராட்டுகின்றோம்.. அதற்குரிய நிழற்படங்களை இங்கே காணலாம்.




யேர்மனி ஓபகௌசன் நகரில் பிறந்து வளர்ந்தவர்தான் செல்வி ஸ்ரெவ்வானி. மண் சஞ்சிகையின் நீண்ட கால வாசகர்களும் தமிழ், சமயம், சமூகம் என ஆர்வலர்களாக வாழ்பவர்களுமான திரு, திருமதி மகாலிங்கம்- டொறின் தம்பதிகளின் செல்ல மகள்தான் செல்வி ஸ்ரெவ்வானி. இவர் இங்கு பிறந்து வளர்ந்து தமிழ்மொழியோடு யேர்மனியமொழி, ஆங்கிலம் எனக்கற்று தற்போது பல்கலைக்கழகத்தில் கற்றுவரும் மாணவியாவர்.

ஓபகௌசன் நகரில் கடந்த 33 வருடங்களாக இயங்கிவரும் "அறிவாலயத்தில்" தமிழ் கற்றுத் தேறியதுடன் பிரபல நடனக்கலைஞராகவும் விளங்குகின்றார். இவரும் இவரது சகோதரர் கபிலனும் சிறுவயது தொடக்கம் மண் சஞ்சிகையின் சிறுவர் பகுதியில் எழுதிவந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கவிடையமாகும். அது மட்டுமல்லாமல் வருடாவருடம் தமது பிறந்தநாளுக்காகப் பெருந்தொகைப் பணத்தை எமக்கு வழங்க நாம் அப்பணத்தை தாயக சிறுவர் இல்லங்களுக்கு அனுப்பி வருவதை வழமையாகக் கொண்டிருந்தனர்.

இக்குடும்பத்தவர்கள் மண் சஞ்சிகையோடு இணைந்து நீண்டகாலம் சேவை செய்துவரும் ஒரு முன்மாதிரியான குடும்பமாகவே நாம் கண்டுகொண்டோம். கருணை உள்ளத்தையும் மனிதநேயப் பண்புகளையும் கொண்டு பிறருக்குக் கொடுத்து உதவுவதில் என்றும் பாடுபட்டு உழைத்துவரும் ஒரு சிறந்த குடும்பமாகவே நாம் காண்கின்றோம். எமது சமூகப்பணிகளுக்கு நீண்ட காலம் கைகொடுத்து உதவிவரும் இக்குடும்பத்தவர்களை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம். செல்சி ஸ்ரெவ்வானிக்குப் பிறந்த நாள் வாழ்த்துகளுடன் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றோம்.

எனவே தமிழ் மாணவமணிகளே!..பல்கலைக்கழக மாணவ மணிகளே!..நீங்களும் செல்வி ஸ்ரெவ்வானியின் முன்மாதிரியைப் பின்பற்றி மனிதநேய உதவிகளைச் செய்ய முன்வாருங்கள் என அன்போடு அழைப்பு விடுகின்றோம்!.. நன்றி!.. பிரதம ஆசிரியர் - மண் சஞ்சிகை





**மண் சஞ்சிகையின் தொடர் பணியில்....**
**பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவரின் 50.000-00 ரூபா அன்பளிப்பு...**
**வாசகரின் முன்மாதிரியைப் போற்றுவோம்!..**

கடந்த 32 ஆண்டுகளுக்கும் மேலாக யேர்மனியில் வெளிவரும் "மண்" சஞ்சிகையானது கலை, இலக்கிய, எழுத்துப் பணிகளுடன் தாயகத்தில் அல்லல்படும் பலதரப்பட்ட மக்களுக்காகப் பல்வேறு உதவிகளைச் செய்துவருவதை நீங்கள் அறிவீர்கள்.

மேலும்.. என்மோடு நீண்டகாலம் தொடர்பில் இருப்பவரும் பெயர் குறிப்பிடாத எமது சஞ்சிகையின் லண்டன் வாழ் வாசக அன்பர் ஒருவர் சென்ற வாரம் தாயகம் சென்ற போது யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்திற்கு நேரடியாக விஜயம் செய்துள்ளார். அங்கு வாழும் பயனாளிகள் மற்றும் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி (50,000-00) ஐம்பதினாயிரம் ரூபாக்களை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டு எமக்குத் தொலைபேசிமூலம் யாழ்ப்பாணத்திலிருந்து அறிவித்தார். அந்த இல்ல நிர்வாகியும் எமக்கு மின்னஞ்சல் மூலம் இதை உறுதிப்படுத்தினார்.

எமக்குத் தெரியாமலே அன்பளிப்பை கொடுத்துவிட்டு பின்பு அறிவித்துத் தனது பரோபகார சிந்தனையை வெளிப்படுத்திய இந்த நல்லுள்ளத்தை மனமாரப் பாராட்டுகின்றோம். அதற்குரிய நிழற்படங்களையும் இங்கே காணலாம்.

இன்றைய தாய்நாட்டின் சூழ்நிலைகள் படுமோசமாகவே காணப்படுகின்றன. தாயகத்தின் பல இல்லங்களுக்கு இன்னும் பல உதவிகள் தேவைக்படுகின்றன. ஆகவே முடிந்தவரை உங்கள் ஆதரவுக்கரங்களை அன்போடு எதிர்பார்க்கின்றோம்!.. நன்றிகள்!..பிரதம ஆசிரியர் - மண் சஞ்சிகை -

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00

07. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00

11. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-03-2022 + 58-52

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

09. செல்வி காத்மி வரதராசன் -Düsseldorf +100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

--------------

+580-00 +580-00

-------------

+638-52

அனுப்பியது:-
"அருளகம்" சிறுவர் இல்லம் - வவுனியா - 480-00
(ரூபா 1.65.204-47சதம்)
(ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சிறுவர் இல்லம்)

மண் கணக்கு வங்கி வரி 01.03.2022 -31.3.2022 - 15-42
01.04.2022 -30.04.2022 - 12-37

--------------

- 507-79 - 507-79

---------------

30.04.2022ல் கையிருப்பு + 130-73

# ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
# ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
# Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 Fax:-0774868085 Farm No:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி ..../03/2022

திரு வைரமுத்து சிவராசா,

பிரதம ஆசிரியர்,

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

## நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்கள் சமூக நலன்நோக்கிய நற்சிந்தனையுடன் ஒழுங்கமைப்பு செய்த 48833.87 நிதி உதவியினை பயன்படுத்தி அமரர் மேரிநிரோசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு ஆதரவற்ற முதியோர்களிற்கு சிறந்த மதிய உணவினை வழங்கினோம் என்பதை பெருமகிழ்வுடன் தெரிவிப்பதோடு ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பான இதயபூர்வமான நன்றிகளையும் தெரிந்துக்கொள்கிறோம். தொடர்ச்சியாக தங்களின் இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக எமது சமூகம் நற்பயன்பெற்றுக்கொள்கிறது என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

---

# ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்
# Olirumvaalvu Organizaions - Thunukkai

Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com

T.P:021 206 0620

Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

**பற்றுச் சிட்டை**

திகதி 16 / 03 / 2022

பெயர்:- மண்சஞ்சிகை ஊடாக திரு [illegible], ஜேர்மனி தொ.இல

முகவரி:- லண்டன்

விபரம்:- முதலாம் ஆண்டு நினைவு நாளிற்காக, மகிழ்வு இல்ல [illegible]

தொகை எழுத்தில்:- நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று ரூபா எண்பத்து ஏழு சதம் மட்டும் பெற்றுக்கொண்டேன்.

ரூபா 48,833.87/=

பணம் வழங்கியவர் ஒப்பம்

1630

ஒளிரும்வாழ்வு அமைப்பு
துணுக்காய்

# இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
# Hindu Anpakam Children Development Center
# හින්දු ඇන්පකම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

பதிவு இல: NP/30/23/04/02
NEP/DS/V/SS/111
Reg No : HA/04/V/24

**இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்**
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity Rescue, Protect Them.

E – mail
hinduanpakam@gmail.com

2ம் கட்டை, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

தொ.இல : 0094 024-2223683
T.P. : 0094 0776143628

2nd Mile Post, Mannar Rd,
Veppankulam, Vavuniya.

President
Miss.K.Jeyarany

Vice Presidents
Mr.K.Kirupakaran
Mrs.S.Rajini

Secretary
Mrs.S.Niranjana

Treasurer
Mrs.T.Rathimalar

Asst Secretary
Mr.G.Srikantharajah

Board of Members
Mr.S.Sabanathan
Mr.T.Kurukulasingam
Mr.K.Uthayakumar
Mr.S.Santhirakumar
Mr.K.Kanesarajah
Mr.E.Tharmapalan
Mr.M.Jegan
Mr.S.Raveendran
Mrs.K.Santhirakala
Mrs.J.Thadsayini
Mrs.S.Nirmala

Patron
Mr.V.S.Thevarajah
Mr.Dr.Ramachchandran
Mr.S.Subramaniyam

Bank Account Details
092020254291
Hatton National Bank
Vavuniya.

Contact
0242223683
0776143628

E-Mail
hinduanpakam@gmail.com

வ.சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.

10.04.2022

அன்புடையீர்,

நாம் அனைவரும் இறைவன் ஆசியுடன் நலமுடனே உள்ளோம். தங்கள் நலத்திற்கும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம். அத்துடன் தாங்கள் அனுப்பிய நிதி உதவித்தொகை ரூபா 109,527.07னை நன்றியுடன் பெற்றுக்கொண்டோம். அதற்காக இல்ல நிர்வாகத்தினர் சார்பிலும், இல்லச்சிறார்கள் சார்பிலும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தாமதத்திற்கு வருந்துகின்றோம்.

தலைவர்
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்,
வேப்பங்குளம்,
வவுனியா.

இறந்தவர்களது குழந்தைகளை இருப்பவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them
**HINDU ANPAGAM**
Veppankulam, Vavuniya - Sri Lanka

T.P : 024-2223683

திகதி : 2022/03/08

திரு/திருமதி/செல்வி : "மண்" கலை இலக்கிய சமூக சஞ்சிகை - ஜேர்மனி

விபரம் : இல்லச் சிறார்களின் பராமரிப்பிற்கான நன்கொடை பெற்றுக்கொண்டமை.

நடைபெறும் திகதி : நூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூற்று இருபத்தேழு

பணம் ரூபா : ரூபாய் ஏழு சதம்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

ரூபா: 109,527.07/=

3231

இங்ஙனம்
பொருளாளர்

**Noolaham Foundation**
**நூலக நிறுவனம்**

NOOLAHAM FOUNDATION

2022.03.29

வணக்கம்,

கனம் சிவராஜா, வீ.,

## ஆவணங்களுக்கான நன்றிக்கடிதம்

தாங்கள் நூலக நிறுவனத்திற்கு எண்ணிமப்படுத்துவதற்கென மின்னஞ்சல் மூலம் அனுப்பிய ஆவணங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் ஆவணப்படுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும்.

- நூலக எண்ணிம வலைத்தளத்தில் (www.noolaham.org) நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், கோயில்மலர்கள், பாடசாலைமலர்கள், நினைவு மலர்கள், சிறுநூல்கள் என இதுவரை 90000 இற்கும் மேற்பட்ட வெளியீடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- பல்லூடக ஆவணக வலைத்தளத்தில் (www.aavanaham.org) ஒலிப்பதிவுகள், காணொளிகள், கையெழுத்துப்பிரதிகள், பத்திரிகை நறுக்குகள், புகைப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், கல்வி வளங்கள் என 21,000 க்கும் அதிகமான ஆவணங்கள் உள்ளன.
- எழுத்தில் வராத வரலாறுகள் எமது முன்னோருடனேயே அழிந்துவருகின்ற நிலையில் அவற்றை ஆவணப்படுத்துவதற்காக வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையத்தினைத் தொடங்கி இதுவரை 480 இற்கும் மேற்பட்ட பதிவுகளைச் செய்துள்ளோம்.
- சுமார் 3186 ஆளுமைகள் (கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், சமூக சேவையாளர் போன்றோர்களது) மற்றும் 1,723 நிறுவனங்கள் (நூலகங்கள், கோயில்கள், பாடசாலைகள்) தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டுள்ளன.
- இதுவரை 100,000 க்கும் அதிகமான ஏட்டுச் சுவடிப் பக்கங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- இவற்றினை விட சிறப்பு சேகரங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், பிராந்திய ரீதியான ஆவணப்படுத்தல் தனிநபர் சேகரங்கங்கள், மற்றும் மற்றும் கல்வி சார்ந்து இ பள்ளிக்கூடம் விழிப்புல வலுவிழந்தோருக்கான ஒலிநூல் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆவணமாக்கச் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.
- இத்தகைய செயற்பாடுகளை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுக்க நீங்கள் தொடர்ச்சியாக பங்களிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். எமது செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் எமது உத்தியோகபூர்வ வலைத்தளமான www.noolahamfoundation.org இல் விரிவாக உள்ளன. மேலதிக தகவல்களுக்கு noolahamfoundation@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடகவும் 0094 21 223 1292 என்ற தொலைபேசி எண்ணினூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

நன்றி

R. Pathmanaba Iyer

Director
Noolaham Foundation
No. 55, Somasundaram Road
Chundukuli, Jaffna
Sri Lanka

இ. பத்மநாப ஐயர்
நிறுவுனர்/ தலைவர்- நூலக நிறுவனம்

No 55, Somasundaram Lane, Chundukuli, Jaffna.
Phone: 0212231292 | Email: noolahamfoundation@gmail.com | www.noolahamfoundatiom.org

மண்
கல்வி, கலை, இலக்கிய, சமூக இதழ் &
தொண்டு நிறுவனம்

# கண்ணீர் அஞ்சலி

24.08.1956
யாழ் அரியாலை



13.03.2022
Eslohe - யேர்மனி

கண்ணீர் அஞ்சலி...
மீளாத்துயில்கொண்ட அருமை நண்பன்...
கிருஸ்ணா பரிமளராசா...
ஜேர்மனியில் வாழ்ந்த சமூக சிந்தனையாளன்...

யேர்மனியில் கடந்த நாற்பது வருடங்களாக வாழ்ந்த அருமை நண்பர் திரு பரிமளராசா அவர்கள் 13.03.2022 அன்று காலமானார் என்ற துயரச்செய்தி எம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

நண்பன் அவர்கள் பொறுமையானவர், நிதானமானவர், நேர்மையானவர் என்றும் பல நற்குணங்களைக் கொண்டவர். தமிழின் மீது அளவற்ற பற்றுக்கொண்டவர். வாசிப்புப் பழக்கம் மட்டுமல்லாது நிறையவே தேடல்கள்மூலம் அறிவை வளர்த்துக்கொண்டவர். கல்விப்பணி, பொதுப்பணி, ஆன்மீகப்பணி, விளையாட்டு, சமூகப்பணிகள் என்றால் முதன்மையானவர் வரிசையில் நின்று தொண்டாற்றிய பெருமகனாவர். இவரது மனைவி பிள்ளைகளும் தமிழுக்கும் தமிழ்கலைக்கும் உழைத்துவரும் முன்மாதிரியான குடும்பமே!

கடந்த நாற்பது ஆண்டுகளாக இவர் ஆற்றிய பணிகளோ ஏராளம். மிகச்சிறப்பானவையே. குறிப்பாக கொக் சவர்லண் பிரதேசத்தில் (Hoch Sauerland Kreis) பல தமிழ்ப்பாடசாலைகளின் உருவாக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியிருக்கிறார். பிரசித்திபெற்ற யேர்மனி கேவிலார் தேவாலயத்தில் வருடாவருடம் நடைபெறும் தமிழர் திருப்பலிப்பூசையின் கூட இவரின் பங்களிப்பு மெச்சத் தக்கதாக இருந்து வந்துள்ளது. மற்றும் யேர்மனி தமிழர் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம், யேர்மனி மண் சஞ்சிகை, யேர்மனி எசன் தமிழ்மொழிச்சேவை பாடசாலை, யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம், யேர்மனி தமிழ்க்கல்விச்சேவை போன்ற பல தாபனங்களுடன் இணைந்து மிக நீண்டகாலம் பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பண்பான மனிதன், மனிதநேயம்மிக்க பணியாளன் எம்மை விட்டுப்பிரிந்த செய்தியானது யேர்மனிவாழ் தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகவே கருதலாம். உமது பணிகள் என்றும் தமிழர் மனங்களில் நிலைத்துநிற்கும். அழியாப்புகழ் பெற்ற அற்புத நாயகனே நாம் தேடமுடியாத இடத்திற்குச் சென்றுவிட்டீரே!.. ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டுகின்றோம். துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவுகள் நட்புக்களுக்கும் ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்.

ஆண்டவன் திருவடியில் உம் ஆத்மா சாந்தியடையட்டும்!...

பிரதம ஆசிரியர், எழுத்தாளர்கள், வாசகர்கள்
மண் கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை
யேர்மனி - 23.03.2022



MANN ERDE e.V.

„MANN" (ERDE) e.V. &
Tamilisches E-Magazin

# கண்ணீர் அஞ்சலிகள்!..



கல்வியியல் பேராசான் சோ. சந்திரசேகரம் அவர்களின் மறைவு (04.04.2022) ஈழத்துக் கல்விப்புலத்தின் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம்,கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக் கழகம், தேசிய பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கல்வியியல்விரிவுரை யாளராக இவர் கடமையாற்றியுள்ளார். இறுதியாக கொழும்பு வளாகத்தின் துணைவேந்தராகப்பணியாற்றினார்.

தமிழ் இலக்கியத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்ட பேராசிரியருக்கு ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளுடன் நீண்டகாலத் தொடர்பு உண்டு. படைப் பிலக்கியக்காரரின் பணிகளை பெரிதும் மதிக்கும் பேராசிரியர்நூற்றுக்கணக்கான தமிழ்நூல் வெளியீட்டு வைபவங்களில் முக்கிய அதிதியாகவும் விமர்சகராகவும் முக்கியஉரையாற்றுபவராகவும் கலந்து கொள்வார். பேராசிரியரின் சிறப்புப் பணிகளுக்காக இலங்கை அரசு "வித்யா நிதி"என்ற கௌரவ ஜனாதிபதி விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.

இவரின் பிரிவால் வாடும் குடும்பத் தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர் களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.



"நடு" மின்னிதழின் ஆசிரியரும்,நடு பதிப்பக பணிப்பாளரும், எழுத் தாளருமாகிய கோமகன் என்று எழுத்துலகில் அழைக்கப்படுகின்ற, இராஜராஜன் தியாகராஜா கடந்த ஏப்பிரல் மாதம் 20ஆம் திகதி, தனது தாய் நாட்டுக்கான விடுமுறை பயணத்தை முடித்துகொண்டு, பிரான்ஸ் திரும்புவதற்குகொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் காத்திருந்தவேளை மாரடைப்பு ஏற்பட்டு, கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காமல் அமரர் ஆனார்.

இவர் சிறுகதை, பத்தி எழுத்து, நேர்காணல் ஆகிய துறைகளில் இயங்கியவர். சுறுக்கர் என்றபுனை பெயரிலும் எழுதியவர். "குரலற்றவரின் குரல்" இவர் வெளியிட்ட நேர்காணல் தொகுப்பு. கோமகனின்தனிக்கதை, முரண் ஆகியவை இவர் வெளியிட்ட சிறுகதைத் தொகுதிகள்.

கோமகனின் பிரிவால்வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர் களுக்கும் நண்பர்களுக்கும்ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

# தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள் விபரத்திரட்டு!... யேர்மனிய தமிழ்ப்பெண்களுக்கு அரிய வாய்ப்பு!..




யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல்இதுவரை காலமும் எவராலும் தயாரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லைஎன்பது துர்அதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள்,கல்விப்பணிகள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பணிகள்,சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும் தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின்கட்டாயாகும்.

யேர்மனியில் வாழ்ந்துவரும் தமிழ்ப்பெண்களில் பல பெண்கள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், இலக்கியவாதிகள்,பேச்சாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வகை ஆளுமை மிக்கவர்களாகக் காணப்படுவது சிறப்பான அம்சமாகும்.எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப்பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில்,ஆவணப்பதிவு ஒன்றைத்தயாரித்து நூலாக உருவாக்கும் பணியில் ஈடுபட்வருகிறோம்.

நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால் இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். காலம் தாழ்த்தாது விரைவாகத் தங்கள் தகவல்களை அனுப்பி உதவலாம்...
நன்றி!..


**திருமதி சாந்தினி துரையரங்கன்.** Essen - Germany.
மின்னஞ்சல் niruthiyam@hotmail.de "மண்"சஞ்சிகை" v.sivarajah@arcor.de

(இதுவரை (12) பன்னிரண்டு தமிழ்ப் பெண்களின் விபரங்கள் வெளிவந்துவிட்டன)












இலங்கையின் அரசியல், பொருளாதார வீழ்ச்சி
மக்கள் போராட்டம் 2022 சித்திரை மாதம்

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 213












தொடரும் (24.2.2022) உக்ரைன்- ரஷ்ஷியா போர் கட்டுக்கடங்காத மனிதப் பேரழிவுகளும் அகதிகளாக இடம்பெயர்வும் பொருளாதார இழப்புக்களும்


| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |